விலை 20.00

www.onlineuthayan.com




பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 68

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 19 வியாழக்கிழமை (02/02/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜெனிவாவில் சர்வதேசத்துக்கு பதிலடி கொடுக்க நாம் தயார்



## சவால் விடுகிறார் வெளியுறவுச் செயலர் கருணாதிலக

கொழும்பு, பெப்பரவரி 2

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எழுப்பப்படும் எந்தச் சவாலையும் எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். மனித உரிமை விடயங்கள் தொடர்பில் இலங்கையிடம் எழுப்பப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் உரிய பதில் எம்மிடம் உள்ளது. அங்கு அனைத்தையும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

இவ்வாறு சவால் விடுத்துள்ளார் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம.

ஜெனிவாவில் கொண்டுவரப்படும் பிரேரணையை எதிர்கொள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான விசேட குழுவினர் ஏற்கனவே தயாராகி விட்டனர் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

27

## குறிப்பிட்ட திகதிக்கு முன்னரே அமெரிக்காவுக்கு ஓடுகிறது அரசு

### பிரேரணையைத் தடுக்கப் பிரயத்தனம்

கொழும்பு, பெப்.2

அமெரிக்கா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை அரசு, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்றை நியூயோர்க்குக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகிறது.

வெள்ளைமாளிகை கொழும்புக்கு எழுதிய கடிதம் தொடர்பில் தமது உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் மந்திராலோசனை நடத்திய பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் மாதமளவில் அமெரிக்கா வருமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், குறிப்பிட்ட திகதிக்கு முன்னரே இலங்கைக்குழு அங்கு செல்வதற்கு உத்தேசித்துள்ளதெனக் கூறப்படுகின்றது.

ஜெனிவா மாநாட்டை இலக்கு வைத்தே இலங்கை இந்தக் காய்நகர்த்தலை முன்னெடுத்துள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறினாலும், இதுவிடயம் தொடர்பில் அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

இதேவேளை, ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேர

27

## ஈரான் மீதான தடை இலங்கைக்குப் பாதிப்பு

### எரிபொருள்களின் விலை உயரும்

கொழும்பு, பெப்.2

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆகியன ஈரானுக்கு எதிராக விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக உலக சந்தையில் எரிபொருள்களின் விலை உயரக் கூடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அது இலங்கையை நிச்சயம் பாதிக்கும் - என்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதார விவகாரங்களைக் கையாளும் சிரேஷ்ட பேராசிரியர் சுமணசிறி லியனகே நேற்றுத் தெரிவித்தார்.

ஈரான் - அமெரிக்க விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஈரான் மீது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தடை விதித்தாலும் அது அந்த நாட்டுப் பொருளாதாரத்தை ஆட்டம்காணச்

27

## பாதுகாப்புப் பற்றி ஆராய புதுடில்லியில் கோத்தபாய

புதுடில்லி,ஜன 2

இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ புதுடில்லி சென்றுள்ளார்.

இந்தியா - இலங்கை இடையில் ஆண்டுதோறும் நடைபெறும் பாதுகாப்புக் கலந்துரையாடல் புதுடில்லியில் நேற்று ஆரம்பமானது. இதில் கடலோரப் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் இந்து சமுத்திரத்தில் அனைத்துலக ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் பங்கேற்கப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

நேற்று புதுடில்லி சவுத் புளொக்கில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன்,வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய், இந்திய பாதுகாப்புச் செயலர் சசிகாந்த் சர்மா ஆகியோரை பாது

27

## இலங்கையைக் காப்பாற்ற மாலைதீவு கடும் முயற்சி

### மேற்கு நாடுகளுடன் சமரசப் பேச்சு

கொழும்பு, பெப்.2

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் மேற்குலக நாடுகளுடன் சமரசம் பேசும் முயற்சியில் மாலைதீவு மும்முரமாக ஈடுபட்டுவருவதாக இராஜதந்திர மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிராக மேற்குலகம் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு முஸ்தீபு செய்துள்ள நிலையிலேயே, இலங்கை விவகாரத்தை மாலைதீவு கையிலெடுத்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற முக்கிய சந்திப்பொன்றையடுத்தே, இலங்கை விவகா

27

## பறவைக் காய்ச்சல் அபாயம் குருநாகலில்

### 6 ஆயிரம் கோழிகள் அழிப்பு

கொழும்பு,பெப் 2

தென்பகுதியில் பறவைக்காய்ச்சல் நோயைப் பரப்பலாம் என்ற அச்சத்தில் பண்ணை ஒன்றில் இருந்த 6000 கோழிகள் நேற்று அழிக்கப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரியவில் உள்ள இந்தப் பண்ணையில் இருந்த கோழிகளுக்கு H5N2 வைரஸ் தொற்றியிருந்தது பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டதை

27

## புலிகளின் அரசியல் கட்சிப் பதிவை நீக்கியது தேர்தல் திணைக்களம்

கொழும்பு,ஜன 2

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபினால் உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ), தமீழீழ விடுதலை புலிகளினால் உருவாக்கப்பட்ட விடுதலை புலிகள் மக்கள் முன்னணி மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எவ்) ஆகிய கட்சிகளின் பதிவுகளைத் தேர்தல் திணைக்களம் நேற்றுப் புதன்கிழமை இரத்துச் செய்துள்ளது.

பதிவினைப் பாதுகாப்பதற்காக வருடாந்தம் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினாலேயே தேர்தல் ஆணையாளர் குறித்த கட்சிகளின் பதிவினை நிராகரித்துள்ளார்.

புதிய சட்டத்திற்கிணங்க அனைத்து அரசியல் கட்சிகளும் வருடாந்தக் கணக்கறிக்கையினை தேர்தல் திணைக்களத்திற்குச் சமர்ப்

27

### தமிழக மீனவரை விரட்டியடித்தது இலங்கைப் படை

கச்சதீவுக் கடல் அருகே மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் 600 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். வழக்கம் போல் கச்சதீவுக் கடற்பகுதிக்குள் செல்ல முயன்றமீனவர்களை, நள்ளிரவில் வந்த இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர். மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் பலர் தடைசெய்யப்பட்ட இரட்டைமடி வலையில் மீன்பிடித்ததால்தான் இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர் எனவும், இதனால் போதிய மீன்பாடு இல்லை என்றும் நேற்றுமுன்தினம் கரை திரும்பிய ஒற்றைமடி மீனவர்கள் தெரிவித்தனர்.

### ரயில்வே ஊழியர் பகிஷ்கரிப்பு முடிவு

ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்று மேற்கொண்டிருந்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்று மாலை முடிவடைந்தது. இப்பகிஷ்கரிப்புக் காரணமாக நாடு முழுவதும் ரயில்சேவைகள் ஸ்தம்பித்திருந்தன. எனினும் போக்குவரத்து அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் நடத்திய கலந்துரையாடலையடுத்து இந்தப் பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டது. ரயில்வே உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதாக இந்தக் கலந்துரையாடலின்போது அமைச்சர் உறுதியளித்தார்.

### வெள்ளவத்தை சந்தையை ஜனாதிபதி திறந்து வைத்தார்

கொழும்பு மாநகர சபையினால் வெள்ளவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை மற்றும் நான்கு மாடிகளைக் கொண்ட பொது வாகன தரிப்பிடம் ஆகியவற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்தார். கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் ,மாநகர எதிர்கட்சித் தலைவர் மிலிந்த மொறகொட ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### அளுத்கமைக்கு அதிவேக ரயில்

மாத்தறைக்கும் அளுத்கமைக்குமிடையிலான அதிவேக ரயில் சேவை இம் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ரயில் பாதை நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதே வேளை மாத்தறைக்கும் கொழும்புக்குமிடையிலான முழுமையான ரயில் சேவை ஏப்ரல் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் பி. ஏ. பி. ஆரியரத்ன குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களால் ஒதுக்கப்பட்ட கட்சிக்கு எப்படி நாங்கள் வாக்களிப்பது?

## வேலையற்ற பட்டதாரிகள் டக்ளஸிடம் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்.2

ஊர் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களை கொண்டிருக்கும் கட்சிக்கு எப்படி வாக்களிக்க முடியும்?

ஈ.பி.டி.பி கட்சியை இணைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டதனாலாயே வடக்கில் அரச கட்சி மண் கவ்வ வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தனர் யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள்.

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளில் சுமார் 300 பேர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று யாழ். நகரில் உள்ள அவரது அலுவலக முன்றிலில் சந்தித்தனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கில் அரசை வெற்றி பெறச் செய்திருந்தால் உங்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருமாறு கேட்க முடியும். அப்படி வெற்றி பெறுவதற்கு வாக்களிக்காத உங்களுக்கு வேலை பெற்றுத் தரவேண்டும் என எப்படி வற்புறுத்த முடியும் எனப் பட்டதாரிகளைப் பார்த்து அமைச்சர் டக்ளஸ் கேட்டுள்ளார்.

அதன்போதே பட்டதாரிகள் தரப்பில் இருந்து ஒருவர் அமைச்சருக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பெருமாள் கோயிலடியில் நேற்றுக் கூடிய வேலையற்ற பட்டதாரிகள் அங்கு கலந்துரையாடலை மேற்கொண்டுவிட்டு அமைச்சர் டக்ளஸின் அலுவலகத்துக் குச் சென்றனர்.

அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் உள்ள மர நிழலில் பட்டதாரிகள் அமைச்சரைச் சந்திக்கக் காத்திருந்தனர். வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி சகிதம் எங்கிருந்தோ வாகனத்தில் வந்து இறங்கினார் அமைச்சர்.

வேலையற்ற பட்டதாரிகள் 15000 பேருக்கு அரச நியமனம் வழங்கப்படவுள்ளது. அதில் 3000 பேருக்கு யாழ்ப்பாணத்தில் வழங்க வேண்டும். அதனைக் கேட்பதற்காக யாழ். வரும் ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு பட்டதாரிகள் அமைச்சரிடமும் ஆளுநரிடமும் கேட்டனர்.

நாடு முழுவதும் 85 ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்றிருக்க 3000 பேருக்கு யாழ்ப்பாணத்தில் நியமனம் வழங்குமாறு கேட்பது நியாயமற்றது. நீங்கள் வடக்கில் அரசை வெற்றியடையச் செய்திருந்தால் அப்படிக் கேட்பதை ஏற்க முடியும். என அமைச்சர் பதிலளித்துள்ளார்.

குடிகாரர்கள், மக்களால் அருவருக்கக்தக்கவர்களை கொண்டுள்ள உங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு எப்படி வாக்களிக்க முடியும். அரசு தோற்றதற்கு நாம் காரணம் அல்ல. உங்கள் கட்சியே காரணம் எனப் பட்டதாரிகள் தரப்பில் இருந்து அமைச்சருக்கு பதிலடி கொடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அமைச்சர் அங்கிருந்து வெளியேறிவிட்டார். ஆளுநர் பட்டதாரிகளைச் சமாளித்தார். (த-14-04-311-ரி)

# நிரந்தர நியமனம் இல்லையேல் தொடர்ச்சியான போராட்டம்

## வேலையற்ற பட்டதாரிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 2

நாட்டில் வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள 3 ஆயிரம் பட்டதாரிகளையாவது வேலை வாய்ப்புக்கு உள்வாங்கப்படவேண்டும். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டும். இல்லையேல் தொடர்ச்சியாகக் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என எச்சரித்துள்ளார் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் சங்கத் தலைவர் பாலசிங்கம் விஜயேந்திரன்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று பெருமாள் கோயில் முன்றிலில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

15 ஆயிரம் பட்டதாரிகள் நியமனங்கள் தொடர்பில் யாழ். மாவட்டத்துக்கு இதுவரையில் எந்தவிதமான தகவல்களும் வரவில்லை. யாழ். மாவட்டத்தில் 4 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். இவர்களின் நியமனங்கள் தொடர்பில் அரசு இதுவரையில் செவிசாய்க்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் நேரடியாக கலந்துரையாட வேண்டும். இதற்கான சந்தர்ப்பத்தினையும் நேரத்தினையும் ஏற்படுத்தித் தர வேண்டும். வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு 5 தடவை சென்றும் மகஜர் கையளித்தும் பதில் எதனையும் ஆளுநர் தரவில்லை.

வேலைவாய்ப்பினை விரைவாகப் பெற்றுத்தருவதாகக் கூறியபோதும், எந்த விதமான நகர்வுகளும் இதுவரையில் நடைபெறவில்லை. இதனால் நாம் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து எமது பிரச்சினைகளைத் தெரிவிக்கவுள்ளோம். அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படவேண்டும் - என்றார். (த-311-ரி)



மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மூன்றாவது தடவையாகவும் ஆளுநராக பதவியேற்றுள்ளார்.80 வயதான அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை அலரி மாளிகையில் வைத்து சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.ஆறாவது மேல் மாகாண ஆளுநரான இவர் 2002ஆம் ஆண்டு முதல் மேல் மாகாண ஆளுநராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது (த)

# காரைநகருக்குப் பிரதமர்

காரைநகர், பெப். 2

யாழ்ப்பாணத்துக்கு நாளை வெள்ளிக்கிழமை வருகை தரும் பிரதமர் டி.எம்.ஜயரட்ண மாலையில் காரை நகருக்கும் செல்கிறார்.

காரைநகர் செல்லும் அவர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதுடன் கோசாலைக்கான அடிக்கல்லையும் நாட்டுவார்.

பின்னர் காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பூசையில் கலந்துகொள்ளும் அவர் மகேஸ்வரன் தர்ம சுரபி மண்டபத்தில் இடம் பெறும் நிகழ்வு ஒன்றிலும் கலந்து சிறப்பிப்பார். (த-250)

# சட்ட விரோத மின்சாரம் பெற்றவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 2

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 876 ரூபா நஷ்ட ஈட்டுத்தொகையை மின்சார சபைக்குச் செலுத்துமாறும் அபராதமாக பத்தாயிரம் ரூபாவை நீதிமன்றுக்குச் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கொழும்பிலிருந்து வந்திருந்த மின்சார சபை அதிகாரிகள் அரியாலை, கல்வியங்காடு மற்றும் உரும்பிராய் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனையை மேற்கொண்டு 27 பேரை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

அவர்களில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். ஏனைய 26 பேருக்கும் அபராதமாக இரண்டு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையாக 22 லட்சத்து 74 ஆயிரத்து 958 ரூபாவையும் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 876 ரூபாவும் நஷ்ட ஈட்டுத் தொகையாக செலுத்த நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

# வாகனச் சாரதி மாட்டினார்

ஆபத்தான முறையில் வாகனத்தை ஓட்டிச் சென்ற கரவெட்டி வாசிக்கு யாழ். நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்தது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் ஓட்டிச் சென்றபோதே சந்தேக நபருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

# நல்லூர் முருகேசர் வீதி புனரமைப்பு எப்போது?

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ். மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் ஆயிரம் கோடி ரூபாவில் தமது வீதியும் புனரமைக்கப்படாதா என ஏங்குகின்றனர் நல்லூர் முருகேசர் வீதி மக்கள்.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட நல்லூர் முருகேசர் வீதியில் ஐம்பதுக்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்த வீதியில் பல தொழில் நிறுவனங்களும் இருக்கின்றன. ஆனால் இந்த வீதி போர்க் காலத்தில் பாதிக்கப்பட்டு குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

மழை காலத்தில் பாடசாலை மாணவர்கள் இந்த வழியிலே செல்லவே முடியாது சீருடைகள் எல்லாம் சேறுடைகளாகி விடுகின்றன.

இந்த வீதிக்கு தெரு விளக்குகளும் இல்லை. ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் இயங்காமையினால் யாழ். மாநகர சபையினர் அவற்றை கழற்றிச் சென்றுள்ளனர். இரவு வேளைகளில் இருள் மண்டிக் கிடப்பதால் திருடர் பயமும் அதிகரித்துள்ளது.

பல வருடங்களாக திருத்தப்படாமல் இருக்கும் இந்த வீதியை திருத்தித் தரும்படியும் மின் விளக்குகளைப் பொருத்தும் படியும் இந்தப் பிரதேச மக்கள் யாழ். மாநகர முதல்வரிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் அவர் பாராமுகமாகவே இருக்கிறார்.

குழிகளில் நீர் தேங்கி இருப்பதால் டெங்கு நோய் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. பொது சுகாதார பரிசோதகர்களும் வருவதில்லை.

இதனால் தமது கடைசி முயற்சியாக இங்கு வாழும் மக்கள் (50 குடும்பங்கள்) கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை யாழ். மாநகர முதல்வரிடம் கையளித்துள்ளனர். ஆனாலும் சாதகமான பதில் இல்லை என இப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இப்பொழுது யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இப்பணத்திலாவது எமது வீதி திருத்தப்படாதா என ஏங்குகின்றனர் நல்லூர் முருகேசர் வீதி மக்கள். (த-2)

# டோகோவில் 200 தமிழர் கைது பின்னணியில் கனேடிய அரசு

கொழும்பு, பெப்.2

கனடாவுக்கு அகதிகளாக செல்வதற்காக காத்திருந்த 200 தமிழர்கள் டோகோ நாட்டில் கைது செய்யப்பட்டதன் பின்னணியில் கனேடிய அதிகாரிகளே இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் அகதிகள் கனடாவுக்குள் வரும் முயற்சிகளை டோகோ அதிகாரிகளுடன் இணைந்து கனேடிய அதிகாரிகள் முறியடித்ததாக கனேடிய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த விடயத்தில் டோகோ அரசுடன் கனேடிய அரசு மிகநெருக்கமாக இணைந்து பணியாற்றுவதாக தனது பெயரை வெளியிட விரும்பாத கனேடிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

[illegible] குடிவரவுத்துறை அமைச்சர் ஜாசென் கென்னியின் செயலகப் பேச்சாளர் ஒருவர், ஆள்கடத்தல்களை மேற்கொள்வோர் கனடாவின் குடிவரவு முறைக்கு ஆபத்தாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அகதிகள் படகுகளை தடுப்பதற்கு எமது அரசு எல்லாவிதமான அதிகாரங்களையும் பயன்படுத்தும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

கனடாவுக்கு கப்பல் மூலம் செல்வதற்காக காத்திருந்த ஈழத்தமிழ் அகதிகள் 200 பேர் வரை டோகோ நாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் இருந்து மும்பை சென்று, அங்கிருந்து எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபா சென்று, அதன் பின்னர் டோகோவின் தலைநகர் லோம் வந்து சேர்ந்தனர். வருகை நுழைவிசைவில் விமானம் மூலம் வந்த இவர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்த போது கைது செய்யப்பட்டனர். இவர்கள் டோகோவில் இருந்து கானாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கனடாவுக்கு கப்பலில் ஏற்றி அனுப்புவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தனர்.

டோகோ தலைநகர் லோமில் உள்ள திறந்தவெளி விளையாட்டு அரங்கு ஒன்றில் இராணுவப் பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த தமிழ் அகதிகள் தாம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 24ஆம் திகதி டோகா நாட்டில் தங்கியிருப்பதற்கான நுழைவிசைவு காலாவதியான நிலையில் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், சுயவிருப்பின் அடிப்படையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லாதவிடத்து கட்டாயமாக நாடுகடத்தப்படும் நிலை ஏற்படும் என்று தாம் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் பிபிசியிடம் கூறியுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள 200 தமிழர்களில் பெரும்பாலானோர் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். தம்மில் பலர் இறுதிப்போர் நடந்த முள்ளிவாய்க்காலில் இருந்தவர்கள் என்றும், கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் தடுத்து வைக்கப்படுள்ள ஒருவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனித உரிமைகள்; எடுப்பார் கைப்பிள்ளை நிலையில்...!

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவர் - ஆணையாளர்களில் ஒருவர் - தமது பதவியை விட்டு விலகி உள்ளார்; ராஜினாமா செய்துவிட்டார். அவர் தமது பதவி விலகலுக்கு தெரிவித்துள்ள காரணம், நல்லாட்சியை, அப்பழுக்கற்ற நிர்வாகத்தை விரும்பும் எவரையும் ஈர்க்க வல்ல ஒன்று.

பக்கச்சார்பற்ற விதத்தில், நியாயமான முறையில், அச்சமின்றி, நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சுதந்திரமான நிலைமை ஆணைக்குழுவுக்குள் இல்லை என்பதாலேயே தமது பதவியை விட்டு விலகவேண்டிய கட்டாயம் உண்டாகியதாக கலாநிதி ஆனந்த மெண்டிஸ் தமது உள்ளத்தைத் திறந்து கூறியுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தாம் பதவி விலகவில்லை என்றும், மனித உரிமை ஆணைக்குழுவின் கொள்கைத் திட்டங்களுக்குப் புறம்பாக, அங்கு அலுவல்கள், சம்பவங்கள் இடம்பெறுவதாலேயே, தாம் ஆணையாளர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் பிரஸ்தாப ஆணைக்குழுவில் தாம் இணைந்து கொண்டாலும், நிறுவப்பட்ட இலக்குக்கு அமைவாக இயங்கமுடியாதவாறு, பல்வேறு இடையூறுகள் தமக்கு இருந்ததாகவும், அவை குறித்து ஜனாதிபதிக்குத் தெரிவித்த பின்னரே பதவி விலகல் தொடர்பாக அறிவித்ததாகவும் விவரித்திருக்கிறார் கலாநிதி மெண்டிஸ்.

இன, மதம் பாராட்டாது, பாரபட்சம் காட்டாது அனைவரையும் சமமாக மதித்தே தாம் பணியை முன்னெடுத்து வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனநாயகத்தின் பிரதான தேவைகளில், மக்களுக்குரிய மனித உரிமைகளை, ஊறு எதுவும் இன்றி அவர்கள் அனுபவிக்க - தொய்வின்றி அனுபவிக்க - வகை செய்யப்பட வேண்டியது அரசாங்கத்தின் மிகத் தலையாய, பிரதான பொறுப்புகளில் ஒன்று.

மக்கள் சேர்ந்து வாழ்வது தான் நாடு. அதனால் அவர்களுக்கு உரிய மனித உரிமைகளை, பாகுபாடின்றியும், வேறுபாடு இன்றியும், முழு அளவில் அனுபவிக்க வகை செய்வதும், அவற்றை எவரும் சீண்டாதிருக்கப் பார்த்துக் கொள்வதும் அரசாங்கத்தின் பிரதான கடமைகளில் ஒன்று.

அதனை உரிய கட்டமைப்புக்குள் வைத்திருக்க வேண்டுமெனில், ஆட்சிப் பொறுப்பில் உள்ளோரும், அரசின் அங்கங்களும், மக்களின் மனித உரிமைகளைப் பேணுவதிலும், மீறாது இருப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பது இன்றி அமையாதது. அதிலிருந்து ஓர் அங்குலமும் அரக்கக் கூடாது.

எமது நாட்டில் சர்வதேச மனித உரிமை விதிமுறைகள் உரிய வடிவங்களில் பேணப்படுகின்றனவா, மக்கள் அவற்றைப் பிசிறின்றி அனுபவிக்க வகை உண்டா, என்பன எப்போதுமே கேள்விக் குறிகளாகவே உயர்ந்து, வளர்ந்து நிற்கின்றன. அதன் நிமித்தம், அரசினால் நிறுவப்பட்ட சுதந்திர அமைப்பாகப் பேணப்படும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிசெய்வதில் பிரதான வகிபாகம் உண்டு.

மிகக் குறிப்பாக, போர் நடைபெற்ற மிக நீண்ட காலப் பகுதியில் அரசாங்கத்தின் அங்கங்கள் பலவும் வெளிப்படையாகவே மக்களின் மனித உரிமைகளை எவ்வித தயக்கமும் இன்றி மீறின என்பது நிதர்சனமானது.

அதனால், மனித உரிமை ஆணைக்குழுவை சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் இயங்கும் அமைப்பு என்ற மனதுடனேயே மக்கள் நோக்கினார்கள், நாடினார்கள். ஆனால் கலாநிதி ஆனந்த மெண்டிஸ் வெளியிட்டிருக்கும் கருத்துக்களும், அவரது மன நோவும், மேற்படி ஆணைக்குழு மக்களுக்காக அல்ல, அதில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளின் இலக்குகளையும் இச்சைகளையும் ஒட்டியே, செயற்படுகின்றது என்பதனைப் புட்டுக்காட்டுவதாக உள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையை ஆண்ட அரசுகள், மக்களின் மனித உரிமைகளுக்குப் போதிய மதிப்பும், வேண்டிய பாதுகாப்பும் வழங்கியதாகக் கொள்ளமுடியாது. மாறிமாறிப் பதவிக்கு வந்த இரண்டு பிரதானகட்சிகளும் அவற்றின் அரசுகளும் மனித உரிமைகளை அக்கறையுடன் பொருட்படுத்தி, அவை மீறப்படாமல் இருப்பதில் போதிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டதற்கான பெருமைப்படத்தக்க பதிவுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

தமது ஆட்சியையும் அதிகாரங்களையும் தக்க வைக்க வேண்டும் என்ற அபரிமிதமான அவாவினால், பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு விடும் என்ற சில்லறை நினைப்புடன், அவை செயற்பட்டு வந்தன. இப்போதும் அவ்வாறே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

போர்க் குற்றங்கள் என்ற மலைத் தொகுதி தன்மீது விழுந்த பின்னரே, மனித உரிமைகளைப் பேணுவதில் நிகழ் காலத்திலேனும் தீவிர அக்கறை கொள்வதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத தேவை அரசுக்கு எழுந்தது. போர்க் குற்றங்கள் என்பன மிகக் கனத்த மனித உரிமை மீறல்களின் உருண்டு திரண்ட வடிவம் என்பதனை உணர்ந்த பின்னர், அவை வேண்டுமென்றே ஊதிப் பெருப்பிக்கப்பட்ட திரள்கள் என்று தெரிவித்து தப்புவதற்கான முயற்சிகள் அசுர வேகத்தில் நடந்தேறுகின்றன.

இத்தகைய நெருக்கடிக்குள்ளும் உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழுவை, மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்பட வைப்பதில் மனமார்ந்த விருப்பமும் அக்கறையும் இல்லாத ஒரு தரப்பிடம் இருந்து, மக்களுக்குரிய ஏனைய உரிமைகள் அப்பழுக்கின்றிக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு?

மனித உரிமை மீறல்கள் சர்வதேச மயப்பட்ட ஒன்றாகும். அது விடயத்திலேயே போலித்தனம் இல்லாமல், நிஜ வடிவம், உண்மைத் தன்மை, தாராண்மை காட்ட நினைக்காத அரசும், அதன் அங்கத்தவர்கள், தீவிர ஆதரவாளர்கள் மற்றும் பலவகை அணிகளும் -

உள்நாட்டில் மனித உரிமைகள் மேலெழுச்சியாக, மேம்பாடுறச் செயலாற்ற வேண்டும் என்று உணர்வு பூர்வமாக, மனதாரச் செயற்படும் என்று எதிர்பார்ப்பது, எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விடும் நிலைக்கே இட்டுச் செல்லும். கூட்டிக் கழித்துப் பார்த்தால் மனித உரிமைகள் இன்று இந்நாட்டில் எடுப்பார் கைப்பிள்ளை நிலையிலேயே!

### பல்கலை கல்விசாரா ஊழியர் சங்கங்கள்

# சம்பள முரண்பாடு குறித்து ஆணைக்குழுவுடன் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், பெப்.2

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்மேளனங்களின் கூட்டுறவுக்குழு இன்று சம்பள நிர்ணய ஆணைக்குழுவை சந்திக்கவுள்ளது என அனைத்துப் பல்கலைக்கழக சம்மேளனத் தலைவர் ஆர்.எம்.சந்திரபாலா தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கக் கோரி கடந்த 26 ஆம் திகதி நடத்தப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தை அடுத்து இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீர்வு கிடைக்கவில்லை என்றால் முதலாம் திகதி முதல் தொழிற்சங்கப் போராட்டம் மேற்கொள்ளுவதாக கல்விசாரா ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்திருந்தது. எனினும் இரு தரப்பினருக்கும் இடையில் இன்று சந்திப்பு நடைபெற உள்ள நிலையில் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சந்திப்பில் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கிடைக்கவில்லை எனில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம் என்று தொழிற்சங்கம் கூறி உள்ளது. (உ - 311- ரி)

# வேலையற்ற இளைஞர் விவரப் பதிவு நல்லூரில்

யாழ்ப்பாணம், பெப்.2

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளிடையே தொழில் வாய்ப்புக்கள் பெறக்கூடிய ஒரு நடவடிக்கையாக தொழில்தேடுவோர் குறித்த விவரங்களைத் திரட்ட, நல்லூர் பிரதேச செயலர் பணிமனையூடாக அப்பகுதியில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் தங்களைப் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வண்ணார் பண்ணை ஜே/97, ஜே/100 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இன்றும் நாளையும் காமாட்சி சனசமூக நிலையத்தில் காலை 9.30 மணி முதல் பி.ப. ஒரு மணிவரையும் பதிவு செய்யலாம்.

நல்லூர் ஜே/101, ஜே/109 பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பி.ப. 7 மணி வரை நல்லூர் பிரதேச செயலகத்திலும், திருநெல்வேலி ஜே/110, ஜே/114, ஜே/122 பிரிவைச் சேர்ந்தவர்கள் பழைய பிரதேச செயலக கட்டடம் பலாலி வீதியில் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பி.ப ஒரு மணி வரையும், கோண்டாவில் ஜே/115, ஜே/120 பிரிவைச் சேர்ந்தவர்கள் 16, 17, 21 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் பி.ப ஒரு மணி வரை இல. ஜே/117 பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிராம அலுவலர் பணிமனையிலும், கொக்குவில் ஜே/121, ஜே/123, ஜே/128 பகுதிகளைச் சேர்ந்தவர்கள் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை காலை 9.30 - பி.ப ஒரு மணி வரை கேணியடி சனசமூக நிலையத்திலும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-7)

**வேலையற்றோரின் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாகவும் அவர்களுக்குத் தகுதியான வேலைகளை பெற்றுக் கொடுத்து உதவவும் இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளன.**

## இந்தியக் கலைஞரின் நாட்டிய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.2

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் 68 ஆவது பிறந்தநாளை நினைவு கூரும் முகமாக நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையினால் நாட்டிய நாடக நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரும் ஞாயிறு 5 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வினை இந்தியாவைச் சேர்ந்த பிரபல கதகளி நர்த்தகி மாயா கிருஷ்ணாராவ் வழங்குகிறார்.

புது டில்லியை வசிப்பிடமாகக் கொண்டுள்ள மாயா கிருஷ்ணாராவ், ஒரு நடிகை, இயக்குநர், கல்வியாளர் மட்டுமன்றி அரங்கியல் விற்பன்னருமாவார்.

மாதவ மாணிக்கர் மற்றும் சதானம் பாலக்கிருஷ்ணன் ஆகிய குருக்களிடம் கதகளி கற்றுத்தேர்ந்த அவர் டில்லி ஜவஹர்லால் பல்கலையில் அரசியலும் ஐக்கிய ராஜ்யத்தின் லீட்ஸ் பல்கலை யில் கலையியலும் கற்றவர்.

'ராவணாமா'எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நிகழ்வு ராமாயணத்தில் வரும் ராவணனின் வாழ்வியலைச் சுற்றிச் சூழல்வதாகப் பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவதை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் விசேட கலந்துரையாடலொன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இன்னும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்கள், மீளக் குடியமர்த்தப்பட்டவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும், கடற்றொழில் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டிய இடங்கள் தொடர்பாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அடையாளப்படுத்தி வரைபடங்களை பிரதேச செயலர்கள் உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் மேலும் அரச காணிகள் கோயிற் காணிகள் என்பவற்றை அடையாளப்படுத்தி சமர்ப்பிக்குமாறும் பிரதேச செயலர்களை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல் மற்றும் உள்ளூர் மீனவர்கள் சிலர் இழுவைப் படகுகளையும் பயன்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ள அதேவேளை இறால், நண்டு வளர்ப்புகளை அதிகரிக்கும் முகமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் மரநடுகையை ஊக்குவிக்கும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் , அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் , தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோருடன் பிரதேச செயலர்களும் கலந்து கொண்டனர். (வ-15)

**மீள்குடியமர்வு தொடர்பான பிரச்சினைகள், கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பன இதன்போது ஆராயப்பட்டு தீர்வுகாணப்பட உள்ளது. இதுதவிர வேறு சில அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஆலோசனையும் இடம்பெறும்.**

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எதிர்காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்களின் ஊக்குவிப்பு தொடர்பாகவும், கூட்டுறவின் வியாபாரத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. என யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார். (ச-311)

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/ 62 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் பங்கு கொள்ளும் கிராம அபி விருத்தி திட்டமிடல் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு ஜே/ 62 கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு அப்பகுதி மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை எதிர்கொண்டு முதலிடச் சாதனை

## பூநகரிப் பிரதேச செயலர் பெருமிதம்

அக்கராயன், பெப்.2

நிர்வாக ரீதியாக முதலிடம் பெற்றமை மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்வாக ரீதியாகப் பூநகரிப் பிரதேச செயலகம் கடந்த ஆண்டு முதலிடம் பெற்றமை தொடர்பாகவே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தொடக்கவுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**மீள்குடியமர்வு உள்ளிட்ட பல செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றோம். கிடைக்கின்ற வளங்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகள், சவால்களுக்கு மத்தியில் ஏதோவொரு வகையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.**

மீள்குடியமர்வு உள்ளிட்ட பல செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றோம். கிடைக்கின்ற வளங்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகள், சவால்களுக்கு மத்தியில் ஏதோவொரு வகையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

பொது மக்களுக்கான பணிகளை எளிமையான முறையில் நிறைவேற்றி வருகிறோம். பல வசதியீனங்கள் நிலவிய போதிலும், கடந்த ஆண்டில் எமது மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் நிர்வாக ரீதியான செயற்பாட்டின் அடிப்படையில் பூநகரிப் பிரதேச செயலகம் முதலிடம் பெற்றுள்ளமை மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றது. எமது மக்கள் பணி தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-410)

## வீடமைப்புக் கடன்

கிளிநொச்சி, பெப்.2

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 'ஜனசெவன' வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழேயே இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்கள் உயர்ந்த பட்சமாக 5 லட்சம் ரூபா வரையும், ஏனையோர் 2 லட்சம் ரூபா வரையும் வீடமைப்புக் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இந்தத் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு, அதன் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## பிரச்சினைகளுக்குள் திணறும் பிரதேச சபை

மன்னார், பெப்.2

மன்னார் நானாட்டன் பிரதேச சபையில் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள அதிகாரிகள் சிலர் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபை உறுப்பினர்களையும், உப- தலைவரையும் மதிக்காது நடந்து கொள்வதாகவும், பிரதேச சபையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர் ஒருவரினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதாக்வும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வேலைத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் அந்த ஊழியருக்கே வழங்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது. இதனால் ஏனையவர்கள் ஏமாற்றமும், விசனமும் அடைந்துள்ளனர்.

**வேலைத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் அந்த ஊழியருக்கே வழங்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், இந்தச் சபையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், தனிப்பட்ட சிலர் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி வருகின்றமை இந்தப் பிரதேச மக்களிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-601)

## பிரதேச செயலகத்துக்கு புதிய கட்டப் பணிகள்

அக்கராயன், பெப்.2

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசசெயலகத்துக்குப் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

45 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. கடந்த காலப் போர் காரணமாகப் பூநகரியின் சகல கட்டுமானங்களும் அழிவடைந்த நிலையில் புதிய பிரதேச செயலகக் கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை பூநகரி மருத்துவமனைக்கான கட்டட வேலைகளும் இடம் பெறுகின்றன.

தற்போது பூநகரி மருத்துவமனை தற்காலிகமானதொரு இடத்தில் இயங்கி வருகின்றது.

மேலும் பூநகரி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-410)

## அசமந்த மின்சாரசபை; அவலத்தில் பாற்சபை

நெடுங்கேணி, பெப்.2

மின்சார சபையினரின் அசமந்தத்தால் நெடுங்கேணி பால் நிலையம் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதான பால் நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் சகல வேலைத் திட்டங்களும் பூர்த்தியாகியுள்ளன.

இந்த நிலையில் மின்சாரம் பெறுவதற்கெனக் கடந்த 5 ஆம் திகதி முதற் கட்டக் கொடுப்பனவாக 14 ஆயிரத்து 710 ரூபா மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டது. ஆனால் இது தொடர்பில் மின்சார சபையால் எந்த விதமான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இந்தப் பகுதியில் கொள்வனவு செய்யப்படும் பாலைப் பதப்படுத்த முடியாத நிலைக்குப் பால் நிலையம் தள்ளப்பட்டுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் அக்கறை செலுத்துவதுடன், தாமதமின்றி மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமெனப் பாற்சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)



வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய ஆசிரியர் எஸ்.வரதகுமார் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆக்கத்திறன் போட்டியில் அவர் எழுதிய நாடகத்துக்காக கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சரினால் தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார். (601)

## பஸ் நிலையம் அமையுமா?

அக்கராயன், பெப்.2

பூநகரியில் பஸ் நிலையம் அமைக்கப்படாமையால் பயணிகள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள வாடியடிப் பகுதியில் பெருமளவு வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன. இதனால் இந்த இடத்தில் மக்கள் அதிகளவில் கூடுகின்றனர். மேலும் இங்கிருந்து பல்வேறு இடங்களுக்கும் அவர்கள் பயணத்தையும் மேற்கொள்கின்றனர். எனினும் இங்கு பஸ் நிலையமொன்று அமைக்கப்படாமையால் பயணிகள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

1991 ஆம் ஆண்டு பூநகரிப் பிரதேசத்திலே பெரும் போர் நிகழ்ந்தது. இதனால் இங்குள்ள கட்டுமானங்கள் அழிவடைந்தன.

தற்போது பெருமளவில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். இந்த நிலையில் இங்கு பஸ் நிலையமொன்று அமைக்கப்படாமை சகல மக்களிடத்திலும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (க-410)

## பொது மண்டபம் இல்லையே!

முல்லைத்தீவு, பெப்.2

பொதுநோக்கு மண்டபம் இல்லாததால் ஒட்டுசுட்டான், சமனங்குளம் கிராம மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த போரின் போது இங்குள்ள கட்டடங்கள் யாவும் அழிந்த நிலையில், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமது நிகழ்வுகளை நடத்துவதற்கு மண்டபம் இல்லாததால் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றால் நடத்தப்படுகின்ற கலந்துரையாடல்கள், கூட்டங்கள் என்பனவற்றை வசதி குறைந்த நிலையிலுள்ள தனியார் வீடுகளில் நடத்த வேண்டிய அவலநிலையில் இவர்கள் உள்ளனர்.

மேலும் இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளைக் கூடப் பெறுவதற்கு இடவசதியில்லாத நிலையில் அலைகின்றனர்.

எனவே போரின் போது அழிவடைந்த இத்தகைய கட்டடங்களைப் புனரமைத்து வழங்குமாறு இவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## நெற்பயிர்களில் நோய்த் தாக்கம்

நெடுங்கேணி,பெப்.2

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனைப் பகுதியிலுள்ள நெற்பயிர்களில் நோய்த் தாக்கம் காணப்படுகின்றது.

இங்குள்ள தண்ணி முறிப்புக் குளத்தின் கீழ் சுமார் ஆயிரத்து 156 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பயிர்களில் கபில நிறத்தத்தியினால் இலை மடிச்சுக்கட்டி நோய் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் பயிர்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தக் கூடியது.

எனவே விவசாயிகளை அவதானத்துடன் செயற்படுமாறு குமுழமுனை கமநலசேவை அதிகாரி வே.கந்தசாமி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இவை தொடர்பான மேலதிக விவரங்களை கமநல சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த நோயின் தாக்கத்திலிருந்து நெற்பயிர்களைப் பாதுகாப்பதில் அனைத்து விவசாயிகளும் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (க-435)

## முருகானந்தாவுக்கு மூன்று மாடிக் கட்டம்

### நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியுரை

கிளிநொச்சி, பெப்.2

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடமொன்று அமைத்துக்கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்தக் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரே இந்த உறுதிமொழியை வழங்கினார்.

அத்துடன் மாணவர்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கென சைக்கிள்களும் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**இந்தக் கல்லூரிக்கு வகுப்பறைகள், ஆய்வு கூடம், செயற்பாட்டறைகள், மலசலகூட வசதிகள் என்பன உடனடித் தேவைகளாக இருப்பதாக இந்தக் கல்லூரி அதிபர் தி.வரதன் தெரிவித்துள்ளார்.**

கண்டாவளை, கோரக்கன்கட்டு ஆகிய இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கே இந்தச் சைக்கிள்கள் வழங்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்வின் முன்னதாக முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்துக்குரிய பெயர்ப் பலகையை, முருகேசு சந்திரகுமார் திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தினை வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆரம்பித்தார்.

மேலும் இந்தக் கல்லூரிக்கு வகுப்பறைகள், ஆய்வு கூடம், செயற்பாட்டறைகள், மலசலகூட வசதிகள் என்பன உடனடித் தேவைகளாக இருப்பதாக கல்லூரி அதிபர் தி.வரதன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி கல்லூரி என்ற நிலைக்கு இந்தப் பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது. தற்போது 31 ஆசிரியர்களையும், 405 மாணவர்களையும், 05 பணியாளர்களையும் கொண்டு இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது. (க -6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு வெளிக்கள நிலையம் மீண்டும் எழுகிறது சொந்த இடத்தில்

வடமராட்சி, பெப்.2

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தை மீளவும் தொண்டமானாற்றிலேயே அமைத்து இயங்க வைப்பதற்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் அண்மையில் நட்டு வைக்கப்பட்டது.

வெளிக்கள நிலையத்தின் ஆரம்பகால ஆலோசகரான கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் சரத் கொட்டகொட இந்தப் புதிய நிலையத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

மாணவர்களின் அறிவியல் அறிவையும் வெளிக்களப் பயிற்சி அனுபவங்களையும் மேம்படுத்தி அறிவியல் கல்வியை தரமானதாக்குவதற்காக உருவாக்கப்பட்டதே தொண்டமானாறு வெளிக்கள நிலையம். தொண்டமானாற்றில் சந்நிதி முருகன் கோயில் ஆற்றங்கரையின் அக்கரையில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு மாணவ சமுதாயத்துக்கு சிறப்பான சேவையாற்றி வந்தது.

போரால் நிலையத்தின் கட்டடம் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. வெளிக்கள நிலையம் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அதன் முழுமையான செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

இந்த நிலையில் வெளிக்கள நிலையத்தை தொண்டமானாற்றிலேயே இயங்க வைக்க வேண்டும் என வல்வெட்டித்துறை நகரசபை எடுத்த தீர்மானத்துக்கமைய அதனைச் செயற்படுத்தும் வகையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளரும் முன்னாள் மாகாண கல்வியமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட நடவடிக்கையால் வெளிக்கள நிலையத்தைத் தொண்டமானாற்றில் மீண்டும் நிறுவுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

வெளிக்கள நிலையம் அமையவுள்ள இடம் தொடர்பாக முயற்சிகளை மேற்கொண்டபோது தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் பிரதம குருக்களில் ஒருவரான அ.அகிலேந்திர ஐயர், சந்நிதி கோயிலுக்கு அண்மையில் ஆற்றங்கரையோரமாக சுமார் 48 லட்சம் ரூபா பெறுமதியான காணியை வல்வெட்டித்துறை நகர சபை ஊடாக தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

**மாணவர்களின் அறிவியல் கற்கையையும் வெளிக் களப்பயிற்சி அனுபவங்களையும் மேம்படுத்தி மாணவர்களின் சிந்தனையை மேம்படுத்திய வெளிக்கள நிலையத்தின் கட்டடம் போரால் முற்றாகச் சேதமாக்கப்பட்டிருந்தது.**

இதனைத் தொடர்ந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாட்டுடன் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் சரத் கொட்டகொட இதன் கட்டுமானப் பணிகளுக்கான அத்திபாரக் கல்லை நட்டு வைத்தார்.

நிகழ்வில் வெளிக்கள நிலையத்தின் தலைவர் பேராசிரியர் க.சின்னத்தம்பி, ஆளுநரின் செயலாளர் ஐ.இளங்கோவன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வெளிக்கள நிலையச் செயலாளர் திருமதி இராஜாராம், வடமாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா, வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ், வெளிக்கள நிலையத்தின் செயற்குழு உறுப்பினர்கள், மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், நகர சபை உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், வெளிக்கள நிலையத்தைக் கட்டுவதற்கான ஆரம்ப நிதி வழங்கும் டில்மா நிறுவனக் குழுவினர், பொறியியலாளர் சஞ்சீவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வெளிக்கள நிலையத்துக்கென முதற்கட்டமாக ஒரு விரிவுரை மண்டபத்தைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக டில்மா நிறுவனத்தினர் தெரிவித்திருந்தனர். (உ-6)

## ஜனாதிபதி வருகைக்காக பிரதான வீதிகளுக்கும் பூச்சு

யாழ்ப்பாணம்,பெப்.2

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ். குடாநாட்டின் வீதிகளை தார்க்கலவை மூலம் உடனடியாக சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியில் புனரமைப்புக்காக அவசரம் அவசரமாக ஒரு கனரக வாகனத்தில் தார்க்கலவை எடுத்து வரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்கள், வீதிகளில் இருக்கும் குன்று குழிகளை தார்க்கலவை போட்டு அவசரமாக மூடத் தயாராகி வருகின்றனர்.

கே.கே.எஸ் வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, பண்ணை வீதி, யாழ்.பிரதான வீதி, நாவலர் வீதி போன்ற நகரை அண்டிய வீதிகளில் பெரும் சேதமடைந்த பகுதிகளே உடனடியாகப் பூசி மெழுகப்படவுள்ளன.

இதேவேளை, யாழ். நகரிலும் மற்றும் நல்லூர் பகுதியிலும் வீதிக்குச் செப்பனிடப்பட்டு ஊற்றப்பட்ட தார், நேற்று முன்தினம் காலை பெய்த மழையில் கழுவிச், செல்லப்பட்டு கழிவு ஓயில் போன்று வீதியெங்கும் பரவிக் கிடந்தது.

நகரில் ஆஸ்பத்திரிச் சந்தியிலும் பலாலி வீதியிலும், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியிலும் இந்த நிலை காணப்பட்டது. (உ-17)

## ரூ.17 லட்சம் தண்டம்

வடமராட்சி, பெப்.2

பருத்தித்துறை நீதிமன்ற முழுமையான செயற்பாடுகள் பழைய இடத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் ஆரம்பமான முதல் நாளான திங்கட்கிழமை 6 லட்சத்து 28 ஆயிரம் ரூபா குற்றப் பணமாக அறவிடப்பட்டது.

திருட்டுத் தனமாக மின்சாரம் பெற்ற பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 61 பேரிடம் இருந்தே குற்றப்பணம் பெறப்பட்டது. இந்தக் குற்றப்பணத்தைத் தவிர அவர்களிடம் இருந்து மின்சார சபைக்கு 11 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டது.

கொழும்பில் இருந்து வருகை தந்த இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குழு ஒன்று பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் உதவியுடன் வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி முதல் நடத்திய திடீர் பரிசோதனையின்போது திருட்டுத்தனமான மின்சாரம் பெற்ற நூற்றுக்கணக்கானோர் சிக்கிக் கொண்டனர்.

சிக்கிக் கொண்டவர்களில் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 61 பேர் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில், மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அனைவரும் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்துக் குற்றப் பணத்தை நீதிமன்றத்துக்கும், இலங்கை மின்சார சபைக்கும் செலுத்த வேண்டும் என 61 பேருக்கும் தனித்தனியே நீதிவான் தண்டம் விதித்தார்.

இதன்பிரகாரம் 61 பேரும் 6 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவை நீதிமன்றத்துக்கும் 11 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை இலங்கை மின்சார சபைக்கும் செலுத்த வேண்டும் என உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற வழக்குகளில் ஒருவர் ஆகக் கூடுதலாக இலங்கை மின்சார சபைக்கு ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவும் நீதிமன்றத்துக்கு 28 ஆயிரம் ரூபாவும் மற்றொருவர் ஆகக் குறைந்ததாக இலங்கை மின்சார சபைக்குப் 10 ஆயிரம் ரூபா வும், நீதிமன்றத்துக்கு 6 ஆயிரம் ரூபாவும் குற்றப் பணமாகச் செலுத்தியிருந் தார்கள்.

திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றவர்களில் நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டவர்கள் நேற்று புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். வல் வெட்டிப் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டவர்கள் நாளை வெள்ளிக் கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவார்கள். (ஒ-236)

## திருடிய தாலிக்கொடியினை துண்டாடி விற்ற மூவர் கைது

### வாங்கிய நால்வரும் கூட மறியலில்

யாழ்ப்பாணம், பெப்.02

மூவர் சேர்ந்து தாலிக் கொடியைத் திருடி, அதனை நான்கு துண்டுகளாக்கி விற்றனர். இந்தத் துண்டுகளை நான்கு நகைத் தொழிலாளர்கள் வாங்கியிருந்தனர். அவர்கள் ஏழுபேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களான அந்த ஏழு பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் நீதிவான் மா.கணேசராஜா.

தாலிக் கொடியைத் திருடிய மூவரும் யாழ். பொம்மைவெளியைச் சேர்ந்தவர்கள். வாங்கியவர்கள் யாழ். நகர்ப் பகுதியைச் சேர்ந்த நகைத் தொழிலாளர்கள்.

யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்துக் கைதான சந்தேக நபர்கள் 7 பேரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-4)

## 91 பேருக்கு டெங்கு ஜனவரியில் மட்டும்

### காய்ச்சல் வந்தால் மருத்துவ ஆலோசனைகளை பெறுங்கள்

யாழ்ப்பாணம், பெப்.02

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் - ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் - யாழ்.மாவட்டத்தில் 91 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே காய்ச்சல் அறிகுறி ஏற்படின் உடனடியாகவே வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிமனையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றது.

இந்த 91 டெங்கு நோயாளர்களில் அதிகமானோர் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏழாலையிலும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் நீர்வேலியிலும், தெல்லிபழைப் பிரிவின் மல்லாகத்திலும் இனங்காணப்பட்டுள்ளனர்.

விசேடமாக வெட்டப்பட்ட வாழைமரக் குற்றிகள், கிளுவை மரப் பொந்துகள், வாழையிலிருந்து உதிரும் மடல்கள் என்பவற்றில் தேங்கும் நீரில் இருந்து நுளம்பு பெருகுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலும் பரவலாக தொற்றுக் காணப்படுகின்றது. எனவே சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருந்து டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ஒ-4)

## கேட்டார்களே ஒரு கேள்வி நெடுந்தீவு பஸ் சேவை பற்றி

யாழ்ப்பாணம், பெப்.2

நெடுந்தீவில் இரண்டு பஸ்கள் இருக்கின்றன, ஆனால் சாரதி ஒருவரே. இந்த நிலையில் இரண்டு பஸ்கள் இங்கு சேவையில் ஈடுபடுவதாக எப்படிக் கூற முடியும்? இவ்வாறு கேட்கிறார்கள் நெடுந்தீவு மக்கள்.

நெடுந்தீவில் உள்ள போக்குவரத்துச் சேவைக்கு ஒரு பஸ் வண்டியைச் சேவையில் ஈடுபடுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். நீண்ட காலத்தின் பின் மேலதிக பஸ் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்தது.

இரண்டு பஸ்களும், சிறிது காலம் சேவையில் ஈடுபட்டன. தற்சமயம் ஒரே ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. சாரதி இல்லாத நிலையில் மற்றைய பஸ் சேவையில் ஈடுபடுவது நின்று விட்டது. கடமையில் உள்ள ஒரே ஒரு சாரதியே இடைக்கிடை நிறுத்தி வைக்கப்பட்ட மற்றைய பஸ்சையும் சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதுண்டு. உள்ளூர் போக்குவரத்திற்கு இரண்டு பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுத் தருவிக்கப்பட்ட பஸ் வண்டி சாரதியில்லாத காரணத்தால் ஓடாமல் நிற்கிறது. இந்த நிலையில் இரண்டு பஸ் வண்டிகள் சேவையில் உள்ளன என்றால் அதை எங்களால் எப்படி ஒப்புக் கொள்ள முடியும் என்கிறார்கள் பொது மக்கள். (உ-7)

**கடமையில் உள்ள ஒரே ஒரு சாரதியே இடைக்கிடை நிறுத்தி வைக்கப்பட்ட மற்றைய பஸ்சையும் சேவையில் ஈடுபடுத்திக் கொள்கிறார்.**

## தென்மராட்சியில் கணிதப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீட்டுப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது

பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகளை இன்று சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் மாணவர் பெற்ற புள்ளிகள் பற்றிய விவரத்தினை எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க [illegible] கல்விப் பணிப்பாளர் கு.பிரேமக்காந்தன் அறிவித்துள்ளார். (உ-207)

## மாசார் கிராமத்துக்கு மின்சார விநியோகம்

பளை, பெப்.2

மாசார் கிராமத்துக்கான மின்விநியோகம் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மின்விநியோக பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைக்க, வடக்கின் வசந்தம் வேலைத்திட்ட மின் பொறியியலாளர் ரி.குணசீலன், யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் ஞானதேசிகன், பளை பிரதேச செயலர் செ.முகுந்தன் ஆகியோர் கூட்டாகக் கிராமத்திற்கான மின் விநியோகத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

மாசார் மீள்குடியமர்வுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட மின் விநியோகத்துக்காக மாசார் அ.த.க. பாடசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்ட மின்மாற்றி மூலம் மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் மாசார் அ.த.க. பாடசாலைக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டது.

மாசார் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நிறுவனத்தினர் வீடுகள் அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (த - 207)

## சுதுமலையில் விபத்து இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.02

தனியார் பயணிகள் பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலை அதி தீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் சுதுமலையில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில் மாதகல் கிழக்கு, மாதகலைச் சேர்ந்த ம.பிரியதர்சன் (வயது-20) என்பவரே படுகாயமடைந்தார். கிளிநொச்சி பஸ் டிப்போவில் பணிபுரியும் இவர், அங்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனரமைப்பைத் துரிதப்படுத்துங்கள் வீதி அதிகார சபைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், பெப்.02

குடாநாட்டின் வீதி புனரமைப்பை துரிதப்படுத்துமாறு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மத்திய பணிப்பாளர் அமரசேகர கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த அவர் வீதி புனரமைப்புத் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

**தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிப் புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளை வலியுறுத்தினார்.**

குடாநாட்டின் பிரதான வீதிகளின் புனரமைப்பு தொடர்பாகவும் இந்த வருடத்தில் மேற்கொள்ள இருக்கும் வீதி புனரமைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிப் புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளை வலியுறுத்தினார்.

காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, பண்ணைவீதி, அராலி வீதி, காரைநகர் வீதி போன்றவற்றில் நடந்து வரும் திருத்தப் பணிகளையும் பணிப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டார். (உ-17)

## கணக்காய்வுத் திணைக்களத்தில் காய்கறிப் பயிர்ச் செய்கை



கைதடி, பெப்.2

விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் வடக்கு மாகாண சபைக் கணக்காய்வுத் திணைக்களம் தமது அலுவலக வளவிலே தற்போது காய்கறிப் பயிற்செய்கையை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருட ஆரம்பத்தில் வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் யாவும் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டன. இதனையடுத்து உடனடி நடவடிக்கையாக அந்தந்தத் திணைக்கள வளாகத்திலேயே பகுதி நேரமாக விவசாயச் செய்கையில் திணைக்களங்கள் ஈடுபட வேண்டும் என்று வடக்கு மாகாண சபை பணித்திருந்தது. இதனையடுத்து கடந்த வருடம் இந்தச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அதில் வெற்றி கண்ட திணைக்களங்கள் சில இவ்வாண்டும் அதனை மேற்கொண்டுள்ளன. அந்த வகையிலேயே மாகாண கணக்காய்வுத் திணைக்களமும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வடக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் கே.மகாலிங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் உயர்நிலை அதிகாரிகள் தொடக்கம் கீழ் நிலை அலுவலர்கள் வரை அனைவரும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த விவசாயச் செய்கையில் ஈடுபடுவதாகவும் தற்போது வாழை, மிளகாய், கத்தரி, கோவா உள்ளிட்ட பல பயன்தரும் பயிர்ச்செய்கையைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும் அந்தத் திணைக்கள ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (த-288)

## பழைய இரும்பு பித்தளை நீர்வேலியில் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.02

பழைய இரும்பு மற்றும் பித்தளைப் பொருள்களை களவாடும் திருடர்களின் தொல்லை நீர்வேலிப் பகுதியில் அதிகரித்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பொது இடங்கள் மற்றும் குடிமனைப் பகுதிகளில் இந்த திருட்டுச் சம்பவங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் குறைப்படுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை லான்ட்மாஸ்ரர் ஒன்றில் பழைய இரும்புகளை ஏற்றி வந்த கும்பல் ஒன்று இப்பகுதியில் உள்ள வீட்டு முற்றத்தில் இருந்த பெரிய பித்தளைக் கிடாரம் ஒன்றை களவாடுவதற்கு எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

''ஆள் நடமாட்டத்தைக் கண்டு தான் சந்தேகப்பட்டு ''என்ன வேணும்'' என்று கேட்டதும் திருடர்கள் லான்ட் மாஸ்ரருடன் தப்பி ஓடிவிட்டார்கள்'' என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.(உ-17)

# ஒரு மாதம் கடந்தும் தொடரும் தொல்லை

## வாகன அனுமதிப் பத்திரம் பெற நீளும் காத்திருப்பு

அச்சுவேலி, பெப்.2

புதிய வருடம் பிறந்து ஒரு மாதம் கடந்துவிட்ட போதும் வாகனங்களுக்கான வரி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கு மணிக்கணக்கில் வயது வேறுபாடு இன்றிப் பிரதேச செயலகங்களில் மக்கள் காத்திருப்பது தொடர்கின்றது. ''டோக்கன்'' வழங்கப்பட்டே வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகள் இன்னும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வருடத்துக்கான வாகன வரி அனுமதிப் பத்திரத்தை மார்ச் 31 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதுவரை வரி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாத வாகன உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பொலிஸாருக்கு அறிவித்த போதும் பொலிஸாரும் படையினரும் இந்த விடயத்தில் வாகனச் சாரதிகளை 2012 வாகன அனுமதிப்பத்திரம் கேட்டு மிரட்டுகின்றனர்.

இந்தநிலையில் வாகன உரிமையாளர்கள் வாகனங்களுக்கான வரி அனுமதிப் பத்திரத்தைக் கூடிய விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் பிரதேச செயலகங்களில் பெருமளவு கூடுகின்றனர்.

ஆனால், பிரதேச செயலகங்களில் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையில் கடந்த காலங்களில் நடைபெற்றது போன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரி அனுமதிப் பத்திரம் பெற வருபவர்களுக்கு அவர்கள் சமூகம் தந்த ஒழுங்கில் ''டோக்கன்'' வழங்கப்பட்டு (மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை) மணிக்கணக்கில் காத்திருப்பின் பின்னரே ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

அந்தணர்கள், பூசகர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுவதாகக் கூறப் படுகின்றது.

''வாகன வரி அனுமதிப் பத்திரம் பெறக் காத்திருப்போருக்கென பொருத்தமான முறையை ஏற்படுத்தி மேலதிக ஆளணியைப் பயன்படுத்திக் குறைந்த நேரத்துக்குள்ளே அவற்றை வழங்க முடியாதா?'' என்று கேள்வி எழுப்புகின்றனர் பொதுமக்கள். (உ-11)

## தீவகப் பட்டதாரிகளை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

நயினாதீவு-மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு பகுதிகளில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் விவரம் தொகுக்கப்படவுள்ளது.

மூன்று வருட - நான்கு வருட காலக் கற்கையைக் கொண்ட பட்டங்கள் மற்றும் டிப்ளோமா பட்டம் பெற்ற பட்டதாரிகள் தமது விவரங்களுடன் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை பிரதேச சபைக்குத் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

வேலணை பிரதேச சபை இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் நாளை தவறாது சமுகம் தரும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் பட்டதாரிகள் விவரம் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சிற்கும், தேசிய வரவு செலவு திட்டப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார். (உ -01)

# எம்மவரே எம்மை அழிக்கும் கொடூரத்தை ஏற்க முடியாது

### பருத்தித்துறை சபை உறுப்பினர் கண்டனம்

வடமராட்சி, பெப்.2

மாணவி டிலக்சனாவின் படுகொலையானது நமது இனத்திற்கு புதிய ஏக்கத்தை உண்டு பண்ணுகின்ற சம்பவமாகும். எம்மவரே எங்களை அழிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தச் சம்பவம் துக்ககரமானது. இனி இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்க இடமளிக்கக்கூடாது.

இவ்வாறு பருத்தித்துறை பிரதேச சபை ஆளும் தரப்பு உறுப்பினரான கதிரவேலு தவயோகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாணவி மேரிடிலக்சனா துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதானது கல்விச் சமூகத்தையே அழிக்கின்ற நிகழ்வாகும். குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படுகின்றபோது, குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புண்டு. குற்றவாளிகள் நியாயப்படுத்தப்பட்டு விடுதலையளிக்கப்படுவதால் தான் இப்படிப்பட்ட படுகொலைகள், கொள்ளைகள் தொடர்கின்றன.

அண்மைக்காலமாக வடமராட்சிப் பிரதேசத்தில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் பெருகிவருவது மனவருத்தத்துக்கும், கண்டனத்துக்கும் உரியது. எமக்குரியதை நாமே தீர்மானிக்கும் காலம் வரை இப்படியான கொடூரங்கள் நடந்து கொண்டுதான் இருக்கப் போகின்றன. இது போன்று பல சம்பவங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் பார்க்கின்ற போதும், குற்றவாளிகள் கைதானது பற்றிய தகவல்களைப் பார்க்க முடிவதில்லை.

மாணவி டிலக்சனாவின் உடலைப் பார்த்த அல்வாய் மக்கள் இந்தக் கொலைக்கு உரிய குற்றவாளி உறுதிப்படுத்தப்படுகின்றபோது, அவருக்கு மரணதண்டனையை யாழ்ப்பாணத்திலேயே வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். அப்போதுதான் எமது இனத்தின் புதிய ஏக்கத்தை நீக்க முடியும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இப்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ - 6)

## அக்கறையற்ற மாநகரசபை உறுப்பினர்கள்

*யாழ்ப்பாணம், பெப்.2*

*யாழ். மாநகரப்பகுதியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்துவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் ஆளும் அணி உறுப்பினர்கள் சிலருடன் எதிரணி உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை. சமிக்ஞை விளக்குகள் தொடர்பாக சிங்கப்பூர் ஏ.ரி.ரி.சிஸ்டம் குழுவுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமைக் யாழ்.மாநகர சபையில் நடைபெற்றது. (உ-7)*

# சர்வோதயத் தலைவர் ஆரியரட்ணவின் மதுரை உரைக்குக் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப்.2

இலங்கை சர்வோதயத் தலைவர் ஏ.ரி ஆரியரட்ண இந்தியா மதுரையில் நடைபெற்ற சர்வோதய மாநாட்டில் ஆற்றிய உரையை இலங்கையிலிருந்து இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தொண்டர்கள் கண்டித்துள்ளனர்.

'' அவரது உரை எமக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது. இது கண்டனத்துக்கு உரியது'' என்றனர் அவர்கள்.

44 ஆவது சர்வோதய மாநாடு டிசெம்பர் 28,29 ஆகிய திகதிகளில் தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து சேவா சங்க பிரதிநிதிகள் 15 பேர் பங்கு பற்றியிருந்தனர். மாநாட்டுக்கு வருகை தந்த சர்வோதய இலங்கைக் குழுத் தலைவர் ஏ.ரி. ஆரியரட்ண, தமது சர்வோதயம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் பெரும் சேவையாற்றி வருவதாகவும், இலங்கை ஜனாதிபதி பயங்கரவாதிகளுக்கு எதிரான போரை மனித உரிமைகளை மீறாத வகையிலேயே முன்னெடுத்தார் என்றும் தமது உரையில் குறிப்பிட்டார்.

இவரது இந்த உரையே சர்வோதயத்தின் தமிழ்த் தொண்டர்க்ளைச் சீற்றமுற வைத்துள்ளது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்று இலங்கையில் இறுதிப் போரின் போது மனித உரிமைகள் மீறப்படவில்லை. பொது மக்கள் கொல்லப்படவில்லை என்று ஆரியரட்ண எப்படிப் பொய் சொல்ல முடியும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

''சர்வோதயத்தின் சேவையை இலங்கை அரசின் அரசியலுக்காக ஆரியரட்ண பயன்படுத்திக் கொண்டார்'' என்று ஒரு தொண்டர் குற்றஞ்சாட்டினார்.

ஆரியரட்ண கூறியது வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு சர்வோதயம் ''பெருந் தொண்டு'' எதனையும் ஆற்றவில்லை என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுக்கின்றனர். தாம் தமிழர்களுக்குப் பெருந் தொண்டாற்றியதாக ஆரியரட்ண கூறியமை, தமிழக சர்வோதயத்தின் ஆதரவைப் பெறும் அரசியல் நோக்கம் கொண்டது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உ-207)

## அண்ணல் காந்தி நினைவு தினம் யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், பெப்.2

அண்ணல் மாகாத்மா காந்தியின் 64ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள காந்தி நிலையத்தில் நடைபெற்றன.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் சி.இராசநாயகம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

காலையில் யாழ் .போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள காந்தி சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நிகழ்வில் ஆசிரியர் நா.புவனேந்திரன் சத்தியமே இலட்சியமாய் என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவு நிகழ்த்தினார். (உ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய் உருவில் எமன்; விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு,பெப்.2

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் பெரியகல்லாறு பிரதேசத்தில் நாய் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.15 அளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்து பெரிய கல்லாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்தில் அம்மன் கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த குமாரபொடி ரவிந்திரன் (வயது -39) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-21)

## டெங்கு நோயால் 14 பேர் பாதிப்பு

வாழைச்சேனை, பெப். 2

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொட்க்கம் இன்று வரை14 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று பதில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.நௌபர் தெரிவித்தார்.

டெங்கு நோய் என்று அடையாளம் காணப்பட்டவர்களின் வீட்டைச் சுற்றியுள்ள வீடுகள் பரிசோதிக்கப்படுவதுடன் அப் பிரதேசம் முழுவதும் புகை விசிறப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் காணப்படுகின்ற கிணறுகளுக்கு நுளம்புக் குடம்பிகளை அழிக்கக்கூடிய மீன் இனங்கள் விடப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ச)

# சம்பூர் மக்களுக்கு நிவாரணம் நிறுத்தம்

நிறுத்தப்பட்ட உலக உலர் உணவுத்திட்ட நிவாரணப் பொருள்களைத் தாமதமின்றி வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

திருகோணமலை,பெப்.2

தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள சம்பூர் -மூதூர் கிழக்கு மக்களுக்கான உலக உலர் உணவுத்திட்டத்தின் கீழான நிவாரணம் நிறுத்தப்பட்டமையால் அவர்கள் மேலும் கஷ்ட நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூதூர் கிழக்குப்பகுதியான சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, சூடைக்குடா, நவரத்தினபுரம் மற்றும் கடற்கரைச் சேனை ஆகிய கிராமசேவகர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் கட்டைபறிச்சான், கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை ஆகிய பகுதிகளிலுள்ள முகாம்களில் தொழிலின்றி கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண ஆளுநரும், அரச அதிபரும் அங்குள்ள மக்கள் வேறு பகுதிகளில் குடியேறாவிட்டால் நிவாரணங்களை விநியோகிக்கக் கூடாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், இது தொடர்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வந்தது. கடந்தவாரம் முதல் இவர்களுக்கான நிவாரணம் கொடுக்கப்படாமையால் முகாமில் வாழும் மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே, நிறுத்தப்பட்ட உலக உலர் உணவுத்திட்ட நிவாரணப் பொருள்களைத் தாமதமின்றி வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச)



மேல்மாகாணத்துக்கு 15 திடீர் மரண விசாரணை அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் வழங்குகின்றார்.

# காணி, பொலிஸ் அதிகாரம் பிரிவினைக்கே வழி வகுக்கும்

### அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அவசியமற்றவை என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்திருந்தார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் வாழும் மக்கள் மத்தியில் பிரிவினைக்கு வழி வகுக்கும் என்று கூறுகிறார் அதாவுல்லா.

அம்பாறை மாவட்டத்திலுள்ள நாமல் ஓயா பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போது நாம் அச்சம், பீதியின்றி சந்தோஷமாக வாழ்கின்றோம்.

இவ்வா றான சூழ்நிலையில் ஓரிருவர் தங்களது அரசியல் நலன்களுக்காக மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கின்றனர்.

இது இந்தச் சின்னஞ் சிறிய தேசத்துக்கு தேவையற்ற தாகும் என்கிறார் அதாவுல்லா. (ஒ-319)

# மின்சார சபை காணியை மக்களுக்கு வழங்க முயற்சி

### கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானம்

இந்தக் காணியை குடியிருப்பாளர்களுக்கு மீளப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பிரேரணையை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மாகாண அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

மூதூர், பெப். 2

மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் தியாவெட்டுவான் கிராமசேவையாளர் பிரிவில் இலங்கை மின்சார சபைக்கு 2.5 ஏக்கர் தவிர்ந்த ஏனைய காணிகளை மீளப்பெற்று குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற பிரேரணையை கிழக்கு மாகாண அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பான விவரங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக மாகாணக் காணி ஆணையாளர் தலைமையில் விசேட குழு ஒன்றையும் மாகாண அமைச்சரவை நியமித்துள்ளது.

இந்தக் காணியை குடியிருப்பாளர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற பிரேரணையை மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மாகாண அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

தியாவெட்டுவானில் இலங்கை மின்சார சபைக்கு 2.5 ஏக்கர் நிலமே ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 20.9 ஏக்கர் காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என வெளியான தகவலை அடுத்தே மாகாண அமைச்சரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

2.5 ஏக்கர் தவிர்ந்த ஏனைய காணிகள் பொதுமக்களின் குடியேற்றக்காணிகள் என்று மாகாண அமைச்சர் சுபைர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த பிரேரணையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்; நோயாளர்கள் பெரும் அவதி

மஸ்கெலியா, பெப்.2

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை 11 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தின் எதிரொலியாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் பணியுரியும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சிறுமி உயிரிழந்தமைக்கு சுகவீனமே காரணம் எனத் தெரிவித்துள்ள வைத்திசாலை வட்டாரம், இதுதொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள் தம்முடன் கடும்போக்குடன் நடந்துகொண்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தால் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு முற்றிலும் செயலிழந்தது. தூர இடங்களிலிருந்து சிகிச்சைபெற வந்த வயோதிபர்களும், தாய்மாரும், குழந்தைகளும் திரும்பிச் சென்றனர்.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கினர். அவசர நோயாளர்களுக்கு மட்டுமே சிகிச்சையளிக்கப்பட்டது.

சிறுமியின் மரணம் தொடர்பில் வைத்திய சாலை வட்டாரம் தனது தரப்பில் பிழையில்லை என்று கூறுகின்றபோதும், பிரதேச மட்டத்தில் மக்கள் வைத்தியசாலைமீது பெரும் அதிருப்தி கொண்டுள்ளதுடன், ஊழியர்களின் கவனயீனமே அப்பாவிச் சிறுமியின் உயிரைப் பலிகொண்டதாகவும் விசனிக்கின்றனர்.

இதைப் பிரதிபலிக்கும் முகமாக நேற்றுமுன்தினம் மஸ்கெலியா நகரின் பல இடங்களில் வைத்தியசாலைக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியசாலையின் ஊழியர்கள் அனைவரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று இந்தச் சுவரொட்டிகளில் குறிப்பட்டுள்ளது. (ச)

# இருவருக்கு விளக்கமறியல்


அம்பாறை,பெப்.2

அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடை பிரதேசத்தில் போலி சாரதி அனுமதிப்பத்திரத்துடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படும் ஒருவரையும் போலி சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுத்ததாகத் தெரிவிக்கப்படும் ஒருவரையும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி உத்தரவிட்டார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே அவர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மும்மொழி கற்ற சமூகத்தை உருவாக்க அரசு விசேட திட்டம்: பிரதமர்

ஆங்கில அறிவு இல்லாமல் பூகோளமயமாக்கலின் சவால்களை எம்மால் வெற்றிகொள்ள முடியாது. அது மட்டுமல்லாது ஏனைய சமூகங்களின் கலாசாரங்களை விளங்கிக்கொள்ள ஆங்கிலமொழி எமக்கு அவசியம் என்று பிரதமர் ஜயரட்ன தெரிவித்தார்.



கம்பளை,பெப்.2

நாட்டில் மும்மொழிகளை கற்ற சமூகத்தை உருவாக்க அரசு விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

கம்பளை தேசிய மரபுரிமை மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலைகளுக்கு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய மாகாணத்தில் ஆங்கிலக் கல்வியை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி செயலணி மூலம் 620 லட்சம் ரூபா செலவில் வேலைத் திட்டமொன்று செயல்படுத்தப்படவுள்ளன.

ஆங்கில அறிவு இல்லாமல் பூகோளமயமாக்கலின் சவால்களை எம்மால் வெற்றிகொள்ள முடியாது. அதுமட்டுமல்லாது ஏனைய சமூகங்களின் கலாசாரங்களை விளங்கிக்கொள்ள ஆங்கிலமொழி எமக்கு அவசியம்.

இவ்வாறு ஏனைய கலாசாரங்களை அறிந்து அதற்கேற்ற வகையில் நாம் வாழாது தவிர்த்துகொள்வோமாயின் அது பிணக்குகளை ஏற்படுத்த வாய்ப்பளிக்கும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டல்



யாழ்ப்பாணம்,பெப்.2

அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலணை சுகாதார அதிகாரியின் தலைமையில் நடைபெறும் இந்தச் செயற்பாட்டில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது கவனிப்பின்றி விடப்பட்ட காணிகள், பொது இடங்கள் என்பனவற்றைத் துப்புரவு செய்யுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. (ந-313)

## தென்மராட்சியில் கணிதப் பரீட்சை

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6மாணவர்களுக்கான கணிதப் பாட மதிப்பீட்டுப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகளை இன்று சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றிய விவரத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (உ-207)

# கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு

**அல்லாரை கொற்புலவு மயானம், கைதடி கொல்களம் ஆகிய பகுதி மக்கள் பெரிதும் பாதிப்பு**

தென்மராட்சி,பெப்.2

சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட அல்லாரை கொற்புலவு மயானம், கைதடி கொல்களம் ஆகிய பகுதிகளில் மக்கள் பெருமளவு கழிவுகளைக் கொட்டுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மயானம் மற்றும் கொல்களம் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு வேலிகள் இல்லாததால் இரவோடிரவாக மக்கள் குப்பைகளையும், கழிவுகளையும் கொட்டிவிட்டுச் செல்வதால் அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றனர்.

சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் காணப்படும் இந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன்களைப் பாதுகாக்குமாறு, சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையினருக்கு அறிவித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை எனவும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

## சாட்டி வெள்ளைக் கடற்கரையில் புதிய கட்டடங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.2

மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரையில் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உல்லாசப் பயணிகள் அதிகமாக தீவுப் பகுதிகளை நோக்கிப் படையெடுப்பதால் கடற்கரைப் பகுதிகளை அழகுபடுத்தும் பணிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாகக் கடந்த மாதம் சாட்டி வெள்ளைக் கடற்கரையின் கரையோரப் பகுதிகளில் பயணிகள் இளைப்பாறுவதற்காகப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் பெருமளவிலான உல்லாசப் பயணிகள் சாட்டிக் கடலுக்கு வந்து போவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ந-313)

# பஸ்களில் பொதிகளுக்குக் கட்டணம் அதிகரிப்பு

இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் ஏற்றும் பொதிகளுக்குத் திடீரெனக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழைகள், மற்றும் பயணிகள் கடும் விசனமும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

அண்மைக் காலமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களில் ஏற்றும் பொதிகளுக்கு 10 கிலோ இலவசமாகவும் 10 கிலோவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 10 கிலோவுக்கும் தலா ரூபா 15 படியும் அறவிடப்பட்டது. 50 கிலோ அரிசி ஏற்றினால் 10 கிலோவுக்கு இலவசமாகவும் மிகுதி 40 கிலோவுக்கும் 10 கிலோவுக்கு 15 ரூபா வீதம் 40 கிலோவுக்கு 60 ரூபா அறவிடப்பட்டது. ஆனால் திடீரென 10 கிலோக்கு 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதால் 50

**இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களில் ஏற்றும் பொதிகளுக்கே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழைகள், மற்றும் பயணிகள் கடும் விசனமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.**

கிலோ அரிசி கொண்டு வருபவருக்கு 160 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. கூடுதலாக நிவாரணப் பொருள்களே இந்த பஸ்களில் ஏற்றி இறக்கப்படுகின்றன. இதனால் இலங்கைப் போக்குவரத்துச் சபை திடீரென கட்டணத்தை அதிகரித்தமையால் நடத்துநர்களும் பயணிகளுமே அதிக முரண்பாட்டுக்கு உள்ளாகின்றனர். மேலும் அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகரிப்பு 15 ரூபா அல்லது 20 ஆக இருந்தாலும் இப் பயணிகளுக்கு இலகுவாக இருக்கும் எனவே இந்தக் கட்டண விடயத்தில் உரிய அதிகாரிகள் நியாயமான மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# ஆக்கங்கள் ஏற்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.2

மாதகல் இளைஞர் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் பவளவிழா மலர் வெளியீட்டுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மலருக்கு, ''மாதகல் கல்வியில் பின்தங்கி நிற்பது ஏன்?,''மாதகலில் காணப்படும் வளங்களை சுயதொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்துவோம்'', ''மாதகலில் குடிதண்ணீர் ஏற்படுத்தும் தாக்கங்கள்,'' ''இளையோர் சமூக நடவடிக்கைகளில் முன் நிற்கத் தயங்குவது ஏன்?, என்னும் தலைப்புகளிலான கட்டுரைகளும் மாதகல் சமூகத்தை மையப் பொருளாகக் கொண்ட சிறுகதைகள், சமூகப் பிரச்சினையை எடுத்துக் காட்டும் கவிதைகள் போன்ற ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 28ஆம்திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக இளைஞர் சங்கமும் சனசமூக நிலையமும் பிள்ளையார்கோயிலடி, மாதகல் எனும் முகவரிக்கோ yiccm1937@gmail.com என்னும் இணையத்தள முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். (ந-313)

## FIRST YEAR REMEMBRANCE OF OUR DARLING APPAMMAH

*Born* 05 . 12 . 1934



*Entered Glory* 02 . 02 . 2011

**LATE MRS. JEYADEVI RAJANAYAGAM (DEVI AUNTY)**

Dearly loved and missed by loving

Son - Kumar, Daughter - in low - Chooty, Grand children- Jerine-Shavindra, Morine, Corine and Great Grand Child Shaiyana (angel)

"My sheep hear my voice, and I know them and they follow me. I give them, eternal life, and they will never perish, and no one will snatch them out of my hand" John 10:27-28

*Seventh-Day Adventist church,*
*850, Hospital Road, JAffna.*

MRS.JERINE SHAVINDRA.

# மணல் அகழ்வு விதிமுறைகளை பின்பற்றவில்லை

அச்சுவேலி, பெப்.02

கட்டட நிர்மாணப் பணிக்கான மணல், கல், மண்ணைப் பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குள் எடுத்துச் செல்லல், அகழ்ந்தெடுத்தல் நடைமுறையில் சில விதிகளை தளர்த்தி கனியவியல் ஆய்வுகள் மற்றும் சுரங்கங்கள் திணைக்களம் பொதுமக்களுக்கு வசதி செய்துள்ள போதிலும் பொலிஸாரும் பாதுகாப்பு பிரிவினரும் அந்த நடைமுறைகளைக் கருத்தில் கொள்ளாமல் வழமையான நடைமுறையை யாழ்.மாவட்டத்தில் பின்பற்றி வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கட்டடப்பொருள்கள் கொள்வனவின்போதும் மற்றும் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாக தமது சொந்தக் காணியில் கல்லு, மணல் போன்றவற்றை அகழ்ந்தெடுத்தல், மற்றும் எடுத்துச் செல்லல் தொடர்பாகவும் தற்போது நிலவும் சட்ட விதிகளில் சில தளர்த்தப்பட்டுள்ளன.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் மற்றும் குறித்த தூர இடைவெளியில் குறித்த அளவை அனுமதிப் பத்திரம் இன்றியும், கொள்வனவு செய்த சீட்டைப் பயன்படுத்தி எடுத்துச் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதோடு குறித்த காணி உரிமையாளர் தனது கட்டட நிர்மாணப் பணிக்கு தேவையான கல், மண் போன்றவற்றை அகழ்தெடுப்பதற்கும் சில விதி விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.இது தொடர்பாக அரச அதிபர்களுக்கு கனியவில் ஆய்வுகள் மற்றும் சுரங்கங்கள் திணைக்களச் செயற்பாட்டு பிரிவின் பணிப்பாளர் அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)




## மரண அறிவித்தல்

**திருமதி தங்கச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை**



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (01.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் திரவியம், சிவபாக்கியம், தவராஜா, கந்தசாமி, சிவராஜா, குணராஜா ஆகியோரின் அன்புத் தாயும் நல்லையா, சுப்பிரமணியம், சிவகாமசுந்தரி, கமலாசினி, இந்திராணி, கிருஷ்ணமலர் ஆகி யோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈஞ்சடி வைரவர் கோயில்,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்
வேலுப்பிள்ளை
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுங்குகிறது ஐரோப்பா

## குளிரால் 43 பேர் சாவு



லண்டன், பெப்.2

ஐரோப்பிய நாடுகளில் கடந்த திங்கட்கிழமை முதல் தொடங்கியுள்ள கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவால் இதுவரை 48 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் பொதுவாக நவம்பர் மாத இறுதியில் பனிக்காலம் ஆரம்பித்து விடுகின்ற போதிலும், வழமைக்கு மாறாக இந்த வருடம் ஜனவரி நடுப்பகுதி வரை கடுமையான பனிப்பொழிவு இடம்பெறவில்லை. எனினும் கடந்த திங்கட்கிழமை முதல், திடீரென கடும் பனிப்பொழிவும், கடுங்குளிரும் ஐரோப்பாவில் உருவெடுத்து எல்லோரையும் நடுங்க வைக்கத் தொடங்கியுள்ளது.

உக்ரைன் நாட்டில் கடும் குளிரால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்துள்ளது. இதில் பெரும்பாலானோர், வீதிகளில் குளிரால் உறைந்துபோய் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் மட்டும் அங்கு 18 பேர் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து உக்ரைனில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வீடில்லாதவர்கள், வீதிகளில் வாழும் அநாதரவற்றோர், முதியவர்கள் என்போருக்கு சூடேற்றும் வசதியுடன் கூடிய கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் நாள்களில் முடிந்தளவுக்கு வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் எனவும் உக்ரைன் அரசு அறிவித்துள்ளது.

இதைப் போன்று ஸ்கண்டிநேவிய நாடுகள், மேற்கு ரஷ்யா, தெற்கு ஸ்பெயின், வடக்கு ஆபிரிக்கா, பிரிட்டன், சுவிஸ் என அனைத்து நாடுகளிலும் கடும் குளிர் நிலவத்தொடங்கியுள்ளது.

போலந்தில் கடும் குளிரால் 10 பேர் உயிரிழந்துள்ளனர். செக்குடியரசில் 3,000 இற்கு மேற்பட்ட வீடில்லாதவர்களுக்கு அந்த நாட்டு அரசு கூடார வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. கடுங்குளிர் மற்றும் பனிப்பொழிவினால் பிரதான புகையிரதப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மத்திய செர்பியாவிலும் 3 பேர் கடுங்குளிரால் உயிரிழந்துள்ளனர்.

கடுங்குளிர் மற்றும் பனிக்காற்று காரணமாக பல்கேரியா - கிரிஸ் - துருக்கி ஆகிய நாடுகளுக்கு இடையிலான விமானப் போக்குவரத்தும், இஸ்தான்புல்லில் இருந்து துருக்கி வரும் விமானங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த வாரத்தில் தான் வரலாற்றில் இதுவரை பார்த்திராத பனிக்காலத்தை ஐரோப்பியர்கள் பார்க்கப் போகிறார்கள் என்று குரோஷிய வானிலை ஆய்வாளர் சோரன் வகுலா தெரிவித்துள்ளார். (ங)

# மியன்மார் வடகொரியாவிடம் அணு ஆயுதம் வாங்கவில்லை


வடகொரியாவிடம் இருந்து அணு ஆயுதங்கள் வாங்க மியன்மார் முயன்றதாக வெளியான தகவல்கள் தவறானவை என்று மறுத்துள்ளார் மியன்மார் அதிபர் தெய்ன் செய்ன். சிங்கப்பூரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர் இது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

**ஈரானும் வடகொரியாவும் அணு ஆயுத தொழில்நுட்பங்களை ரகசியமாக பாகிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகளுக்குக் கடத்தியதாகக் கூறப்படுகின்றது.**

வடகொரியாவும், ஈரானும் அனுமதியின்றி அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. ஈரானும் வடகொரியாவும் அணு ஆயுதத் தொழில்நுட்பங்களை ரகசியமாக பாகிஸ்தான், மியன்மார் ஆகிய நாடுகளுக்குக் கடத்தியதாகவும் கூறப்படுகின்றது. கடந்த வருடம் ராணுவ ஆட்சியில் இருந்து விடுபட்ட மியான்மார், ஜனநாயக பாதையில் செல்வதில் ஆர்வம் காட்டி வருகிறது. நாட்டில் ஜனநாயகத்தை வளர்க்க பல்வேறு நடவடிக்கைகளை அந்த நாடு எடுத்து வருகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கி நாட்டில் அந்நிய முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்பதில் மியன்மார் அதிபர் தெய்ன் செய்ன் உறுதியாக உள்ளார். இந்நிலையில் நான்கு நாள் சுற்றுப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள தெய்ன் செய்ன், ''வடகொரியாவிடம் இருந்து எந்தவிதமான அணு ஆயுதங்களையும் நாங்கள் வாங்கவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. சந்தேகத்தின் அடிப்படையில் சில மேற்குலக நாடுகள் இந்தக் குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்தியுள்ளன''- என்றார். கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மியன்மாருக்குச் சென்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், அமெரிக்காவுடனான தனது உறவை மியன்மார் வலுப்படுத்த வேண்டுமானால், வடகொரியாவுடனான இரகசிய உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# தாக்கியது நாங்கள்தான்

## ஒத்துக் கொள்கிறார் ஒபாமா





பாகிஸ்தானில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியது அமெரிக்காதான் என்று முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஒப்புக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து ஒபாமா மேலும் கூறுகையில், பாகிஸ்தானில் மலைவாழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் தீவிரவாதிகள் அதிகமாக இருந்ததால் ஆளில்லாத விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினோம். இது கோழைத்தனமான நடவடிக்கை அல்ல. அமெரிக்காவின் சாதுரியமான தாக்குதல் என்றும் தெரிவித்துள்ளார்.

கூகுள் சமூக இணையத்தளத்தில் அண்மையில் தோன்றிய ஒபாமா ஒரு மணிநேரம் மக்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

மறைந்திருந்து தாக்கும் இந்தப் போர்முறை குறித்து பெரும் அதிருப்தி உருவாகியுள்ள நிலையில், ஒபாமா துணிந்து அந்தத் தாக்குதல்களை மக்கள் முன்னிலையில் நியாயப்படுத்தியுள்ளார்.

''பாகிஸ்தான் அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மலைவாழ் மக்களின் பகுதிகளில் நடைபெற்ற இந்தத் தாக்குதல் ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லையில் வாழும் அல்குவைதா தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்டது. சி.ஐ.ஏ. உளவு நிறுவனமே இத்தாக்குதல்களை அல்குவைதா மற்றும் தலிபான்கள் மீது திட்டமிட்டுக் கச்சிதமாக நடத்தி வருகின்றது.

2010ஆம் ஆண்டில் 101 தாக்குதல்களும், 2011ஆம் ஆண்டில் 64 தாக்குதல்களும் இவ்வாறு இடம்பெற்றன - என்றார்.

இந்தத் தாக்குதல்களில் பாகிஸ்தானில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்தனர். இதனால் பாகிஸ்தானியர்கள் அமெரிக்கா மீது கடும் கோபத்துடன் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# பெருகும் சனத்தொகை குறையும் உணவு

அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உலகின் உணவு இருப்பு இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றின் பின்னரும் உலக மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வளரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி முன்னேறியுள்ள நிலையிலும், மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன. மக்கள் தொகைக்கு ஏற்ப உலகின் உணவு இருப்பு இல்லை.

அதாவது, இன்றைய மக்கள்தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி, கையிருப்பு ஆகியவை தற்காலிகமானவை. ஆனால், உணவு உற்பத்தியில் நீடித்த நிலைத் தன்மையுடன் வளர்ச்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கிடைக்கவில்லை. அதிலிருந்து மாற சர்வதேச பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றம் தேவைப்படுகிறது.

1990ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசித்தவர்கள் எண்ணிக்கை 46 சதவீதமாக இருந்தது. அது இப்போது 27 சதவீதமாக குறைந்துள்ள போதிலும், நிலையான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவோ, இதை தக்க வைக்கவோ, மேலும் குறைக்கவோ முடியாது- என்றுள்ளது.




சீன அரசு திபெத்தில் தனது அடக்குமுறை நடவடிக்கைகளை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இதை எதிர்த்துப் பல பௌத்த பிக்குகள் தீக்குளித்து உயிரை மாய்த்துள்ளனர். பிக்குகளின் உயிரைக் காப்பதற்காக, திபெத் மீது சீனாவின் இரும்புக் கரம் நீண்டக் கூடாது என்று வலியுறுத்தி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் திபெத்திய பௌத்த மதத் துறவிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# நீதிமன்றில் அசாஞ்சே



லண்டன், பெப்.2

விக்கிலீக்ஸ் இணைய நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே மீது சுமத்தப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை பிரிட்டன் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது.

பலத்த பாதுகாப்புடன் இந்த விசாரணைக்கு அசாஞ்சே வந்திருந்தார்.

''அரசியல் பழிவாங்கல்களுக்காகவே என்னை சுவீடனுக்கு நாடு கடத்த முற்படுகிறார்கள். அதற்காகச் சோடிக்கப்பட்டதுதான் இந்த வழக்குகள். உண்மையில் நான் எந்தத் தவறும் செய்யவில்லை. தவறு செய்தவர்களை மக்கள் முன்னால் பகிரங்கப்படுத்தியது மட்டுமே நான் செய்த தவறு.'' என்று நீதிமன்றில் அசாஞ்சே தெரிவித்தார்.

# ஆப்கானில் நேற்று நேட்டோ வீரர் சாவு

ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் சீருடையை அணிந்து வந்த நபர் ஒருவர் திடீர் என்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நேட்டோ படைவீரர் ஒருவர் மரணமானார்.

மத்திய ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோப் படைமுகாம் ஒன்றின் அருகிலேயே இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. துப்பாக்கிதாரியை ஆப்கான் இராணுவ வீரர் என்று எண்ணி நேட்டோ படைவீரர்கள் அவருடன் உரையாட முற்பட்டபோது அவர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா மீதான பிரேரணை: உலகுக்கு ரஷ்யா எச்சரிக்கை

## உள்நாட்டுப் போரை உருவாக்குமென

**சிரியாவில் நடந்துவரும் வன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்துள்ள அரபு லீக், அந்நாட்டுக்கு எதிராக மேலும் தடை நடவடிக்கைகளை அறிவிப்பது குறித்து எச்சரித்திருந்தது. அதன் அடிப்படையில் இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.**

மொஸ்கோ,பெப்.2

மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் சிரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை உள்நாட்டுப் போரை உருவாக்கும் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு நாடுகளால் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் சிரியாவின் அதிபர் அசாத் தன்னுடைய ஆட்சிப் பொறுப்பைத் துணை அதிபர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிரியாவில் நடந்து வரும் வன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்துள்ள அரபு லீக், அந்நாட்டுக்கு எதிராக மேலும் தடை நடவடிக்கைகளை அறிவிப்பது குறித்து எச்சரித்திருந்தது. அதன் அடிப்படையில் இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. சிரியாவின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றான ரஷ்யா, இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வீற்றோ மறுப்பாணை அதிகாரத்தைப் பிரயோகிக்காது ஒதுங்கி நின்ற அதேவேளை இது வெளிநாட்டுத் தலையீடு இருப்பதற்கான வாய்ப்பையே காட்டுகின்றது என ரஷ்யாவின் துணை வெளிவிவகாரத்துறை அமைச்சர் கென்னடி கட்டிலோவ் தெரிவித்துள்ளார். (ந)

# சீனா அதிகாரிகள் சூடானில் கடத்தல்

சூடானிலுள்ள சீனத் தூதரக அதிகாரிகளை தெற்கு சூடான் தீவிரவாதக் குழுக்கள் கடத்திச் சென்றுள்ளதாக சீன இணையத் தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

சூடானின் தெற்கு கோர்டோபான் பகுதியில் உள்ள சீனத் தூதரக அதிகாரிகள் சுமார் 29 பேரை தீவிரவாதிகள் கடத்தியுள்ளனர். கடத்தப்பட்டவர்களில் 17 பேர் சூடான் ராணுவத்தினரால் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டாலும், மீதமுள்ளவர்கள் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கியுள்ளனர் என இணையத் தளம் தகவல் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சூடான் நாடு தெற்கு, வடக்கு என இரண்டாகப் பிரிந்த பின்னர் தெற்கு சூடானைச் சேர்ந்த மக்கள் விடுதலைப் படையினர் இந்தச் சம்பவத்தில் ஈடுபடுவதாகக் குற்றச் சாட்டுக்கள் கூறப்படுகின்றன. (ந)

# ருமேனிய முன்னாள் பிரதமருக்கு சிறை



ஊழல் குற்றச்சாட்டின் பேரில் ருமேனியாவின் முன்னாள் பிரதமர் அட்ரியன் நடசாவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாக ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தியதாகவும் வழக்குத் தொடரப் பட்டு இருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதி மன்றம் முன்னாள் பிரதமர் நடசாவுக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப் பளித்தது.

ருமேனியாவின் முன்னாள் பிரதமரான அட்ரியன் நடசா 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையில் பதவி வகித்தார். இவர் மீது பல்வேறு லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன (ந)

# சிரியாவின் ஸ்கூபா நகரை இராணுவம் மீட்டது

சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டக்காரர்கள் வசம் இருந்த முக்கிய நகரான ஸ்கூபாவை இராணுவம் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி வரும் நிலையில் சிரியாவின் முக்கிய நகரங்கள் சில போராட்டக்காரர்கள் வசம் இருந்து வந்தன. இந்தநிலையில் நேற்று முன்தினம் முக்கிய நகரமான ஸ்கூபாவை கைப்பற்றுவதற்காக இராணுவம் அனுப்பப்பட்டது. இதன்போது 2 ஆயிரம் வீரர்கள் 50 டாங்கிகளுடன் சென்றனர். இவர்களுக்கும் புரட்சிப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஸ்கூபா நகரை இராணுவம் கைப்பற்றியது.

இந்தச் சண்டையில் 19 பேர் இறந்துள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை சிரியாவின் கலவரத்தில் இதுவரை 5400 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா சபை தகவல் வெளியிட்டுள்ளது. (ந)

# சிறுவனின் வயிற்றுக்குள் கரு



பெருநாட்டில் 3 வயது சிறுவனின் வயிற்றுக்குள் குழந்தையின் கரு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தகவலை அந்த நாட்டின் சிலாவோ நகரைச் சேர்ந்த மருத்துவர் கார்லோஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மருத்துவர் கார்லோஸ் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அசாதாரண விளைவு 5 லட்சம் பேரில் ஒருவருக்கு ஏற்படலாம். இரட்டைக் குழந்தை கருக்கள் தாயின் வயிற்றில் உருவாகி அதில் ஒன்று சரியாக வளர்ச்சி பெற்று குழந்தையாக மாறியதும் மற்றொரு கரு அதனுள் ஊடுருவி வளர்ச்சி பெற முடியாமல் போனதால் இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். குறிப்பிட்ட சிறுவனின் வயிற்றில் இருக்கும் கருவில் மூளை, இதயம், நுரையீரல், குடல் போன்ற உறுப்புகள் எதுவும் உருவாகவில்லை என்று தெரிவித்த மருத்துவர் விரைவில் சிறுவனின் வயிற்றில் இருக்கும் கருவை அகற்ற இருப்பதாகத் தகவல் தெரிவித்தார். (ந)

# பாதுகாப்பை அதிகரித்தது சீனா

திபெத் மீதான சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து, புத்தமதத் துறவிகள் தீக்குளிக்கும் போராட்டங்கள் அதிகரித்து வருவதை அடுத்து, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, திபெத்தில் உள்ள புத்த கோவில்கள் மற்றும் மடாலயங்களில், சீனா பாதுகாப்புக்களை அதிகரித்துள்ளது.

இந்தத் தீக்குளிப்பு திபெத்தில் சீனாவுக்கு எதிரான போராட்டத்தைத் தூண்டி விடும் என்பதால், விரைவில் புத்த மடாலயங்களின் பாதுகாப்பை சீனா அதிகரிக்க முடிவு செய்தது.

இந்நிலையில், திபெத் தின் சீன உயர் அதிகாரி, நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில், புத்த கோவில்கள், மடாலயங்கள், திபெத்துக்குள்வரும் தேசிய நெடுஞ்சாலைகள் என, அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார். (ந)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16.08.1925 — உதிர்வு 03.01.2012



### கந்தர் ஐயாத்துரை

கண்ணை இமை காப்பதுபோல் காத்து
எங்களின் நல் வாழ்விற்கு வழி காட்டிய
அகல் விளக்கு அணைந்ததுவோ!
ஐயா என்று அழைக்க யாருளரோ? இவ்வுலகில்
அறிவுப்பசி களைந்து அகிலத்தில் மாந்தரென வாழவைத்த
எங்கள் அன்பு ஐயா மறைந்து திங்களொன்று கழிந்ததுவே
உத்தமரே உங்கள் பூதவுடல் பிரிந்தாலும்
நீங்கள் எமக்குள்ளே வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வில்லை இல்லம்,
டச்சு வீதி,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(13774) (6,10)



## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடமாகாண சபை
## கேள்விகளுக்கான கோரல்

| | |
|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும் : | கடன் - 2626 SRI- முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்,பகுதி C - அடிப்படை சமுதாயத்திற்கான சேவைகளை மேம்படுத்தல் |
| நிதி மூலம் : | இலங்கை அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி : | இறுதித் திகதி 01.03.2012 : பிற்பகல் 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | வேலையின் பெயர் | கட்டுமானக் காலம் |
|---|---|---|---|---|
| 1. | CAREP/NPC/ID/NCB/W/11-18 | கிளிநொச்சி | புதுமுறிப்பு குளம் புனரமைப்பு | 12 மாதங்கள் |
| 2. | CAREP/NPC/ID/NCB/W/11-19 | முல்லைத்தீவு | தண்ணிமுறிப்பு குளம் அணைக்கட்டு வேலை புனரமைப்பு | 12 மாதங்கள் |

1. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திட்டப் பணிப்பாளர், முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம், நீர்ப்பாசனம், வ.மா. / தலைவர் கருத்திட்ட பெறுகைக்குழு அவர்கள் 02 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளைக் கோருகிறார். வேலைகளின் பெயர்கள், கட்டுமானக் காலம் என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
2. கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள், கேள்விப்பத்திரத்தினை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்யவேண்டியவை, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் திறத்தல், கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விவரங்களை கேள்வியாளர்கள் 31.01.2012 ஆம் திகதியில் Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலை பார்வையிடுவதன்மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

எந்திரி க.சோ.சிவபாதம்.
திட்டப் பணிப்பாளர்,
முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்,
நீர்ப்பாசனத் திணைக்களம், வ.மா.
கச்சேரி ஒழுங்கை, கிளிநொச்சி.

தொலை பேசி இல. 0212285472 தொலை நகல் இல: 0212285440 மின்.அஞ்சல்: npirri @ sltnet. lk.

(சி/ 8745)(45-6)



## CIMA

Foundation New Batch Starts on 04th - Feb. 2012 @ CAPSTONE

Tel. 021 222 0727,021 720 0777



## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, பூநாறிமரலேனில் இரண்டு பரப்பு காணியில் கிணறு, சுற்று மதில் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடொன்று விற்பனைக்கு உண்டு.

தொ.பே. 0212222537/0750413579/ 0262220259

(தரகர் தேவையில்லை) (13716)



## தேவை

சிறிய ரக கூலர் மொடல் வாகனம் விலைக்கு அல்லது மாதாந்த வாடகைக்குத் தேவை

தொடர்பு: தொ.பே. 077 5717385



## தேவை

கணினி, ரியூசன் கற்பிக்க வீடு அல்லது இடம் தேவை. சிறிய காணி விற்பனைக்கு இருந்தாலும் சிறந்தது.

தொடர்பு: தொ.பே. 077 8997289

15, ஐயனார் கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.



## சேவிஸ் - கூறுவிலை

எமது சங்கப் பாவனையிலுள்ள பின்வரும் இயந்திரங்கள் மாதாந்தம் சேவிஸ் (Service) செய்வதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே இயந்திரங்களைப் பார்வையிட்டு மூடிய கூறுவிலையை 10.02.2012 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைமையகத்திலுள்ள கூறுவிலைப் பெட்டியில் சேர்ப்பிக்கவும்.

1. Electronic Milktester (எலக்ரோனிக் மில்க்ரெஸ்ரர்)
2. Cream Separator (கிறீம் செப்பரேற்றர்)

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் வாழ்வுரிமையை பறிகொடுக்கும் தமிழர்கள்



## சட்டசபையில் தே.மு.தி.க. துணைத்தலைவர்

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தமிழர்களின் பகுதிகள் இருப்பதால் தமிழர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவதில்லை.

சென்னை,பெப்.2

இலங்கையில் தமிழர்களின் வாழ்வுரிமையே பறிக்கப்படுகின்றது என்று தமிழக சட்டசபை எதிர்கட்சியான தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுநர் உரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி குறிப்பிடப்படவில்லை. வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்குச் சென்று அங்கு வீடுகள் கட்டும் திட்டத்துக்கு உதவிகளைச் செய்ததாக வெளிவந்த செய்திகளைப் பார்த்தோம்.

ஆனால், அங்குள்ள தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதாகவும், கடத்தப்படுவதாகவும், சிறையில் தள்ளப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

அது குறித்து ஆராய இலங்கை அரசே நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுவும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதையும், கடத்தப்படுவதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் 2 லட்சம் சிங்கள இராணுவத்தினர் உள்ளனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தமிழர்களின் பகுதிகள் இருப்பதால் தமிழர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவதில்லை.

மக்கள் அடிமைகளாக உள்ளனர். தமிழர்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கில் மனிதாபிமான அடிப்படையில் வீடு கட்டித் தருவது உள்ளிட்ட பணிகளை இந்தியா மேற்கொள்கிறது.

ஆனால் தமிழர்களின் வாழ்வுரிமையையே பறிக்கும் செயல்தான் அங்கு நடக்கிறது. வெளியுறவு அமைச்சர் அல்லது அதிகாரிகள் முதல்வரைச் சந்திக்கும் போது இந்த நிலையை அவர்களிடம் எடுத்துக் கூறவேண்டும் - என்றார் அவர். (வ)

# விமானப் படையை நவீனமாக்கும் இந்தியா



பிரான்ஸில் உள்ள பிரபல நிறுவனத்திடமிருந்து அதி நவீன ரக போர் விமானங்களை இந்தியா வாங்கவுள்ளது.

அந்த நாட்டைச் சேர்ந்த டஸ்ஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடமிருந்தே ரூ. 50 ஆயிரம் கோடி மதிப்பிலான 126 அதி நவீன டஸ்ஸால்ட் ரபேல் ரக போர் விமானங்களை இந்திய விமானப்படை வாங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் , இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளில் இறுதிக்கட்டக் பேச்சை அடுத்து மத்திய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் பிரான்சின் விமான போக்குவரத்துத் துறை இடையே இடம்பெறும் பேச்சுக்கு பின்னர் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதற்காக மத்திய பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவை குழு இறுதி குறிப்பு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் படி 18 ரபேல் ஜெட் விமானங்கள் 2015ம் ஆண்டு முதல் பிரான்ஸிலிருந்து வரும். எஞ்சிய 108 விமானங்கள் 6 ஆண்டுகளில் இந்தியாவில் தயாரிக்கப்படும். இதனிடையே இந்தியாவின் முடிவுக்கு பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோசி பாராட்டு தெரிவித் துள்ளார். இந்த ஒப்பந்தத்திற்காக 5 ஆண்டுகள் காத்திருந்ததாகவும் தெரிவித்தார். (வ)

# அசாம் மாநில பொலிஸாரின் கின்னஸ் சாதனை

அசாம்,பெப்.2

இந்தியாவில் அசாம் மாநிலத்தை சேர்ந்த பொலிஸார் ஒருவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

அசாம் மாநில பொலிஸ் துறையில் பணிபுரிந்து வரும் அபிஜித் பருவா (வயது 22), 156.2 கி.மீ தூரத்தை 24 மணி நேரம் தொடர்ந்து காலால் ஓடி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

ஜோர்கத் நகரில் கடந்த திங்கட்கிழமை மாலை 3.56 மணிக்கு தனது ஓட்டத்தை ஆரம்பித்த மறுநாள் செவ்வாய்கிழமை மாலை 3.56 மணிக்கு ஓட்டத்தை முடித்தார்.

இதன்மூலம் உலகிலேயே அதிக தூரத்தை ஓட்டத்தின் மூலம் கடந்து சாதனை படைத்துள்ளார் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதனையடுத்து இவரின் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளதாக கின்னஸ் புத்தகத்தின் இந்திய பிரதிநிதி சந்திர சேகர் திவாரி தெரிவித்தார். (வ)

# பெண் கைதிகளை பரிசோதிக்க கருவி

திகார்,பெப்.2

இந்தியாவிலேயே முதன் முறையாக பெண் கைதிகளை பரிசோதனை செய்வதற்காக திகார் சிறையில் பரிசோதனைக்கருவி (ஸ்கானர்) நிறுவப்பட்டுள்ளது.

இந்த பரிசோதனைக் கருவி குறித்து திகார் சிறை அதிகாரி நீரஜ் குமார் தெரிவித்ததாவது:

திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண் கைதிகள் போதை மருந்துகள், செல்போன் போன்றவற்றைக் கடத்துவதாக தகவல் கிடைத்தது.

பெண் கைதிகளை பரிசோதனை செய்வதற்கு பெண் பொலிஸார் இருப்பினும் கைதிகள் அவர்களுக்கு முழு ஒத்துழைப்புத் தராமல் இருந்தனர்.

இவர்களை பரிசோதனை செய்வ தற்காக சிறையில் தற்போது நிறுவப்பட் டுள்ள ஸ்கேனர் கருவி மூலம் இரண்டு சுற்றுக்கள் முழுமையாக பரிசோதிக்கப்பட்டது. சோதனை திருப்திகரமாக முடிந்தது. இனிமேல் பெண் கைதிகளைப் எளிதாக பரிசோதிக்க முடியும் - என்றார். (வ)

# கரையொதுங்கியது கடல் பசு



ராமேஸ்வரம் சேராங்கோட்டை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் ஆண் கடல் பசு ஒன்று செவ்வாய்க் கிழமை கரை ஒதுங்கியது. 8 அடி நீளமும், 5 அடி அகல மும், சுமார் 500 கிலோ எடை கொண்டதாகவும் இருந்த இறந்துபோன இந்தக் கடல் பசுவின் உடலில் காயம் எதும் இல்லை.

தனுஷ்கோடி கடலோரப் பகுதியில், விசைப்படகுகள் மூலம் தடை செய்யப்பட்ட இரட்டை மடியில் மீன்பிடித்த போது, வலையில் சிக்கி பின்னர் இறந்திருக்கக்கூடும் என்றும், அதை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்து பின்னர் கடலில் வீசியிருக்கலாம் என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடல் பசுவை வலையில் பிடித்துக் கொன்றால், தமிழக வனத்துறை சட்டப்படி 7 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஏரியில் விழுந்தது விமானம்

இந்திய விமாணப் படைக்கு சொந்தமான பயிற்சி விமானம் ஒன்று சென்னை வண்டலூரை அடுத்த ஊரப்பாக்கம் அய்யஞ்சேரியில் உள்ள ஏரியில் விழுந்து நொறுங்கியது. பயிற்சி விமானிகள் இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

கிழக்குத் தாம்பரத்தில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த 2 பேர் பயிற்சி விமானத்தில் காலை 10.30 மணியளவில் சென்றனர். வழியில் விமானத்திலிருந்து சத்தம் கேட்டது.

இதனையடுத்து அவர்கள் பரசூட் மூலம் கீழே குதித்தனர். விமானம் ஊரப்பாக்கம் பகுதியில் உள்ள ஐய்யஞ்சேரி ஏரியில் மூழ்கியது. விமானிகளில் ஒருவர் வீட்டின் மேற்கூரை மேல் விழுந் தார். இதில் அவருக்கு முதுகில் லேசான காயம் ஏற்பட்டது. மற்றொருவர் மின்சார வயரில் மேல் பட்டு கீழே விழுந்தார்.

இதனைப் பார்த்த மக்கள் உடனடியாக தீயணைப்புத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் விரைந்து வந்து காயமடைந்த 2 பேரையும் மீட்டு இந்திய விமானப் படை விமானிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

இந்திய விமானப்படை அதிகாரிகள் ஹெலிகொப்டர் மூலம் விரைந்து வந்து, காயமடைந்தவர்களை மீட்டு பரங்கி மலை ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

பின்னர் ஏரியில் விழுந்த விமானத்தை மீட்கும் முயற்சியில் விமானப்படை அதிகாரிகளும், தீயணைப்புப் படை வீரர்களும் தீவிரமாக ஈடுபட்டனர். (வ)

# பள்ளத்தில் பாய்ந்தது 'ஜீப்' 4 பேர் சாவு: 10 பேர் காயம்



மூணாறு, பெப்.2

ஏலத்தோட்ட பணியாளர்களை ஏற்றி கொண்டு அதிவேகமாக வந்த ஜீப், போடி மேட்டு அருகே பள்ளத்தில் கவிழ்ந்ததில் தாய், மகள் உட்பட பெண் தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழந்தனர். 10பேர் காயமடைந்தனர்.

கேரளா மாநிலம், வட்டப்பாறை பகுதியில் உள்ள ஏலத்தோட்டத்துக்கு போடி சொக்கநாதபுரத்தை சேர்ந்த தொழிலாளர்கள் ஜீப்பில் நேற்றுமுன்தினம் பணிக்குச் சென்றனர். நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு போடி மேட்டு அருகே வந்த போது ஜீப் நிலைதடுமாறி 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது.

உருக்குலைந்த ஜீப்பின் இடிபாடுகளில் சிக்கிய ராஜாத்தி, 55,சம்பவ இடத்திலும் இருதயமேரி சாந்தாம்பாறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர். இருதய மேரியின் மகள் ஸ்டெல்லா, ஷீலா நெடுங்கண்டம் ஆஸ்பத்திரியில் இறந்தனர். ஜீப்பில் இருந்த அந்தோணியம்மாள், கன்னியம்மாள், டிரைவர் விஜயன் உட்பட 10 பேர் காயமடைந்தனர். இவர்கள் கேரள, தமிழக ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து நடந்த இடம் ஏலத் தோட்டம் என்பதால், ஆள்கள் நடமாட்டம் இல்லை. எனவே மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டது. விபத்துத் தொடர்பாக அந்தப் பகுதிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

# கச்சதீவுக்குச் செல்ல இலவச பயண ஏற்பாடு

## தமிழக அரசிடம் கேட்கிறார் பாதிரியார்

கச்சத்தீவு அந்தோணியார் கோயில் விழாவுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்ததையடுத்து, திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களை தமிழக அரசு இலவசமாக அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ராமேஸ்வரம் வேர்கோடு பாதிரியார் மைக்கில் ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கச்சத்தீவு அந்தோணியார் கோயில் விழா மார்ச் 2ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. மறுநாள் சிலுவைப்பாதை, தேர்பவனி, 4 ஆம் திகதி திருப்பலி மற்றும் கொடியிறக்கம் இடம் [illegible] யாழ்ப்பாணம் மறைமாவட்ட அதிபர் [illegible] சவுந்தரநாயகம், நெடுந்தீவு பாதிரியார் அமல்ராஜ் ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

திருவிழாவில் தமிழக பக்தர்கள் கலந்து கொள்ள வேண்டி யாழ்ப்பாணம் மறை மாவட்ட அதிபரிடம் இருந்து அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

விழாவில் பங்கேற்க ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உட்பட தமிழகத்தின் பல பகுகளில் இருந்து அதிகளவில் பக்தர்கள் செல்ல முடிவு செய்துள்ளனர். மூன்று நாள் திருவிழாவாக இருந்தாலும் எதிர்வரும்மார்ச் 3ஆம் 4ஆம் திகதிகளில் மட்டுமே தமிழக பக்தர்கள் ராமேஸ்வரத்தில் இருந்து படகில் செல்ல அனுமதிக்கப்படும். (வ)

# அமைச்சர் சிதம்பரம் மீது டில்லி முதல்வர் குற்றச்சாட்டு



கொமன்வெல்த் போட்டி ஏற்பாடுகள் தாமதமடைந்தமைக்கு ப.சிதம்பரத்தின் மீது டில்லி முதல்வர் ஷீலா தீட்சித் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தலை நகர் புதுடில்லியில் நடந்த கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் அதிகமான குளறுபடிகள் ஏற்பட்டன.

போட்டி ஏற்பாடுகளில் பல ஆயிரம் கோடி ஊழல் செய்த கொமன்வெல்த் போட்டிகளுக்கான ஒருங்கிணைப்பு தலைவர் சுரேஷ் கல்மாடி கைது செய்யப்பட்டார். இதற்கிடையே போட்டி ஏற்பாடுகளில் ஏற்பட்ட தாமதம் பற்றி விசாரிக்க சுங்லு என்ற ஆலோசனைக்குழு நிர்ணயிக் கப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழு டில்லி முதல்வர் ஷீலா தீட்சித் மீது குறை கூறி அறிக்கை கொடுத்திருந்தது. இதற்கு ஷீலா தீட்சித் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக அவர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக்கடிதத்தில் எழுதப்பட்ட விடயம் தற்போது வெளியாகியுள்ளது. அதில் அவர் தெரிவித்ததாவது:

கொமன்வெல்த் போட்டி ஏற்பாடுகள் தாமதம் அடைந்தமைக்கு மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்தான் காரணம். மேலும் திட்ட ஏற்பாடுகளுக்கு நிதி அமைச்சகம் தேவைக்கு ஏற்ப உடனுக்குடன் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வைதீஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென



## கொண்டாடலாம்

யுத்தத்தால் வேதனைப்படும் தமிழனின் நெஞ்சை ஆறுதல் படுத்துவதால் 'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்குச் சொந்தமானது என்று உரிமை கொண்டாடலாம். பச்சிளம் குழந்தை, கர்ப்பிணித் தாய்மார், கணவன், மனைவி, பிள்ளைகள் என்று கொடிய போரால் தமிழர்கள், ஊதாத புல்லாங் குழலாய் சிதைக்கப்பட்டார்கள். தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. உடைமைகள் சூறையாடப்பட்டன. போர் முடிவடைந்தும் தமிழர்கள் இன்னும் போர் வடுக்களில் இருந்து மாறவில்லை.

போர் வடுக்களால் நிறைந்து கிடக்கும் மனங்களுக்கு 'வை திஸ் கொலைவெறி' பாடல் ஆறுதல் கூறுவதாக அமைகின்றது. தமிழன் வைராக்கியத்தில் பாடுவது போல் உள்ளது. நிம்மதி தேடி அலையும் தமிழனுக்கானது 'வைதிஸ் கொலை வெறி' என்னும் பாடல். இதனைத் தமிழர்கள் கொண்டாடலாம் என்பது எனது கருத்து.

**ரி.கவிவாணி, கிராஞ்சி.**




இயற்கையாகவே ஒரு பாடல் கேட்போருக்கு ஒன்பான் (நவரசம்) சுவைகளையும் தோற்றிவிப்பதாக அமைய வேண்டும். இதுவே தமிழர்களுடைய பாரம்பரியம்.

ஆனால் இன்று வெளியாகி உள்ள 'வைதிஸ் கொலைவெறி' பாடல், தமிழர் தம் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் குழி தோண்டிப் புதைப்பதாகவே உள்ளது.

இந்தப் பாடலில் முழுக்க முழுக்க ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்தியுள்ளனர். இது தமிழையே கொச்சப் படுத்துவதாக அமைந்துள்ளது.

பாட்டுக்கொரு புலவன் ஆன பாரதி கூட,

''நாட்டினிலுங் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைபறி

## கொண்டாட முடியாது

கொடுத்தேன் பாவியேன்'' என்று பாடுவன் மூலம் ஒரு பாடல் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறியுள்ளார். ஒரு பாட்டு என்பது மக்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதோடு கலாசாரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்க வேண்டும்.

இவற்றில் ஏதாவது ஒன்றை வெளிப்படுத்தி நிற்கிறதா இந்தப் பாடல்? இல்லை. அப்படி இருக்கும் போது இது எவ்வாறு பாடல் ஆகும்?

இதனை எப்படி நமது தமிழ் சமுதாயம் கொண்டாட முடியும்? என்று இறுதியாகவும் உறுதியாகவும் அடித்துக் கூறுகிறேன்.

**நிரஞ்சலா ஜெயமனோகரன்,**
**வல்லை வீதி, சங்கானை.**

# நிலவின் மீது கொண்ட காதல்



இரவுகள் உறங்கிக் கொண்டிருந்தன
இளம் தென்றல் தொட்டுச் சென்றது
கடற்கரையில் நான்
கனிசமான அந்தக் குளிரில் நான் மட்டுமே

என்னோடு தனிமையும் இனிமை கண்டது
அலைகள் என்பாதங்களைத் தொட்டுச் சென்றன

ஏதோ ஒரு ஆழமான சிந்தனையில் மனம்
கண்கள் வானத்தை வெட்டாமல் பார்த்தன
மனம் மட்டும் அலையோடு அலை பாய்ந்தது
திடீரென வானில் வெண்மை ஒளி

பிரகாசமான அந்த நிலவு
நடக்கையில் என்னோடு நடந்தது
மனதில் ஆயிரம் பட்டாம்பூச்சி
மட்டுப்படுத்தப்பட முடியாத விருப்பம் நிலவின் மீது

அதன் அருகில் செல்ல ஆசை -என்
கண்களில் நீர்த்துளி கடலில் கரைந்தது
சட்டென்று இரவு விழித்துக் கொண்டது
என் கண்களும் விழித்துக் கொண்டன
எதுவும் கனவில் மட்டுமே இனிமை இயற்கையே

கு.சுவித்ரா,
யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி.

## அவதாரம்

வெள்ளையர்களின்
அநீதிகளை ஒடுக்கி
நீதிகளை நிலை நாட்ட
பாரதத்தில் உதித்தாள்
ஒரு ஜான்சிராணி
தமிழ் இன
விடுதலைக்காக ஈழத்தில்
உதிப்பாள் ஓர் ஈழராணி

**வ.வசி, சாவகச்சேரி**

## வார்த்தைகள்

என் கவிதையிலிருந்து மறைந்த
என் வார்த்தையை
தேடியலைந்தேன்
என்னவள் படுத்திருந்த கட்டிலின்
மீது அவளது தூக்கத்தை
இரசித்த படி .....



## நல்ல கனவுகள்

உன்னுடைய கணவன்
ராமனாக வர எண்ணாதே
நல்லவனாக வர
எண்ணு ஏன் என்றால்
ராமன் கூட ஒரு கட்டடத்தில்
தன் மனைவியை
சந்தேகப்பட்டவன்

**விதுசரன்**

கடந்த மாதம் இடம்பெற்ற விவாத மேடைப் பகுதியில் 'தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று பாரம்பரியங்களை மீறிக் கொண்டாடப் படுகின்றது' என்ற அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்த அணிக்காக வாக்களித்தவர்களில்


1. அரிகரன் பிரவீனா- 6 ஆம் வட்டாரம், அனலைதீவு.
2. கருணாகரன் சோபிகா - சங்கத்தானை, சாவகச்சேரி.
3. தே.விஜிதா - சுன்னாகம்

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர் : நிதர்சனா, நீர்வேலி.

மேலும் சிறந்த ஆக்கங்களை அனுப்பியவர்கள்

* ஆ.ஜீவகுமார்- அக்கரப்பத்தனை
* ப.எழிரசி - தம்பசிட்டி
* பே. வனஜா - சாவகச்சேரி
* கே.எஸ். சிவஞானராஜா - கொக்குவில்
* இ.சாருஜன் - மீசாலை.

# சுவைக்க 12 துளிகள்



* உன்னுடைய நோக்கம் தூய்மையானது என்றால் நீ கடலின் மீது கூட நடக்கலாம்.
* குழம்பிய குட்டையில் முகம் தெரியாது. குழப்பமான உள்ளத்தில் நியாயம் தெரியாது.
* பிறர் உழைப்பில் வாழ்பவன் சமூக ஒட்டுண்ணி
* உழைப்புத்தான் உயர்வுக்குத் தலைவாசல்
* படித்தவன் எல்லாம் பண்பாளனல்ல, பண்பாளன் எல்லாம் படித்தவன் அல்ல.
* வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.
* தாமரையில் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை.
* தமிழை இழந்ததால் தன்மானத்தை இழக்கின்றாய். ஆங்கிலத்தை இழந்ததால் தனிமைப்படுத்தப்படுகிறாய்.
* வாழ்க்கை ஒரு அற்புதமான மணமலர். அதனை கசக்காது கலைக்கண் கொண்டு காண வேண்டும்.
* அழகற்றதென்று எதனையும் ஒதுக்கிவிட வேண்டாம். ஏனெனில் அங்கேயும் ஒரு ஆன்மா துடித்துக் கொண்டிருக்கும்.
* ஒரு வௌவால் வீட்டுக்கு இன்னொரு வௌவால் வந்தால் அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்கும்.
* எல்லா முயற்சிகளும் ஏளனம் மற்றும் எதிர்ப்புக்குப் பின்னே ஏற்கப்படும்.

**செ.சாருகா, உச்சுவீதி, சாவகச்சேரி.**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென சொந்தம்**

| கொண்டாடலாம் | கொண்டாடமுடியாது |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ................................................

முகவரி: ................................................

அடையாள அட்டை இல..

................................................

உங்கள் தீர்ப்புக்களை 23.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :- ................................................

முகவரி :- ................................................

................................................

................ திகதி ................ கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்.மணிக்கூட்டு வீதி வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தின் சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச -313)

***

குப்பிளான் சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 45 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் காலை, மாலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். இந்த ஆலயத்தின் திருப்பணிகள் கடந்த ஒன்றரை வருடங்களாக இடம்பெற்றுள்ளன. (ச-313)

***

நீர்வேலி வடக்கு காமாட்சியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் ஆறாம் திகதி திங்கட்கிழமை திருவிழா நிறைவடையவுள்ளது. தினமும் காலை அபிஷேக பூசைகளும், மாலை சுவாமி வீதியுலா நிகழ்வும் இடம் பெறும். (ச-313)

# சரியாக நெறிப்படுத்தப்படாத பிள்ளைகளே மதுவுக்கு அடிமை

### யாழ். மதுவரிப் பரிசோதகர் கூறுகிறார்

**மதுவை அருந்திவிட்டு வீதிகளில் அட்டகாசம் புரிவோர் 'தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்' தண்டிக்கப்படவேண்டியவர்கள்.**

யாழ்ப்பாணம்,பெப்.2

வயது குறைந்த இளைஞர்கள் மதுவகைகளை அருந்துகின்றமை கவலையைத் தருகிறது. சரியான முறையில் நெறிப்படுத்தப்படாத பிள்ளைகளே இவ்வாறான நிலைக்கு ஆள்படுகின்றனர் என்று யாழ்.மதுவரிப் பரிசோதகர் என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளைகள் மது பாவித்தால் பெற்றோர் அதனைத் தண்டித்தல் வேண்டும். இவர்களுக்கு அப்பால் சமூகத்தவர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சில இளைஞர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அது எல்லோரிடமும் தீய மனப்பான்மையை உருவாக்குகிறது. மது அருந்திவிட்டு வீதிகளில் நின்று அட்டகாசம் செய்வதும், வீதியால் சென்று வருவோருக்கு இடையூறு விளைவிப்பதுமாகக் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் 'தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்' தண்டிக்கப்பட வேண்டியவர்களாகின்றனர்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளது நடைமுறை, போக்குவரத்து, செயற்பாடுகளைக் கண்காணித்தல் வேண்டும். இளைஞர்கள், தாமாக உணர்ந்து சரியான வழியில் செல்லுதல் வேண்டும். தவறான வழியில் செல்ல எத்தனித்தல் கூடாது.

மதுபாவனை மட்டுமன்றிப் புகைப்பிடித்தலும் அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது. இவற்றால் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கப்படுகிறதே தவிர நன்மையான எதுவும் ஏற்படப் போவதில்லை.

கடந்த வருடம் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச்சட்டத்தின் கீழான வழக்குகள் அதிகரித்துள்ளதைக் காண முடிந்துள்ளது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர்களை வேறு விளைவுகள் ஏற்படாத வகையில் பெற்றோர் தண்டித்தல் வேண்டும். பெற்றோர்களையும் தாண்டி சமூகத்தவர்கள் இதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொலிஸார் எந்நேரமும் எந்த இடத்திலும் கடமையில் ஈடுபட முடியாது. எனவே இவற்றை உணர்ந்து அனைவரும் இளைஞர்கள் மது பாவித்தலை தடை செய்ய வேண்டும்- என்றார். (ச-4)

## சன சமூக நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, பெப்.2

அல்வாய் மனோகரா சன சமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக ந.துரைராஜாவும் உப தலைவராக கா.சுந்தரலிங்கமும் செயலாளராக சீ.இரத்தினேஸ்வரனும் உபசெயலாளராக ம.சபாமணியும் பொருளாளராக ச.ஸ்ரீதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக ந.அரியநாயகம், ம.கணேசலிங்கம், த.காந்தரூபன், பா.பிரதீப், ம.நிதர்சன், க.பரணிதரன், வெ.துஷ்யந்தன், த.இராஜேஸ்வரன், ஸ்ரீ. ஸ்ரீரமணன், க.ஜெயதர்சன் ஆகியோர் தெரிவாகினர். (ச-236)

# விளையாட்டு ஆர்வலர்கள் விதிகளை அறிய வேண்டும்

யாழ்ப்பாணம்,பெப்.2

விளையாட்டு ஆர்வலர்கள் விளையாட்டு விதிகளையும் சட்டங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். வெறுமனே உணர்ச்சி வசப்பட்டு செயற்படுவதால் குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்படுமே அன்றி விளையாட்டை வளர்த்தெடுக்க முடியாது என்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி யின் அதிபர் அருட் தந்தை எஸ்.ஜேசுதாசன் தெரிவித்தார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு அணிகளும், ஒரு அணியினர் மற்றஅணியினருக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் மோதியுள்ளார்கள். இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்பதற்காகக் காட்டிய ஆர்வம் பாராட்டத்தக்கதாகும்.

வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டிய கடமைப்பாடு அனைவருக்கும் உண்டு. இதனை நாம் செய்வதற்கு முதலில் கழகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விளையாட்டின்போது ஆதரவாளர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் குழப்பங்களை உண்டாக்கக்கூடாது. ரசிகர்கள் ஆதரவாளர்களாகவும் ரசிகர்களாகவும் இருக்க வேண் டும்.

விளையாட்டுக் கழகங்கள் வெற்றி பெறுவதுடன் நின்றுவிடக் கூடாது.

மேலும் பயிற்சிகளைப் பெறவேண்டும். இதன் மூலம் நாம் இங்கு மட்டுமல்ல வட மாகாணத்தைக் கடந்தும் செல்லக் கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும். மாகாணம் கடந்து தேசியம் சென்று எமது வீரர்களை சர்வதேச மட்டம் வரை கொண்டு செல்ல வேண் டும்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் வெற்றிகளைப் பெற முடியாது. அது பெரும் குழப்பத்தையே உண்டாக்கும்.

அமைதியாகவும் நல்ல முறையிலும் விளையாடினால் தேசிய மட்டம் செல்வதுடன் நில்லாது வெளிநாடுகளுக்குச் சென்று கூட சாதனை புரிய முடியும்- என்றார். (ச-86)



நயினாதீவு புவனேஸ்வரி கலையரங்கில் கனடாவில் வசிக்கும் நயினாதீவைச் சேர்ந்த சந்திரகுமார் இசைக்கச்சேரி நிகழ்த்துகிறார்.

## கூட்டம்

நீர்வேலி தெற்கு கந்த சுவாமி ஆலயத்துக்கு தெற்கு வீதியில் அமைந்துள்ள பாலர் பகல் விடுதியை அபிவிருத்தி செய்வது தொடர்பான கூட்டம் அண்மையில் பாலர் பகல் விடுதி மண்டபத்தில் அத்தியார் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற உப அதிபர் ஐ.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலன் கலந்து கொண்டார். பாலர் பாடசாலையினதும் பகல் விடுதியினதும் அபிவிருத்தி தொடர்பாக இந்த நிகழ்வில் கலந்துரையாடப்பட்டன. (ச-313)

## கலைவிழா

யாழ்ப்பாணம்,பெப்.2

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.குண நாதனும், அவரது பாரியார் பங்கஜவல்லி குணநாதனும் கௌரவிக்கப்பட்டனர். (ச-38)

## கௌரவிப்பு நிகழ்வு

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி யின் முன்னாள் அதிபரும், யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய இ.குணநாதனைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நீர்வேலி கணேசா முன்பள்ளியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

முன்பள்ளியின் தலைவர் ச.க.முருகையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நீர்வைமணி கு.தியாகராஜக் குருக் கள் யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலா சாலை விரிவுரையாளர் ச.லலீசன் வாழ்த்துரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் முன் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-313)

# விவசாயம் செய்யும் ஊக்கம் இளைஞருக்கு வேண்டும்

### பேராசிரியர் மிகுந்தன் கூறுகிறார்

**கிராமங்களை இலக்காக வைத்து பண்ணைகளை உருவாக்கி தொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியும்.**

யாழ்ப்பாணம்,பெப்.2

தொழில்நுட்ப வளர்ச்சியைச் சாதகமாகப் பயன்படுத்தி இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தில் ஈடுபடுத்த ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் இடைத்தரகர்கள் மூலம் சந்தைக் கட்டமைப்பு குழப்பமடைவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமே யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சியடைந்து வரும் விவசாயத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட விவசாய உயிரியல் திணைக்களத் தலைவர் பேராசிரியர் மிகுந்தன்.

இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் முதலீட்டாளர்களை வலுவூட்டல் தொடர்பான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.ரில்கோ விடுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 'வடமாகாண விவசாயத் துறையில் முதலீடு மற்றும் உற்பத்தி வாய்ப்புக்கள்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் தற்போது விவசாயத் துறையில் முதியவர்களே ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் தற்போதைய நவீன சாதனங்களைப் பயன்படுத்தும் முறைகள், உத்திகள் தொடர்பான அறிவை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றனர். இதன் [illegible] கிடைக்கும் குறைந்தளவான உற்பத்திகளை சந்தைகளில் கொண்டு போய் இடைத் தரகர்களிடம் குறைந்த விலையில் விற்பனை செய்து குறைந்தளவு லாபத்தையே பெறுகின்றனர்.

எனவே இளைய சமுதாயம் தொழில்நுட்ப அறிவைப் பூரணமாகப் பெற்றுள்ளமையால் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ள வழி காட்ட வேண்டும்.

கிடைக்கும் விளைச்சல்களைத் தென்பகுதி மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். குறிப்பாகத் துறைமுகம், விமானம் ஊடாக ஏற்றுமதி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

உலக சந்தையில் சேதன முறை உற்பத்திகளுக்கு அதிக கேள்வி உள்ளதால் யாழ்ப்பாண விவசாயிகள் சேதன முறை உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் கூடிய லாபத்தை ஈட்ட முடியும்.

கிராமங்களை இலக்காக வைத்து பண்ணைகளை உருவாக்கி தொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

ஏனெனில் யாழ்ப்பாணம் விவசாயத்தை முன்னணித் தொழிலாகக் கொண்ட பிரதேசம்.

எனவே விவசாயத் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## ஜெனிவாவில் தமிழரின் எதிர்பார்ப்பு

ஜெனிவா பற்றிய பேச்சுக்கள் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டன. பெப்ரவரி இறுதிப் பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடர் அங்கு ஆரம்பமாக இருப்பதே அதற்குக் காரணம்.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை குறித்த தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான முன்மொழிவு கொடுக்கப்பட்டுள்ளமை அனேகமாக உறுதியாகிவிட்டது. அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அமெரிக்காவும் தெரிவித்து விட்டது.

கடந்த வருடத்தில் நடந்த 18ஆவது கூட்டத் தொடரிலும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட இருந்தது. அனேகமாக எல்லாமும் முடிந்து விட்டது நாளை காலையில் முன்மொழிவைக் கனடா சமர்ப்பிக்கும் என்றவரைக்கும் விவகாரம் முன்னேறியது. ஆனாலும் இறுதி நேரத்தில் முயற்சி கைவிடப்பட்டது.

தீர்மானத்துக்கான முன்மொழிவு கனடாவால் கொண்டு வரப்படும்பட்சத்தில் அது தோற்கடிக்கப்படும் சாத்தியங்கள் இருந்தமையே கடைசி நிமிடங்களில் முயற்சிகள் கைவிடப்பட்டதற்கான காரணம் என்று ஐ.நா. வட்டாரங்கள் கூறுகின்றன. இப்போது மீண்டும் ஜெனிவா மாநாடு பற்றிய விவகாரங்கள் சூடு பிடித்துள்ளன. எனினும் இந்த முறை இலங்கையின் மனித உரிமை விடயங்கள் குறித்து ஆராய்வது தொடர்பான முன்மொழிவு ஒன்று ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. இது விவாதத்துக்கு எடுக்கப்படும் என்றே பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவின் அறிக்கை, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றி விட்டதால் - தமிழ் மக்களுக்கு நீதி வழங்கத் தவறி விட்டதால் - அனைத்துலக ரீதியான போர்க் குற்ற விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற வேணவா தமிழர்களிடம் உள்ளது. குறிப்பாக வன்னியில் இறுதிப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் இந்த விருப்பு அதீதமாகக் கிடக்கிறது.

போர் முடிந்து விட்டது, இனிமேல் அவர்களைத் தண்டித்து என்ன செய்வது என்று சிலர் கேட்கிறார்கள். குறிப்பாக அரசுடன் ஒட்டி நின்று நன்மைகள் பெறுபவர்கள், தமிழர்களாக இருந்தபோதும் இவ்வாறு கேட்கிறார்கள். இந்தப் பழிவாங்கும் குணம் ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வாகமாட்டாது என்றும் கூறுகிறார்கள்.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறுவது அல்லது அவ்வாறான தீர்மானத்தை நிறைவேற்றுமாறு தமிழர்கள் வலியுறுத்துவது ஒரு தேசத் துரோகமாகவே பழிவாங்கலாகவோ ஆகிவிடமுடியுமா என்றால் இல்லை.

பாதிக்கப்பட்டவர்கள் நீதியைத்தான் கேட்கிறார்கள். நீதி வழங்குதல் ஒருபோதும் பழிவாங்கலாக மாட்டாது. அப்படிப் பார்த்தால் எந்த நாட்டிலும் நீதிமன்றங்கள் இயங்கக் கூடாது. ஜெனிவாவில் தமிழர்கள் எதிர்பார்த்திருப்பது நீதியை நிலைநாட்டுவதற்கான சர்வதேச ஆதரவைத்தான். போர்க்குற்ற விசாரணைகளை நடத்தி, இறுதிப் போரில் உண்மையில் நடந்தது என்ன? யார் இறந்தார்கள்? யார், யார் எல்லாம் சிறைகளில் இன்னமும் உயிருடன் இருக்கிறார்கள்? தேவையற்றுக் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு என்ன பரிகாரம்? காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் திரும்பி வருவார்களா? இல்லை அவர்கள் கொல்லப்பட்டார்களா? அப்படிக் கொல்லப்பட்டால் எப்போது கொல்லப்பட்டார்கள்? என்ற கேள்விகளுக்கு விடைகாண உதவும் பொறிமுறையைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கக்கூடிய உண்மையைக் கண்டறியும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை மூலமாகக் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படலாம். ஆனால் அதுவே அந்தப் பொறிமுறையின் முழுமையான நோக்கமல்ல. அப்படி ஒரு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டால் இதுவரை விடை தெரியாதுள்ள தமிழர்களின் பல கேள்விகளுக்கு விடைகிடைக்கும்.

# தமிழர்களின் குரல்வளையைத் திறந்து விடுங்கள்

ஜே.ரீ.கமகே

'செய்யாத வைத்தியத்துக்குப் புலிப்பால் தேவை என்கிறார் வைத்தியர்' என்றொரு பழமொழி வழக்கிலுண்டு. இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த தற்போது கையில் எடுத்துள்ள "அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு மேலதிகமாக" என்ற கருத்தும் மேற்குறிப்பிட்ட பழமொழி போன்றதே. அதாவது எந்த விதத்திலாவது இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை மேலும் இழுத்தடித்து காலத்தை வாங்கும் ஒரு உத்தியே அது.

இன்று நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் என்ன நடக்கிறது என்று தெரிந்து வைத்திருந்தால் அப்பகுதி மக்களின் பிரச்சினைகள் எவை என்று தெளிவாகக் கூறிவிட இயலும். ஆனால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தேவைகள் எவை என்பது தெற்கில் உள்ளவர்களால் கருத்துக் கூற முடியாது.

நாட்டின் வட பகுதியில் சிவில் நிர்வாகத்துக்குச் சமாந்தரமாக இராணுவ நிர்வாகமும் நடைமுறைப் படுத்தப்படுவது தெளிவானதொன்றே. வட பகுதியில் பல வகைகளில் ஜனநாயக நடைமுறை மீறப்படுவது தொடர்பாக அரசியல்வாதிகளும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் முறைப்பாடு மேற்கொள்ளப் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றால் தம்மால் கட்டுப்படுத்த இயலாத அதிகாரத் தரப்பொன்று வட பகுதியில் செயற்படுவதாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனநாயக நடைமுறைக்கு எதிரான எதேச்சாதிகார நிர்வாகத்தின் சுபாவமே அதுதான். ஆள் கடத்தல் மற்றும் ஆள்கள் காணாமல் போகச் செய்யப்படுதல் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவென அண்மையில் தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்ல முயன்ற குழுவினர் இடை நடுவில் தடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் இதற்குப் பொருத்தமானதோர் எடுத்துக்காட்டு.

தற்போதும் வட பகுதியில் ஆள்கள் கடத்தப்படுதல் மற்றும் காணாமல் போகச் செய்யப்படுதல் அடிக்கடி நடக்கின்றன. அங்கு அரசியல் சுதந்திரம் மறுக்கப்படுவதோடு, தற்போதும் பல தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் காலத்தைக் கழிக்கின்றனர். அவர்கள் துப்பாக்கி முனையில் மௌனிக்க வைக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பின்னணியில் அவர்களால் தமது அபிலாஷைகள் குறித்தோ தேவைகள் குறித்தோ எவ்வாறு கருத்து வெளிப்படுத்த இயலும்?

இத்தகையதொரு பின்புலத்திலேயே, தற்போது 13 பிளஸ் தீர்வு குறித்து கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது. அதுவும் இந்திய வெளியுறவு அமைச்சரின் இலங்கைக்கான பயணத்தின் பின்னரே வெளிவந்துள்ளது. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் மூலம் திருப்தியடைந்திருந்த தமிழ்நாட்டு அரசியல் தரப்புக்கள், தற்போது அதற்கும் மேலதிகமான உரிமைகள் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி வருகின்றனர். இதன் காரணமாகவே இந்திய

> "தற்போது அரசுடன் ஒட்டியிருந்து அமைச்சர் பதவி வகிக்கும் கருணா அம்மானுக்கோ, டக்ளஸ் தேவானந்தவுக்கோ அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு விட இயலாது.

மத்திய அரசு 13 ஆவது திருத்தத்துக்கு மேலதிகமான உரிமைகள் குறித்து இலங்கை அரசை வற்புறுத்தும் நிலை உருவாகியது. மற்றொரு புறம் கிழக்கில் சம்பூர் பிரதேசம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள், வடக்கில் காங்கேசன்துறை வளம், பொருளாதார வலயம் என்பவற்றுக்காக இந்தியா இப் பகுதி நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இலங்கை அரசோ 13 பிளஸ் என்ற கோட்டுக்கு முன்னால் முழந்தாளிட்டு நிற்க நேர்ந்துள்ளது.

இந்தியா உண்மையில் இலங்கைத் தமிழ் மக்கள் மீது அன்பும் ஆதரவும் செலுத்த வேண்டுமானால், 13பிளஸ் தொடர்பாக வலியுறுத்துவதற்கு முன்னர், தமிழர் பிரதேசங்களில் ஆள்கடத்தல், காணாமல் போகச் செய்யப்படுதல், ஜனநாயக விரோத நிர்வாக நடவடிக்கைகளை நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். ஆனால் இந்திய அரசு அவ்விதம் செயற்பட முனைவதில்லை.

வடபகுதி மக்களுக்கு தமது நில உரிமை அவசியம் என்பது ஏற்கத்தக்கதொன்றே. அவர்களது பாரம்பரிய நிலப் பகுதிகள் நட்ட ஈடு எதுவும் வழங்கப்படாது அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் பாதுகாப்புத் தரப்பினரின் வேறு தேவைகளுக்காகவும் அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. கிழக்கில் சம்பூர் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சிரமங்களுடன் வாழ்க்கையை ஓட்ட, அப்பகுதி நிலம் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்கவென இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது அடிப்படைச் சிரமங்கள் குறித்து அக்கறை காட்டாது அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கோ, விடுதலைப் புலிகள் அமைப்பில் செயற்பட்டு மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு, தற்போது அரசுடன் ஒட்டியிருந்து அமைச்சர் பதவி வகிக்கும் கருணா அம்மானுக்கோ, வட பகுதியில் இடம்பெறும் ஆள் கடத்தல், காணாமல் போகச் செய்யப்படுதல் சம்பவங்கள் தொடர்பாக மௌனம் காத்தவாறே அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் டக்ளஸ் தேவானந்தவுக்கோ அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு விட இயலாது.

வட பகுதியில் நிலவும் சிரமமான சூழ்நிலைக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டால், அது அரசுக்கு பெரும் சவாலாக அமையும். இதனாலேயே தற்போதும் அரசு வடபகுதி மக்களைத் தனது இராணுவக் கரங்களால் அடக்கி ஒடுக்கி வைத்துள்ளது. அவர்கள் தமது வாழ்க்கைச் சிரமம் குறித்து சிந்திக்க இடமளியாது கண்ணுக்குப் புலப்படாத தீர்வு என்ற மாயையைக் காட்டி அவர்களை அரசு ஏமாற்றி வருகிறது.

அத்தோடு சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையிட்டு வருவதால் வெளி நாடுகளிடமிருந்து கடன்பெற இயலாது போய்விடக் கூடும் என அரசு அஞ்சுகிறது. அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அரசுக்கு எதிரான பரப்புரை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவும், மறுபுறம் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தன்னை நியாயப்படுத்திக் கொள்ளவும் என அரசு கையிலெடுத்திருக்கும் ஆயுதமே இந்த 13 பிளஸ். அதேவேளை அரசுக்கு எதிரான தரப்புக்கள், அரசின் ஜனநாயக விரோதப் போக்கைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை அரசுக்கு எதிராக அணி திரட்டுவதைத் தடுத்து நிறுத்தி சிங்கள மக்களது கவனத்தை வேறொரு திசையில் திருப்பி விடுவதற்குமான அரசின் யுக்தியே இந்த 13பிளஸ்.

இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் முகம் கொடுக்க நேர்ந்துள்ள சிரமங்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் உருவாகும் எதிர்ப்பலைகளை அரசு தற்போது முன் வைத்துள்ள 13 பிளஸ் யோசனையின் பக்கம் திசை திருப்பி விட இயலுமென அரசு கருதக்கூடும் . அரசுடன் சேர்ந்தியங்கும் தீவிர இனவாதத் தரப்பான நாட்டுப்பற்றாளர் தரப்பு மற்றெல்லா எதிர்ப்பு முயற்சிகளையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு ஜனாதிபதியின் 13பிளஸ் முன்மொழிவுக்கான எதிர்ப்பு முயற்சியைக் கையிலெடுத்துச் செயற்பட முன் நிற்கக்கூடும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மற்றும் 13பிளஸ் யோசனை என்பன வேறும் அரசமைப்பு விதிகளில் மேற்கொள்ளப்படத்தக்க மாற்றங்களே . இதனால் நாட்டு மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டி விடுமா? இன்று நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பின் விதிமுறைகள் உரிய வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா? இல்லையே. எனவே 13 பிளஸ் என்ற இந்த யோசனை, சட்டம் படிக்கும் மாணவர்கள் மேலும் சில வசனங்களைக் கற்றுக் கொள்ள வழியேற்படுத்துமேயன்றி வேறெந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

இன்று நாம் மேற்கொள்ள வேண்டிய நியாயமான செயற்பாடு, வட பகுதி மக்களது கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்குதலே ஆகும். அப்போதுதான் அவர்களது அபிலாஷை, அவர்களது தேவைகள் என்பவற்றை அவர்களால் அவர்களது மொழியூடாக வெளிப்படுத்த வாய்ப்புக்கிட்டும். அதற்கான வாய்ப்பை அவர்களுக்கும் வழங்குமாறு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்குமாறு நாம் அரசை வற்புறுத்தியாக வேண்டியுள்ளது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுறாவை விட்டு விட்டு குட்டி மீனைப் பிடிக்கும் பொலிஸ்

இரா.சிகா

பெரிய சுறாக்களையும் திமிங்கிலங்களையும் கோட்டை விட்டு விட்டு சிறிய நெத்தலிக் குட்டிகளை மடக்கிப்பிடிப்பதில் மகா கெட்டிக்காரர்கள் இலங்கைப் பொலிஸார்.

போர் முடிந்த பின் உணவு, உடை, உறைவிடம் என ஓடித்திரிந்த வட பகுதி மக்கள் இப்பொழுது மண், மணல் எனத்தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்காலிக குடிசை அமைப்பது முதல் சிறிதாக ஒரு வீடு, கழிவறை, கிணறு எதைக் கட்டிக்கொள்ள வேண்டுமானாலும் அத்தியாவசியமாகத் தேவைப்படுவது மணல். ஆனால் மணல் விற்பனை தான் இப்போது கொள்ளைலாபம் தரும் தொழில். இங்கே தான் மொத்த அநியாயமும், அட்டகாசமும் நடக்கின்றது.

கடந்த வாரம் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் லாண்ட் மாஸ்டர் ஒன்றில் மணல் கொண்டு வந்த விவசாயி ஒருவரை பொலிஸார் மடக்கிப்பிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

சட்டம் எல்லோருக்கும் பொதுவானது இல்லையா? ஆனால் மணல் கடத்தும் பெருந்தலைகள் எவையும் பொலிஸாரால் கைது செய்யப்படுவதில்லை.

இந்த விடயம் சம்பந்தமாகக் கிளிநொச்சி பிரதேசவாசிகள் சிலரை நேரடியாக சந்தித்து விவரம் கேட்டோம்.

அப்போது அவர்கள் கூறிய விடயங்கள் எம்மை வாய் பிளக்க வைத்து விட்டன. எல்லாவற்றையும் கூறிவிட்டு அவர்கள், "என்ன கேட்கிறீர்கள்? பொலிஸாருக்கு பெரிய சுறாக்களும், திமிங்கிலங்களும் போவது தெரியாது. ஆனால் எங்களைப் போன்றவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சிறிது மண் கொண்டு வந்தால் கொலைகாரர்கள் போல் விரட்டிப் பிடிக்கின்றனர்" [illegible]கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தினசரி நூற்றுக்கும் அதிகமான 'டிப்பர்'களும், 'கெண்டெய்னர்'களும் மண்ணையும், மரங்களையும் வெளிமாவட்டங்களுக்கு கடத்திச் செல்கின்றன. இவை எல்லாம் சட்டரீதியாக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுத்தான் கொண்டு செல்லப்படுகின்றனவா? இவற்றை எல்லாம் பொலிஸார் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? என்று மக்கள் எம்மிடம் திரும்பிக் கேள்வி கேட்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சிறிது ஊடுருவிப் பார்த்தபோது மேலும் பல தில்லுமுல்லுகள் அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் அன்றாடம் இடம்பெற்று வருவதும் தெரியவந்தது.

கிளிநொச்சி-வட்டக்கச்சி என்ற கிராமத்தில் தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு சபை என்ற அமைப்பு செயற்படுகின்றது. இந்தச் சபை நாட்டின் அதிஉயர் பீடத்தில் இருக்கும் ஓர் அரசியல்வாதியின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்றது.

இந்த அமைப்பு இப்பொழுது குறித்த பிரதேசத்தில் 60 ஏக்கர் வயற் காணிகளையும் 40 ஏக்கர் மேட்டு நிலத்தையும் கையகப்படுத்தி உள்ளது. பன்னங்கண்டி என்ற இடத்தில் முன்பு புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இந்தக் காணிகள் அந்தப் பிரதேச மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு பல குடும்பங்கள் அங்கு நிரந்தரமாகக் குடியமர்த்தப்பட்டிருந்தன. விவசாயிகள் குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்தனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான இந்தக் காணி போரின் பின் செல்வாக்கு மிக்க இளம் அரசியல்வாரிசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது.

முன்பு குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்து செழிப்புடன் வாழ்ந்த அந்த விவசாயிகள் இப்பொழுது தினக் கூலிக்கு வேலை செய்யும் நிலையாகி விட்டது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதோடு நின்று விடவில்லை இந்தச் சபை. இராமநாதபுரம், பன்னங்கண்டி ஆறு, கனகராயன் ஆறு ஆகிய இடங்களில் இருந்து மணலைக் கொண்டு வந்து வட்டக்கச்சி சிவிற்சென்டர் என்ற இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளது. மணல் தேவையானவர்கள் தமது அனுமதிப்பத்திரங்களுடன் சென்று இந்த அமைப்பிடமே மணலைப் பெறவேண்டும். அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் இந்த அமைப்பைக் கடந்து நேரடியாகப் போய் மணல் எடுக்க முடியாது.

தேவையானவர்கள் நேரடியாகப்போய் மணல் எடுத்தால் ஒரு ட்ரக்ரர் மணல் இரண்டாயிரத்தி ஐநூறு ரூபாவுக்குள் பெற முடியும். ஆனால் இந்த சபையிடம் பெறும்போது ஐயாயிரம் ரூபா செலுத்தியே பெற வேண்டும். இதனைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை. இவ்வாறு ஒரு முனையில் தென்பகுதியில் இருந்து வந்த இளம் அரசியல்வாரிசு மண் வியாபாரம் செய்கிறார். பின்னர் அந்தக் காசில் பாடசாலைப் பிள்ளைகளில் ஒரு சிலருக்கு சப்பாத்தும், கொப்பி புத்தகங்களும் வாங்கிக் கொடுத்து அரசியலும் நடத்துகிறார்.

மறுமுனையில் அதி உயர் மன்றில் பிரதியாக செயற்படும் அரசுக்குத் 'துணை'யாக - படையாக- நிற்கும். தமிழ் அரசியல்வாதி ஒருவரும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்ற பெயர்ப் பலகையுடன் மணல் வியாபாரம் செய்கின்றார்.

இவரது ஆதிக்கத்தின் கீழ், அக்கராயன் குளம், புதுமுறிப்பு, வன்னிக்குளம், முரசுமோட்டை, கண்டாவளை ஆகிய இடங்களில் இருந்து மணல் கொண்டு வரப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இவரது கட்டுப்பாட்டில் 93 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்குகின்றன. இந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கு முந்திய காலத்தில் இருந்தே இவர் சார்ந்த அரசியல் கட்சியின் அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்டவை.

"இந்த 93 கிராம அபிவிருத்தி சங்கங்களும் மகேஸ்வரிநிதியத்தின் முகவர்களாகவே இயங்குகின்றன" என்று அப்பிரதேச வாதிகள் கூறுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தனித்தனியாக யாழ்ப்பாணத்தில் உள்ள புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பிரதி ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதி பெற்றே இந்த மணல் வியாபாரத்தை நடத்துகின்றன.

இவர்கள் ஒரு ட்ரக்ரர் மணலுக்கு 3,500 ரூபா முதல் 4,000 ரூபா வரை அறவிடுகின்றனர். ஆனால் பாவனையாளர்கள் நேரடியாகச் சென்று மணல் அள்ளினால் ட்ரக்ரர் கூலி அடங்கலாக ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு ஒரு ட்ரக்ரர் மணலைப் பெற முடியும் என்கின்றனர் பாவனையாளர்கள். மேலதிகமாகப் பெறப்படும் தொகை மகேஸ்வரி நிதியத்திற்கும், கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கும் இடையில் பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றன என்றும் இவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பத்தரமுல்லையில் உள்ள புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது;

பொது மக்கள் தமது தேவைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தத்தமது பிரதேச கிராம உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்களுடன் சென்று பிரதேச செயலகங்களில் மணல் பெறுவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற முடியும். இதற்கேற்ப 1992/33 ஆம் இலக்க கனிய வளங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை காலமும் புவிச் சரிதவியல் அளவைகள், சுரங்கங்கள் ஆணையாளருக்கு மட்டுமே இருந்த அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன என விளக்கம் அளித்தார் பிரதி ஆணையாளர்.

அப்படியானால் இன்னும் வடக்கில் மட்டும் மணல் விநியோகத்தின் ஏகபோக உரிமை அரசியல்வாதிகளின் பிடிக்குள் இருப்பது ஏன்?

பிரதேச அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்த அஞ்சுவது ஏன்? பொலிஸார் கண்டும் காணாமலும் இருப்பது ஏன்?

இழக்க வேண்டியது எதுவுமே இல்லை என்று எல்லாவற்றையும் இழந்து விட்டு, துளிர்விட முயலும் தமிழ் மக்களை, அரசியல்வாதிகளும் தவிச்ச முயல் அடிப்பது போல் வேதனைப் படுத்துவதை நிறுத்தி அவர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வரவேண்டும்.

# மணலாறு : மீளத் திரும்ப முடியாமல் தவிக்கும் விவசாயிகள்

**மணலாறின் சில கிராமங்களில் நடந்தது போன்று, தமது நிலங்களிலும் இலங்கையின் தென் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்களைக் குடியிருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கலாம் என பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகள் நம்புகின்றனர்.**

மேற்குக் கரையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பிரித்து அவற்றில் யூதக் குடியேற்றங்களை அமைப்பதற்காக வரையப்பட்ட இஸ்ரேலியக் கோட்பாட்டுடன், தற்போதைய இலங்கை அரசின் சிங்களக் குடியேற்றங்களும் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

1984 டிசம்பரில், இலங்கையின் மணலாறு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று கிராமங்களிலிருந்த தமிழ் விவசாயிகளை அங்கிருந்து விரட்டியடித்த இலங்கை இராணுவத்தினர், அந்த விவசாயிகளுக்குச் சொந்தமான 1500 ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

அன்றிலிருந்து இன்று வரை இந்தத் தமிழ் விவசாயிகளின் நிலங்களை இலங்கை இராணுவமே கையகப்படுத்தியுள்ளனர்.

தமது சொந்த நிலங்களுக்குச் செல்வதற்கு இலங்கை இராணுவம் தற்போதும் தடைவிதித்துள்ளதாக அண்மையில் மணலாறு பிரதேசத்துக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு உறுப்பினர்களிடம், இடம்பெயர்க்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த விவசாயிகள் தமது நிலங்களைச் சென்று பார்வையிடுவதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நிலக்கண்ணிவெடி அபாயம் காரணமாகவே இந்த விவசாயிகளுக்கு அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இதனை பாதிக்கப்பட்ட விவசாயிகள் மறுத்துள்ளதுடன், இந்தப் பகுதியை இலங்கை இராணுவத்தினர் 1984 இல் இருந்து தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மணலாறின் சில கிராமங்களில் நடந்தது போன்று, தமது நிலங்களிலும் இலங்கையின் தென் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்களைக் குடியிருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கலாம் என பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகள் நம்புகின்றனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்படுவதைப் போன்று தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த மணலாறிலும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர் நிலங்கள் தொடர்ச்சியாக விரிந்து கிடப்பதைத் [illegible] உருவாவதற்கான சாத்தியங்களை இல்லாமற் செய்யும் நோக்குடனும் தான் தற்போது இவ்வாறான சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன.

அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு யுத்தம் மே 2009 இல் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்தபோதிலும், இலங்கையின் வடக்கு கிழக்கின் பெரும் பகுதிகளை இராணுவத்தினர் தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வருகின்றனர்.

எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் 30 சதவீதமான பிரதேசங்கள் இலங்கை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. இங்கு இராணுவத் தளங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் 10 பொதுமக்களுக்கு ஒரு இலங்கை இராணுவச் சிப்பாய் என்ற நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்கள், இலங்கை இராணுவத்தினதும், சிங்களக் குடியேற்றவாதிகளினதும் அடக்குமுறைக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

பெரும்பாலான தமிழர்கள் இந்துக்களாகவும், பெரும்பாலான சிங்களவர்கள் பௌத்தர்களாகவும் உள்ள நிலையில், இந்து ஆலயங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன அல்லது சேதமாக்கப்பட்டுள்ளன. குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்காகப் புத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் தென்பகுதியில் பொருளாதார அதிருப்திகள் நிலவுகின்றன. கல்வியை தனியார்மயப்படுத்தலுக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளனர். இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இறுதியில் பொலிஸாருடன் முரண்படுவதிலேயே முடிகின்றன.

பணவீக்கத்தைக் கருத்திற் கொண்டு தமக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாதை எதிர்த்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அத்துடன் தமக்கான ஓய்வூதிய திட்டங்களையும் இவர்கள் எதிர்த்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில், புதிய ஓய்வூதியச் சட்டத்தை எதிர்த்து தொழிலாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

தமிழர் வாழும் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவத்துக்கான அதிகளவான பாதுகாப்புச் செலவீனங்களை இலங்கை அரசு ஒதுக்கியுள்ளதாலேயே தெற்கில் வறுமை நிலவுவதற்கான காரணங்களில் பிரதானமானதாகும்.

தெற்கில் நிலவும் பொருளாதாரம் தொடர்பான போராட்டத்துக்கும், தமிழர் போராட்டத்துக்கும் இடையில் தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கான சாத்தியம் உள்ளதாக புதிய சோசலிசக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்களுக்கான நீதி வேண்டிய போராட்டமானது பொருளாதாரத் துன்பத்தை அனுபவிக்கும் மக்களின் சீற்றத்துடன் இறுகப் பிணைக்கப்பட வேண்டும்.

அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள எல்லா சமூகத்தினரதும் சக்தியை ஒன்று திரட்டி வெளிக்கொணர்வதற்கான வலுவான, சக்திமிக்க ஜனநாயக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டிய நேரம் இதுவாகும்' எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தினருக்கு வேண்டிய குறிப்புக்கள்

ஒருவர் அவசர அவசரமாக வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். என்ன அவசரமாக வெளியே புறப்படுகிறீர்கள்? என்று விசாரித்தார் இன்னொருவர். ''சொந்தக்காரர் ஒருவர் ஊரில் இருந்து வருவதாகக் கடிதம் அனுப்பியிருந்தார். அதுதான்'' என்று இழுத்தார் இவர். ''ரயில் நிலையத்துக்குப் போய் அழைத்துவரப் போகிறீர்களா? என்று கேட்டார் அவர்.

''இல்லை, அந்த ஆள் வருவதற்குள் எங்கேயாவது தலைமறைவாகிவிடலாம் என்று புறப்படுகிறேன்'' என்றார். விருந்தினர்கள் வருகிறார்கள் என்றாலே வீட்டில் இருக்கிறவர்கள் வெளியே புறப்படுவோம் என்று யோசிக்கிற காலம் இது. சொந்தக்காரர்கள் மீது உள்ள வெறுப்புத்தான் இதற்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது.

பரபரப்பான வாழ்க்கை - விலைவாசி உயர்வு- வீட்டில் இடவசதிப் பற்றாக்குறை இவைகள்தான் இதற்குக் காரணம். அதனால் தான் இப்போது ஒரு வீட்டின் விருந்தினராகப் போக வேண்டும் என்ற அபிப்பிராயம் உங்களுக்கு இருந்தால்; நீங்கள் ''நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சில குறிப்புக்கள் இருக்கின்றன. பல பேருடைய அனுபவங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. மிகவும் உபயோகமாக இருக்கும். கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

அதாவது ஒரு நல்ல விருந்தினராக நடந்து கொள்வது எப்படி? விருந்தினரை உபசரிப்பது எப்படி? என்பது பற்றி அநேகமானோர் கூறியிருக்கிறார்கள். திருவள்ளுவர் கூடச் சொல்லி வைத்திருக்கிறார்.

எனவே உபசரிப்பு நன்றாக இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும். அது தான் எமக்கு அவசியம். நீங்கள் உங்கள் உறவினர் வீட்டுக்கு செல்வதானால் ஒரு குறிப்பு எழுதிக் கொள்ளுங்கள்.

எத்தனை பேர், எவ்வளவு நாள் தங்கப் போகிறீர்கள் என்பதை சரியாகக் குறிப்பு எழுதிக் கொள்ளுங்கள். நீங்கள் தங்கப் போகும் உறவினர் வீட்டுக்கு உங்களுக்கு அவசியமான நண்பர்களை அழைத்துக் கொண்டு செல்லாதீர்கள்.

'' நான் உங்கள் வீட்டுக்கு வந்து இத்தனை நாள்கள் தங்கலாம் என்று இருக்கிறேன் என்று எழுதிக் கேட்டுக் கொள்ளுங்கள் . பெரும்பாலும் உங்களுக்குச் சாதகமாகத்தான் பதில் வரும்.

'' நீங்கள் வரும் சமயத்தில் நான் அலுவலக வேலையாக வெளியூருக்குப் போகவேண்டியிருக்கும்'' என்று பதில் வந்தால் புரிந்து கொண்டு, நீங்கள் அங்கு போகவேண்டாம் அதனை வரவே வேண்டாம் என்று கடிதம் எழுதியதைப் போன்று நினைத்து அவர்கள் வீட்டுப் பக்கம் தலைவைத்துப் படுக்கவே வேண்டாம். அது தான் மரியாதை.

தாராளமாக வாருங்கள் என்று பதில் வந்தால், உடனே அடுத்த அடுத்த கடிதத்தில் நீங்கள் எப்போது வர இருக்கிறீர்கள்? ரயிலில் வர இருக்கிறீர்களா? பஸ்ஸில் பயணம் செய்ய இருக்கிறீர்களா? என்கின்ற விவரத்தை எழுதி விடுங்கள் நீங்கள் போகும் போது வெறுங்கையுடன் போகாதீர்கள். உங்கள் ஊரில் என்ன விசேடமான உணவு வகையோ அதை வாங்கிக்கொண்டு போங்கள்.

மேலும் உங்களுக்குத் தேவையான அத்தியாவசியமானபொருள்களையெல்லாம் எடுத்துச் செல்ல மறந்து விடாதீர்கள் அங்கே போய் அவற்றைக் கேட்டுத் தொந்தரவு செய்யாதீர்கள்.

போகும் இடத்தில் சுமுகமாகப் பழகுங்கள் அவர்களுக்குத் தகுந்த மாதிரி சமாளித்துச் செல்லப் பழகுங்கள் அவர்கள் சாப்பிடும்நேரம் நீங்களும் சாப்பிடுங்கள். அவர்கள் தூங்கியதன் பின்னர் எழுந்து சாப்பாடு போடுங்கள் என்று கேட்டால் நன்றாக இருக்காது.

இன்னொரு தலையணை இருக்குமா என்று கேட்காதீர்கள் ஏனென்றால் எல்லா வீடுகளிலும் அது தாராளமாக இருக்காது.


உங்கள் துணிமணிகளை நீங்களே சுத்தம் செய்யுங்கள். அவர்கள் வீட்டு வேலைக்காரியிடம் அதனைக் கொடுக்காதீர்கள். அவர்கள் வீட்டுச் சாப்பாட்டையும் குறை சொல்லாதீர்கள்.

நன்றாக இருந்தால் நன்றாக இருக்கிறது என்று கூறுங்கள். உங்கள் பிள்ளைகளுடன் ஊர் சுற்றிப் பார்க்க வெளியே புறப்பட்டால் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போங்கள். நீங்கள் பெண்ணாக இருந்தால் அவர்கள் வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கு தலை வாரி விடலாம்.

விருந்தாளியாகப் போயிருக்கும்போது, அந்த வீட்டில் கடன் கேட்காதீர்கள் அவர்கள் வீட்டுப்பொருள்கள் மீது உங்கள் குழந்தை ஏறி குதித்துக் கொண்டிருந்தால் அதுவும் நன்றாக இருக்காது. அந்த வீட்டுக்குப் போகும் முன்னர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று உங்கள் பிள்ளைகளுக்கு கூறி வையுங்கள்.

இப்படிச் சிலநுணுக்கமானவிடயங்களைக் கவனத்தில்வைத்துக்கொண்டால் உங்களுக்கு நல்லது, போகும் வீட்டுக்காரர்களுக்கும் நல்லது.

ஒருவர் இன்னொரு வீட்டுக்கு விருந்தாளியாகப் போய் ஒருவாரம் தங்கி விட்டுத் திரும்பி வந்தார். வந்தவுடன் அவரைப்பார்த்து ' எப்படி இருந்தது விருந்து என்று கேட்டதற்கு '' விருந்து நன்றாக இருந்தது இருந்தாலும் திரும்பி வரும் போது செருப்பைத் தேடித் தேடிப் பார்த்து அலுத்துப் போய் விட்டேன் '' என்றார்.



அதன் பின் என்ன செய்தீர்கள் என்று கேட்டதற்கு '' என்னுடைய செருப்பையே போட்டுக்கொண்டு வந்து விட்டேன் '' என்றார். இப்படிப் பட்டவர்களை என்னவென்று கூறுவது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# புத்த கலட்டி மக்கள் ஒன்றுகூடி உருவாக்கிய ஸ்ரீ விஷ்ணு வித்தி.



ஆவரங்கால் கிழக்கு மணற் பகுதியில் 1957ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தில் பாடசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது. புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை, கிராமத்து பிரமுகர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டிருந்த சர்வோதய கலாமன்றம் செய்திருந்தது. தமது கிராமத்துப் பிள்ளைகள் கல்வி பயில்வதில் எதிர்நோக்கி வந்த சமூக நெருக்கடிகள், பாடசாலை அனுமதி மறுப்புக்கள் மற்றும் புறக்கணிப்புக்கள் எதிர்தாக்கங்களில் இருந்தும் விடுபட்டு தமது கிராமத்தில் இயல்பு நிலையில் கல்வியைக் கற்க வேண்டும் என்ற உயர் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது. திருவுழச் சீட்டு மூலம் பாடசாலையின் பெயரும் தெரிந்தெடுக்கப்பட்டது.

சர்வோதய கலாமன்றம் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு ஊரே ஒன்று கூடி முழு மனதோடு ஒத்துழைப்பு வழங்கியது. சர்வோதய கலாமன்றத்தின் தலைவரான ஊர்பிரமுகரும் தமிழரசுக்கட்சியின் முன்னணி உறுப்பினருமான சி.அரியகுட்டியும், உந்துசக்தி மிக்க நிர்வாகிகளாக க.ஆறுமுகம், தே.வடிவேலு, வ.ஐயாத்துரை மாப்பாணர் ஆகியோரும் இருந்து செயற்பட்டனர்.

சர்வோதய கலாமன்ற நிர்வாகிகளும் உறுப்பினர்களும் வீடு வீடாகச் சென்று தமது கிராமத்துக்குப் பாடசாலையின் தேவை மற்றும் உதவிகள் தொடர்பாக விளக்கிக் கூறியதோடு; பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு பெற்றோரிடம் வேண்டிக் கொண்டனர்.

பெற்றோர் தமது பிள்ளைகள் ஊரில் கல்வி கற்பதற்கு உரிய வாய்ப்பினை உவகையோடு ஏற்றுக்கொண்டு, புதிய பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டதோடு, வெளியிடங்களுக்கு சென்று கற்பதில் உள்ள சிரமங்களினால் இடைவிலகிய மாணவர்களையும்பாடசாலையில் இணைந்து கல்வி பயிலச் செய்தனர்.

வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பத்தில் நடைபெற்று வந்த பாடசாலை, 1961 ஆம் ஆண்டு வித்தியாதிபதியின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 1963 இல் அரச பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது.

பாடசாலைக்கான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு வசதியாக, ஊர் க்கள் பலரின் நிலங்கள் இணைந்ததாக 32 பரப்புக் காணியும் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபராக அல்வாய் க.முருகேசு பொறுப்பேற்றுக் கொண்டார். 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புகள் நடத்தப்பட்டன. 10 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தனர். மாணவர் எண்ணிக்கையும் 300 இற்கு மேற்பட்டதோடு நாளாந்தம் மாணவரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வந்தது. நான்கு மாத கால இடைவெளியில் மாணவர் எண்ணிக்கையும் கல்விச் செயற்பாடும் உத்வேகத்துடன் அதிகரித்து வருவதை அவதானித்த புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி பகுதி மாணவர்களும் அங்கு அனுமதி பெற்று கல்வி பயில்வதில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினர். குறுகிய கால இடைவெளியில் மாணவர்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்தது. பாடசாலையில் இணைந்து கற்பிப்பதற்கு வடமராட்சியைச் சேர்ந்த முன்னணி ஆசிரியர்களும், பண்டிதர்களும், சைவப் புலவர்களும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் முன் வந்தனர்.

ஊர் மக்கள் ஒன்று கூடி காலத்தின் தேவை உணர்ந்து உருவாக்கிய பாடசாலையில் இணைந்து கற்பித்த ஆசிரியர்கள், மாலை வேளையிலும் இரவிலும் விசேட வகுப்புகளையும், மீட்டல் வகுப்புகளையும் நடத்தியதோடு இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் பாடசாலையைத் துலங்கச் செய்தனர். விளையாட்டுத்துறை, கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் சைவ நெறிகள் நிலையிலும் பாடசாலை கோப்பாய்த் தொகுதியில் முன்னணியில் திகழ்ந்தது.

பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளிலும் பெற்றோர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பும் உதவியும் குறித்த கால கட்டத்தில் முழுமையாகக் கிடைத்து வந்தன.

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையில் 10 ஆம் கட்டையில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. பாடசாலைக்கு அருகில் ஸ்ரீ புவனேஸ்வரிஅம்மன் ஆலயம் பாடசாலை முன் பக்கத்தில் வீனஸ் விளையாட்டு மைதானம் கிழக்குப்புறத்தில் தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி ஆகியனஉள்ளடங்கிய அமைதியான கற்றலுக்கான சூழலும் அமைவிடமும் கொண்டது.

வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பத்தில் நடைபெற்று வந்த பாடசாலை, 1961 ஆம் ஆண்டு வித்தியாதி பதியின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 1963 இல் அரச பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. அங்கு கடமை புரிந்த ஆசிரியர்கள் அனைவரையும் அரசு பொறுப்பேற்று ஆசிரியர் நியமனம் வழங்கியது பாடசாலைக்கான வசதிகளை அரசு செய்யத் தொடங்கியது.

'' கற்றாய்ந்தொழுகு'' என்ற மகுட வாசகத்திற்கேற்பவும் '' தரமான கல்வியினூடாக சமூகத்துக்குப் பொருத்தமான பிரசைகளை உருவாக்குவோம்'' என்ற தூர நோக்குடனும் செயற்படும் விஷ்ணு வித்தியாலயம் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள தரம் -2 பாடசாலைகளில் கல்வித் தரத்திலும் விளையாட்டு உள்ளிட்ட இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்ந்தது. பாடசாலைச் சமூகம் ஒத்துழைப்பு வழங்கினால் பாடசாலை சகல நிலையிலும் மேல் நிலை பெறும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. பாடசாலையின் தற்போதைய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் -2 ஐச் சேர்ந்த கு.ரவீச்சந்திரன் கடமையாற்றுகின்றார்.

**ஞானி**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளைக் காத்திடுங்கள் 'ஜெயா'விடம் மஹிந்த




கொழும்பு,பெப்.2

தமிழ்நாட்டுக்கு வரும் தனது அமைச்சர்கள் மற்றும் உறவினர்களை கவனமாகப் பாதுகாக்குமாறு, தமிழ் நாட்டு முதல்வர் ஜெயலலிதாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள்விடுத்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்த போதே அவர் இவ்வாறு கோரிக்கைவிடுத்துள்ளார்.

தனது உறவினர் திருக்குமார் நடேசன், பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவை திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்துக்காகவே தாக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். அவர் வடக்கைச் சேர்ந்த தமிழர் என்று அவர் தெரிவித்தார். இந்தத் தாக்குதலை இந்திய மீனவர்கள் கூட எதிர்த்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தேசிய கொள்கை இல்லா ஒரே நாடு இலங்கை

முக்கிய துறைகளில் தேசியக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு,பெப்.2

எந்தவொரு துறையிலும் தேசியக் கொள்கையில்லாத ஒரே நாடு இலங்கை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பாணந்துறை பிரதேச பாடசாலை நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வித்துறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இஸட் புள்ளி குளறுபடிகளால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

முக்கிய துறைகளில் தேசியக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி உள்ளிட்ட துறைகள் தொடர்பில் தேசிய ரீதியான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்- என்றார். (ச)

## குடிசன மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு பயிற்சி

கொழும்பு,பெப்.2

குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குரிய மதிப்பீட்டு அதிகாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு என 80 ஆயிரம் அதிகாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.ஆர். குணசேகர தெரிவித்தார்.

இதற்கான பயிற்சிகள் பிரதேச மட்டத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

குடிசன மதிப்பீட்டிற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளும் படிவத்தை நிரப்பும் நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இடம்பெறும் என்று அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டு தகவல்களில் எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம், 21 ஆம் திகதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## அஞ்சாதீர்!

### தற்கொலை அங்கி பழையதே

கொழும்பு,பெப்.2

கதிர்காமத்தில் உள்ள விடுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி 5 வருடங்கள் பழமையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது தாக்குதல் நடத்தவென இந்தத் தற்கொலை அங்கி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக மேலதிக அரச ஆய்வாளர் டபிள்யு. ஏ.ஆர்.பெனாண்டோ தெரிவித்தார்.

தற்கொலை அங்கி மீட்கப்பட்டதும் விசாரணைகள் நடத்தப்பட்டு, அது 5 வருடங்கள் பழமையானது என்று இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இது குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இது குறித்து தமக்கு அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)



பேராதனை பல்கலைக்கழக துணைவேந்தர் சர்வாதிகார போக்குடன் நடப்பதாக கூறி பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## சித்திப் புள்ளியில் மாற்றம் இல்லை

44.5 சதவீதமாகவே சித்திப் புள்ளி எப்போதும் இருக்கும்.

கொழும்பு,பெப்.2

மருத்துவராக தொழிற்படுவதற்கான பதிவுப் பரீட்சையின் சித்திப்புள்ளிகளை குறைக்க இலங்கை மருத்துவசபை தீர்மானித்திருப்பதாக கூறப்படுவதில் உண்மையில்லையென இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையின் சித்திப்புள்ளியில் மாற்றம் ஏதும் செய்வதில்லையென தீர்மானிக்கப்பட்டது என்று இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர் என்.ஜே. நோவிஸ் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையின் சித்திப் புள்ளி 50 சதவீதத்திலிருந்து கடந்த ஏப்ரலில் 44.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அது தொடர்ந்தும் 44.5 சதவீதமாகவே இருக்கும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## முகிழ் நிலை ஆசிரியர்களின் பகிடிவதைக்கும் கடிவாளம்

ஆசிரிய பயிலுநர்கள் மாணவர்களைச் சரியாக வழிப்படுத்த வேண்டியவர்கள் என்று கல்வியமைச்சர் தெரிவித்தார்

கொழும்பு,பெப்.2

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தும் ஆசிரிய பயிலுநர்களை வெளியேற்றுவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் போலன்றி, இவர்களுக்கு தொழில் உத்தரவாதம் உள்ளது. பயிற்சியின்பின், இவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்கப்படுகின்றனர் என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஆசிரிய பயிலுநர்கள் மாணவர்களை சரியாக வழிப் படுத்த வேண்டியவர்கள்.

தமது கனிஷ்ட தொகுதி மாணவர்களை குரூரமாக நடத்தும் இவர்களால் எப்படி முன்னுதாரணமாக இருக்க முடியும்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

முன்பு பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டனர்.

இந்த முறை இவர்களை கல்லூரியிலிருந்து விலக்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (ச)

## தீர்வுக்கு ஐ.தே.க. பூரண ஆதரவு

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எவரிடமும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும் என்று திஸ்ஸஅத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு,பெப்.2

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவளிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும் என்று அவர் தெரிவித்தார்.

13ஆம் திருத்தச் சட்டத்தைத் தாண்டிய தீர்வுத் திட்டமொன்று வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்தபோது தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். முதலில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கும், தற்போதைய நிலைப்பாட்டுக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எவரிடமும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## நெரிசலைக் குறைக்க சீனாவின் சொகுசு பஸ்

கொழும்பு,பெப்.2

கொழும்பு வீதிகளில் வாகன நெருக்கடியை குறைக்கும் நோக்கில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு பஸ்கள் இந்த மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தனியார் வாகனங்களால் கொழும்பில் வாகன நெரிசல் ஏற்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக, மொரட்டுவ - புறக்கோட்டை, நீர்கொழும்பு - புறக்கோட்டை, கம்பஹா - புறக்கோட்டை, கெஸ்பாவ - புறக்கோட்டை, ஹோமாகம- புறக்கோட்டை ஆகிய இடங்களில் இந்தப் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த சேவைகள் மொரட்டுவ- புறக்கோட்டை வீதியில் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறைக் கலவரம் குறித்த ஒளிப்பதிவுகள் விசாரணைக்கு

மகசின் சிறைச்சாலையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தின் போது பிடிக்கப்பட்ட வீடியோ ஒளிப்பதிவுகளின் திருத்தப்படாத காட்சிகளை கொழும்பு குற்றவியல் பிரிவினருக்கு வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளையடுத்தே அரசமற்றும்தனியார்தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கொழும்பு பிரதம நீதிவான் பிரஷாந்த ரணசிங்க நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கலவரத்தின் போது சொத்துக்களை சேதப்படுத்திய 47 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதம நீதிவானிடம் கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மகசின் சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக எமில் ரஞ்சன் லமாஹேவா நியமிக்கப்பட்டவுடன் கைதிகள் விரும்பாத சில நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## பாரத லக்ஸ்மன் கொலை; திரிபுபடுத்திய தகவல்கள்

கொழும்பு,பெப்.2

கொலன்னாவ படுகொலை சம்பவங்களை குற்றப் புலனாய்வுத் துறையினர் திரிபுபடுத்தி வருவதாகப் பாரத லக்ஸ்மனின் தரப்புச் சட்டத்தரணியான உபாலி குமாரப்பெரும நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்பத்தில் பாரத லக்ஸ்மனின் மெய்ப்பாதுகாவலரான ஆர்.காமினியின் துப்பாக்கியில் இருந்து இரண்டு சன்னங்கள் வெளியானதாக குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்திருந்தனர்.

தற்போது அவரே முதலில் துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் என்ற முடிவுக்கு குற்றப் புலனாய்வுத் துறையினர் வந்துள்ளனர்.

இதேவேளை, காமினியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜெகத் அபேநாயக்க தமது வாதத்தில் காமினியே முதலில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டார் என்ற சாட்சியம் குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு அளிக்கப்படவில்லை- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணியுடன் வீடு விற்பனைக்கு

நாவலி வடக்கு, முருகன் கோயிலுக்கு அண்மையில் (ஆண்டா வளவு) 12 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இங்கு மா, தென்னை, இலுப்பை, பலா, பனை, வேம்பு போன்ற பயன் தரும் மரங்கள் உள்ள பெறுமதியான காணி.

தொடர்பு: 077 8356074

(13776) (46-6)


## மரண அறிவித்தல்

### கந்தன் முத்தையா



(முன்னாள் பனை தென்னைவள அ/தி சங்க கிளை முகாமையாளர்-காரைநகர்)

(ஓடக்கரை வீதி, சங்கானை)

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஓடக்கரை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் முத்தையா (31.01.2012) செவ்வாய்க்கிழமை அன்று இறை பதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவசுந்தரலிங்கம், இராசநாயகம், புஸ்பராணி, குணநாயகம் (முன்னாள் பனை தென்னைவள அ/தி சங்க கிளை முகாமையாளர்-சங்கானை), தனபாலசிங்கம், அருமைநாயகம், சத்தியவதி, குணவதி, புஸ்பவதி, பிறேமாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலாதேவி, தங்கரத்தினம், காலஞ்சென்ற தங்கவேலு, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பராசக்தி, ரஞ்சினி, நமசிவாயம், ஸ்ரீதரன், உதயசூரியன், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2012) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

(13718) (6,10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
1949 - 01 - 24



ஆண்டவன் அடியில்
2012 - 01 - 03

பொலிகண்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

### இராசேஸ்வரி இருதயராசா

*வணக்கத்துக்கு உரியவள் நீ!*

வணக்கத்துக்கு உரியவள் நீ
எமக்கெல்லாம் வாழ் நாள்களை தந்தவளே
உன் வலியால் பிறந்ததினால் என்னமோ
வலி பிறக்கும்போதெல்லாம்
உன்னையே அழைக்கின்றோம்-''அம்மா'' என்று

உன்னை விட உலகினிலே
எமக்கேதும் பெரிதல்ல - அம்மா
உன் பெருமை பறை சாற்ற
எங்களால் முடியவில்லை-அம்மா

தாய் அன்பைத் தரணியிலே புதைத்து விட்டு
கதறி அழுகின்றோம்- நாதி இன்றி

எங்கள் அன்னையின் பிரிவுத் துயரில் எம்மோடு கலந்து துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

அன்னாரின் பிரிவினால் கலங்கி நிற்கும்
*மகன்கள்:* மனோகரசீலன் (நோர்வே), யேசுராஜ்
*மகள்கள்:* எமில்டா, அனிற்றா
*மருமக்கள்:* தர்மேந்திரன், யேசுதாஸ், றொபிற்ரா,
பேரப்பிள்ளைகள்: ஏஞ்சல் (நோர்வே), டர்ஷா, டிலுஷா, விமலதாஸ், ஹா[illegible],
தேவப்பிரியன்.

தும்பளை,
பருத்தித்துறை.

(C\6748) (6,10)

## மேற்கு ஆபிரிக்காவில் நிர்க்கதியான இலங்கையர்கள்

இலங்கையைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் மேற்கு ஆபிரிக்காவில் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்காவிலிருந்து கனடாவை சென்றடையும் குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல் காரர்களின் பொறியில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் சிக்கியுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று சுட்டிக்காட் டியுள்ளது.

பெண்கள், சிறுவர், சிறுமியர் உள்ளிட்ட 200 பேர் இவ்வாறு மேற்கு ஆபிரிக்காவின் டோகோ நாட்டில் அநாதரவான நிலையில் கைவிடப்பட் டுள்ளனர்.

இந்தியா, எதியோப்பியா வழியாக இவர்கள் டோகோவைச் சென்றடைந்துள்ளனர்.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட மாட்டாது என்று கனடாவின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக்டோவ்ஸ் தெரிவித்தார்.

குறித்த புகலிடக்கோரிக்கையாளர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகவும், அவர்களை வைத்து விசாரணை நடத்துவதை விடவும் இலங்கைக்கு நாடு கடத்துவது மிகவும் பொருத்தமானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் நிர்க்கதியாக டோகோவில் தங்கியிருப் போர் பற்றிய முழு விவரங்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை. (வ)

## சட்டவிரோதமாக வெளிநாடு அனுப்பியவர்கள் கைது

சட்டவிரோதமாக ஆள்களை மலேஷியாவுக்கு அனுப்பும் நடவடிக்கையுடன் தொடர்புடைய வெளிநாட்டுத்தம்பதியினர் உள்ளிட்ட மூவர் மாத்தளை திக்கிரியாவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இது தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் மாத்தளைப் பிரிவில் தீர்வு காணப் படாத குற்றச் செயல்களை விசாரிக்கும் பிரிவினால் இவர்கள் கைது செய்யப் பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து நான்கு கடவுச் சீட்டுக்களுடன் ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது. வெளிநாட்டுத் தம்பதியினருக்கு ஒத்தாசை புரிந்ததாக சந் தேகத்தின் பேரில் மற்றுமொரு வரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான மூவரும் நீதிமன் றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (வ)

## கடிகாரம் ஒப்படைப்பு


தென்மராட்சிப்பெ2 சாவகச்சேரிப் பிரதேச செயலகத்திற்கு அண்மித்த பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப் பட்ட கைக் கடிகாரம் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இதனை ஆதா ரங் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-207)

## காரைநகரில் தொழிற்பயிற்சி

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை காரைநகரில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. ஆறு மாதகாலத்திற்கு நடைபெறும் இந்தப்பயிற்சி நெறியில் முச்சக்கரவண்டி திருத்துதல்,தையல், வெல்டிங் ,கட்டுமானப்பயிற்சி என்பன இடம்பெறும். பயிற்சிகளில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தொழிற்பயிற்சி நிலையம் வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (ங-100)

## கண்ணீர் அஞ்சலி



### வைத்திலிங்கம் சந்திரபாலன்

எமது நிறுவனத்தின் பொறியியல் பீட பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றிய வைத்திலிங்கம் சந்திரபாலன் அவர்களின் மரணச் செய்தியானது ஆழ்ந்த அதிர்ச்சியை எமக்களிக்கின்றது

இவரது இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**IIS CITY CAMPUS**

பிரதம நிறைவேற்று அதிகாரி, இயக்குநர்சபை,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணபிள்ளை விஜயரட்ணம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சிட்னி அவுஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்டவருமாகிய கிருஸ்ணபிள்ளை விஜயரட்ணம் 29.01.2012 அன்று காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை-கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சபாபதி-பொன்னம்மா தம்பதியரின் மரு மகனும், அற்புதமலரின் (ராணி) அன்புக்கணவரும், விஜேந் திரா (ராஜன்), விஜயகுமார் (றோகான்), ஜெகன், சுதன் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், சிறீனிவாசன், விஜயலக்சுமி, பாலசுப் பிரமணியம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மோகன்தாஸ், ஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருசாந்தி, அன் புச்செல்வி, சங்கரி ஆகியோரின் அன்பு மாமனும், செல்வரத்தினம், காலஞ்சென்ற சிவசாமி, சுசிலாதேவி (அவுஸ்திரேலியா), ரதி (NZ), காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் திருமதி நாகம்மா, பேரின்பநாயகம் (UK), கணேசன் (அவுஸ்திரேலியா), திருமதி சோதிமலர் சிறீகாந்தா (அவுஸ்திரேலியா), திருமதி சிறீமலர் சிவநாதன், நடேசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், ஜெசிகா, தமீலா, ராகுல், ரோசினி, பிரியங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.02.2012) சனிக்கி ழமை பி.ப 1-3 மணியளவில் CHAPEL THE MAGNOLIA, MACQUARIE PARK CEMETERY AND CREMATORIUM, NORTH RYDE,SYDNEY யில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்,
தொ.பே:+61298743297,
+61298743897.

தகவல்:
சிறீனிவாசன் (சகோதரன்)
வெள்ளவத்தை

(C\8620) (6,10)

### செல்லையா வள்ளியம்மை



குஞ்சர் கடை, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்லையா வள்ளியம்மை (30.01.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லையாவின் (ஆசிரியர்) அருமை மனைவியும், காலஞ் சென்றவர்களான சிலம்பு-க்ந்தப்பு (முன்னாள் அதிபர், நயினாதீவு ம.வி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் லிங்கமூர்த்தி, விசாகமூர்த்தி, தவமணிதேவி,சாரதாதேவி, சுந்தர மூர்த்தி (முன்னாள் தவிசாளர் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை) ஆகியோரது பாசமிகு தாயும், நகுலேஸ்வரி, சியாமளா, சிவானந்தா, குணேந்திரசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கஜன், வாசன், தனுஜா, சஞ்சீவி, உஷானி, வாகீசன், சக்தீசன், அஜந்தன், அனோஜன், ஐங்கரன் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2012) வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லையா சுந்தரமூர்த்தி,
குஞ்சர்கடை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(13775) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# மத்திய வங்கித் தாக்குதல் நினைவு தினம் கொழும்பில்

இலங்கை மத்திய வங்கியின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் 16 வருட நிறைவு தின நிகழ்வு கொழும்பில் நடந்தது.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையில் மத்திய வங்கியில் விசேட நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது குண்டுத்தாக்குதலில் இறந்தவர்களின் உறவினர்கள் தங்கள் உறவுகளை நினைவு கூர்ந்ததுடன் நினைவுப் பலகை ஒன்றையும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொழும்பு - ஜம்பட்டா வீதியிலிருந்து வெடிபொருள்களை ஏற்றிச் சென்ற மணல் லொறி ஒன்றில் பயணித்தவர்கள் இலங்கை மத்திய வங்கியை அண்மித்த போது தங்கள் உடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் சுமார் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்; 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறி தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட சிலருக்கு எதிராக மத்திய வங்கியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட சிலருக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து அப்போதைய உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அபயபிட்டிய தீர்ப்பளித்திருந்தார்.

இந்தத் தாக்குதலுக்கு உள்ளான மத்திய வங்கி கட்டடத்தின் சில பகுதிகளில் இன்றும் கருப்பு நிறத்தில் அடையாளங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். (ந-319)

# மாணவரது முக்கிய கடமை

தமது உணவு, இரத்தம், தலை (அறிவு) அனைத்துக்கும் முற்றாகத் தாம் கடமைப்பட்டிருக்கும் அவர்தம் பெற்றோருக்குத் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்துதலே அவரது முக்கிய கடமையாகும். மாணவர்கள் அவர்தம் பெற்றோரைச் , சிறப்பாக அவர்களது வயோதிப காலத்தில் நன்கு கவனித்து வரவேண்டும்.

பணம் சம்பாதிக்கும் பேராசையை மாணவர்கள் கைவிட்டுவிட்டு அன்பும், தாம் பிறந்த நாட்டிற்குச் சேவை செய்தலையும் இணைத்த நேர்மையான வாழ்வே உண்மையான செல்வம் என்பதை உணர்ந்து கொள்ளுதல்வேண்டும்.



சாயி சிந்தனை

# நவாலி பெத்தனாச்சி ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

ரூபா 10 லட்சம் செலவில் நவாலி பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயம் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான முன்மொழிவுப் பத்திரத்தை நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயத் தலைவரும் ஆலய உரிமையாளருமான சிவஸ்ரீ இ.சபாரத்தினசிவம் இந்து கலாசார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

முந்நூறு வருட பழைமை வாய்ந்த ஆலயம் மீள் புனரமைப்பின் மூலம் புதுப் பொலிவு பெறவுள்ளது. இதற்காக ரூபா 10 லட்சத்துக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முந்நூறு வருட பழைமை வாய்ந்த ஆலயம் ரூபா 10 லட்சம் செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது

இதேவேளை - நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயத்துக்கான வீதி மீள்புனரமைப்பு குறித்தும் வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைவர் அ.ஜெபநேசனுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எம்.முரளிதரன் அவர்களுக்கும் மக்கள் கையொப்பம் இட்ட பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளதாக நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலய உரிமையாளர் சிவஸ்ரீ இ.சபாரத்தின சிவம் தெரிவித்துள்ளார். (ந)

## கறந்தாய் முருகனுக்கு சுற்றுமதில்

அல்லைப்பிட்டி,பெப்.2

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் அல்லைப்பிட்டி மக்களின் நிதிப் பங்களிப்புடன் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியில் அல்லைப்பிட்டி கறந்தாய் முருகன் ஆலயத்தின் சுற்றுமதில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந-313)

# படகு இயந்திர திருத்தப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.2

வெளி இணைப்பு இயந்திரம் பழுது பார்த்தல், பராமரித்தல் போன்ற பயிற்சி நெறி எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இயந்திரவியல் கல்லூரியில் நடைபெறும். இந்த நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சாதாரண சித்திகளுடன் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும் என உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் உயர்தர கணிதப் பிரிவில் சித்தி அடைந்தவர்கள் BSC Marine Engeniery பயிற்சிக்கு மட்டக்குளி கல்லூரிக்கு விண்ணப்பிக்கலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற ஆசிரியரும் பகுதித் தலைவரும் ஆகிய

திருமதி
**மகாலட்சுமி பத்மநாதன்**

அவர்கள் (31.01.2012) அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய வேம்படி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி, மீசாலை.
(11579) (6,10)

## IDM சாவகச்சேரியில் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன

1. விரிவுரையாளர்கள்
2. கணினி மற்றும் முகாமைத்துவத் துறை (ஆங்கில அறிவு அவசியம்) முதுநிலைமாணி, இளங்கலைமாணி வரவேற்கத்தக்கது.
3. மாணவ முகாமைத்துவ பிரிவுக்கு 21-30 வயது வரையிலான பெண் அலுவலகர்
4. நிறுவன முகாமையாளர் : 25-35 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாரும் வரவேற்கத் தக்கது (முழுநேரம்)

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:
மனிதவள முகாமையாளர்,
IDM, சாவகச்சேரி, இல.5/1, கண்டி வீதி, சாவகச்சேரி.
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவு திகதி 10.02.2012
(C8744) (6,10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
26.03.1953

உதிர்வு
04.01.2012

கடந்த 04.01.2012 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

திருமதி
**சிவனருள் குணரட்ணவதி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (02.02.2012) வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறும் அக்கிரியையிலும் நாளை (03.02.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவசக்தி
வடக்குத்தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

மா.சிவனருள் (கணவர்),
சி.சறோஜினி (மகள்)
(குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்)
மற்றும் குடும்பத்தினர்.
(13925) (6,10)

## அறைகள் வாடகைக்கு

மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள வீட்டில் அறைகள் வாடகைக்கு உண்டு. (மாணவர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு: 0772752513
(13713)

## விற்பனைக்கு

சிமெந்துக் கல் விற்பனைக்குண்டு
27/= (ஒன்று) (கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகமும் செய்யலாம்)
தொடர்புகளுக்கு: 077 7742778
(11615) (45-6)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி வடக்கு, சரஸ்வதி வீதியில் 2 ¾ பரப்பு அளவிலான (வருமானத்துடன் கூடிய ) காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு. 077 7637692, 077 4002286

## விற்பனைக்கு

TATA Tipper LB - xxxx,
2006 Model விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 8147139
(13711) (45-6)

## கார் விற்பனைக்கு

17- XXXX தொடரிலக்கமுடைய மஸ்தா கார் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
021 223 0788, 077 7049895, 078 9145088

## தவறிவிட்டது

வில்லியம் ஜெகெப் என்பவரது N.I.C (743444299V) கரவெட்டி A.G A. office க்கும் Commercial Bank க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 075 0442072 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

மாவிட்டபுரம் வடக்கு, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சீவரத்தினம் பாலரமணன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் மற்றும் வரிப் பத்திரம் என்பன (25.01.2012) புதன்கிழமை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 077 5029237, 021 3734318 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
(13769) (45-6)

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் நல்ல நிலையில் உள்ள (4 STOCK Engine) முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் பிற்பகல் 2-6 மணிவரை
தொடர்பு:
க. தர்மலிங்கம்,
மாவடி ஒழுங்கை,
தொ.பே.021 2255681

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பு சுகிர்தமலர்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பு சுகிர்தமலர் நேற்று (01.02.2012) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சி.செல்லப்புவின் (இளைப்பாறிய அதிபர், புகையிரத நிலையம்) அன்பு மனைவியும், இரத்தினஜோதி, பரமானந்தம், இன்பஜோதி, அருள்ஜோதி, றூபி, ஆனந்தஜோதி, அற்புதஜோதி, நவஜோதி, ஜெகஜோதி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.02.2012) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் மாத்தளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒமெக் ஹொட்டல்,
யாழ்ப்பாணம்.
(13771) (6,10)

தகவல்:
செ.இரத்தினஜோதி
(மகன்)

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
16.08.1918

மறைவு
02.02.2005

திருமதி
**கமலாம்பிகை குமாரசுவாமி**



"நினைவு கூர்தல் என்பது ஒருவகைச் சந்திப்பேயாம்"
இறைவன் திருவடி நீழல் நீங்காப் பெருவாழ்வு பெற எம் பிரார்த்தனைகள்

என்றும் நினைவுடன் மக்கள், மருமக்கள், உடன் பிறந்தோர், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பொன்னையா வளவு,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. (11577) (6,10)

கு. உதயகுமார்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தொட்ட காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். மற்றவர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளையும் சேர்த்து, நீங்கள் செய்யலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். குறைந்தளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில், அதிக அளவில் பலன் கிடைக்கலாம். பரபரப்பாகச் செயற்படும் நாள்.

**இடபம்:** ஆரவாரம் இல்லாமல், அமைதியாகச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என்று கலக்கம் அடையலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவிகளை நாடி வரலாம்.

**மிதுனம்:** உறவினர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை, நண்பர்கள் மூலம் முடிப்பீர்கள். வாய்ப்புக்கள் தேடி வரும் நாள். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பல நாள்களாக வராமல் இழுத்தடித்த பண வரவு ஒன்று வரலாம்.

**கடகம்:** எந்த வேலையையும் பின்னர் என்று பிற்போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தற்செயலாக நடக்கும் சில விடயங்களால், உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவர். மாலை நேரத்தில், நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். ஆதாயகரமான நாள்.

**சிங்கம்:** தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திப்பீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உறவினர் ஒருவரால் ஏற்பட்ட மன உளைச்சல், சங்கடங்கள் தீரும். உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த, கோயில் ஒன்றுக்குச் செல்ல நேரிடலாம்.

**கன்னி:** சில பொருள்களை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைந்து திரியலாம். வியாபாரிகள், வாடிக்கையாளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. திட்டமிட்ட வேலை ஒன்றில், திடீரென மாற்றங்கள் செய்யலாம். எந்த வேலையும் விறுவிறுப்பாக முடியாமல், கடுமையாக இழுத்தடிக்கலாம். கேலிப் பேச்சைத் தவிர்க்கவும்.

**துலாம்:** பழைய நண்பர்களைத் தேடிச் சென்று பார்ப்பீர்கள். வெளியூர் பயணங்களின் போது முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சக ஊழியர்கள் சிலருக்கு கடன் கொடுக்கலாம். சில நாள்களுக்கு முன்னர் எதிர்பார்த்த பணவரவு ஒன்று, இன்று கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** போட்டிகள், எதிர்ப்புகள் விலகி நினைத்ததைச் சாதிக்கும் நாள். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். பல நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரை, இன்று திடீரெனப் பார்க்கலாம். உறவினர்களின் அன்புக் கட்டளைக்கு ஆள்படுவீர்கள்.

**தனுசு:** சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது, ஏதோ ஒரு வகையில் கோபம் கொள்ளலாம். மற்றவர்களுக்காக நீங்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். சில வழிகளில் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம்.

**மகரம்:** கடினமாக முயற்சித்தும், சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். உங்களின் ரகசியம் ஒன்றை, மற்றவர்கள் அறிந்து கொண்டு விமர்சிக்கலாம். நடக்காத ஒரு விடயத்தைப்பற்றி, பெரிய அளவில் கற்பனை செய்வீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்றுச்செய்ய நேரிடலாம். மற்றவர்களின் பேச்சை கேட்டு, சில காரியங்களில் இறங்குவீர்கள்.

**கும்பம்:** நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பெண்களால் மகிழ்ச்சியான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியாக ஒப்பந்தம் போடலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். சந்தோஷமான செய்தி கேட்கலாம்.

**மீனம்:** என்னதான் பொறுப்போடு செயற்பட்டாலும், ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகள் உருவாகலாம். பண விடயங்கள் தொடர்பாக சிலருடன் வாக்குவாதம் செய்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு வராத சிலர் வரலாம். குடும்பச் செலவுகள் திட்டமிட்டதை விட அதிகமாவதால், கவலை அடையலாம்.

**நாளை**

தை 20 வெள்ளி 03.02.2012
திதி: ஏகாதசி பி.இ. 03.59 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப.10.24 வரை
சுபநேரம்: 06.35- 08.05 வரை,
ராகு காலம்: 11.05-12.35வரை


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 3 | 5 | 2 | |
| | | | 1 | | 2 | 9 | | |
| | 8 | | 4 | | 5 | | | 1 |
| 8 | 4 | 3 | | | | | | |
| | 9 | 1 | 8 | | 6 | 3 | 4 | |
| | | | | | | 2 | 8 | 9 |
| 4 | | | 2 | | 8 | | 6 | |
| | | 8 | 6 | | 1 | | | |
| | 3 | 9 | 5 | | | | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

# வைத்திலிங்கம் சந்திரபாலன்



பளை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வை. சந்திரபாலன் (பொறியியலாளர்,முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர், மனோகரன் அன்ட் வெற்றிவேல் கம்பனி) 31.01.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம்-காலஞ்சென்ற ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சங்கீதா, சாமந்தி, சாலினி, (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆரபியின் அன்புப் பேரனும் பாக்கியநாதன் (கனடா), பத்மநாதன் (கொக்குவில்) ஆகியோரின் சகோதரனும். ரவீந்திரன் (கொக்குவில்), விஜயகுமாரி (வவுனியா), உமா (சுதா - சுவிஸ்), கௌரி (கீதா-கனடா), வசந்தா (பிரான்ஸ்), கவிதா (வவுனியா) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும். காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பெறா மகனும் விக்னேஸ்வரன் (அவுஸ்ரேலியா), ச.கஸ்தூரி (கனடா), ஜோன்ஷன், றொபின்ஷன், (வவுனியா), டினோஜா, குறோணா, புருஷோத் (சுவிஸ்), சேயோன், சங்கரி(கனடா), அபிநயா, விஷ்ணு (பிரான்ஸ்), அஸ்வத்தாமன், அஷ்வித் (வவுனியா) ஆகியோரின் மாமனும் லீலாவதி (கனடா), நிரஞ்சலா (கொக்குவில்), வத்சலா(கொக்குவில்), இராஜ்குமார், (வவுனியா), கண்ணன் (சுவிஸ்), இரஞ்சித் (கனடா), சுரேந்திரம் (பிரான்ஸ்), அஸ்கர் (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் இராக வேந்தனி, ஸ்ரீராகவி, ஸ்ரீகயன், கயரூபன் (கொக்குவில்), சஞ்செயன், கௌசிகன், கீர்த்திகன், றுக்தாயினி (AMT,பேராதனை பல்கலைக் கழகம்), ரூபலவன் (J.H.C 2012), ஜிந்துஜன் (H.H.C 2013) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் முதலிகோயில் வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவூடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**வை. பாக்கியநாதன் (கனடா),**
**வை. பத்மநாதன் (கொக்குவில்),**
**வை. ரவீந்திரன் (கொக்குவில்).**

**முதலி கோயில் வீதி,**
**கொக்குவில்.**

(13703) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்பானத்துள் துகள்கள்

சாவகச்சேரி,பெப்.2

சாவகச்சேரி வர்த்தக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த புதிய ரக குளிர்பானப் போத்தலுக்குள் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் (துகள்கள்) தூசுகள் காணப்பட்டன. பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்து குறித்த வர்த்தக நிலையத்துக்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அவற்றைப் பார்வையிட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த குளிர்பானங்கள் முழுவதையும் பெட்டிகளுடன் ஏற்றிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைக்குத் துப்புரவு செய்யப்படாத மூடியில் இருந்த தூசுகள் உட்சென்றிருக்கலாமெனக் கருதப்படுகிறது. எனினும் பரிசோதனைக்காக அவை யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-207)

## குருபூசைத் தினம்

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள், தவத்திரு திருப்புகழ் சுவாமிகள், தவத்திரு சுவாமி சச்சிதானந்த செல்லம்மா மாதாஜி ஆகியோரின் குருபூசை தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கைதடி மாதாஜி லிங்கேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

# இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

இலங்கையின் கச்சதீவுக்கு அருகே மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் விரட்டி அடித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை 600 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர்.

வழக்கம்போல் கச்சதீவு கடல் பகுதிக்குள் செல்ல முயன்ற மீனவர்களை, நள்ளிரவில் வந்த இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தனர்.

மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் பலர் தடை செய்யப்பட்ட இரட்டை மடி வலையில் மீன் பிடித்த தால்தான் இலங்கை கடற் படையினர் விரட்டியடித்ததாகவும், இதனால் போதிய மீன்பாடு இல்லை என்றும் கரை திரும்பிய ஒற்றை மடி மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து, மீனவ சங்க பிரதிநிதிகள் சிலர் தெரிவித்ததாவது:

கடல் வளத்தை அழிக்கும் இரட்டை மடி வலையால் மீன் பிடிக்கவும், கழிவு நீர் வழிய வாகனங்களில் மீன்களை ஏற்றிச் செல்லவும், தடை இருந்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் மீன் வளம் அழிவதுடன் ஒற்றை மடி, கரை வலை, நாட்டுப் படகு மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுகிறது - என்றனர். (வ)

## திறந்த பல்கலையில் புதிய கற்கைநெறி

யாழ்ப்பாணம், பெப்.2

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட தேவைகள் சார் கல்வித் துறையினால் நடத்தப்படும் கற்றல் இயலாமையுடைய சிறாரைக் கற்பித்தல் தொடர்பான குறுங்காலச் சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கைநெறி விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## அத்தாட்சிப்படுத்திப் பெறலாம்

சாவகச்சேரி,பெப்.2

சாவகச்சேரிப் பொலிஸாரால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட உழவு இயந்திரப் பெட்டியின் பின் கதவு சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதனையடுத்து தவறவிட்டவர்கள் மூன்று மாத காலத்தினுள் நீதிமன்றில் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ந-207)

## கலையரங்கம் திறப்புவிழா அடுத்தமாதம்

நெடுந்தீவில் உள்ள தேவா கலையரங்கம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. றான் அமைப்பினரால் ஏழு தடவைகள் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் திட்டத்தில் ரூபா 37 லட்சம் இதற்கு ஆரம்பத்தில் செலவு செய்யப்பட்டது.

கட்டடத்தின் வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் 2011ஆம் ஆண்டில் ரூபா 44 லட்சம் என்ற நிதி ஒதுக்கீட்டின் கீழ் தற்சமயம் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதை அடுத்து திறப்புவிழா இடம் பெறவுள்ளது. (வ-7)

## நொங்குவில் மயானத்தை துப்பரவு செய்யுமாறு கோரிக்கை

தென்மராட்சி, பெப்.2

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதால், அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்தும்- வெடிபொருள் அபாயம் உள்ள- நொங்குவில் தரவை மயானத்தை துப்புரவு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர கடந்த நவம்பர் மாதம் அனுமதி வழங்கப்பட்டு இதையடுத்து மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் அந்தப் பகுதியில் உள்ள நொங்குவில் தரவை மயானப் பகுதியில் வெடிபொருள் அபாயம் உள்ளதாக அபாயப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் உள்ள வெடிபொருள்களை அகற்றி பொதுமக்கள் பாவனைக்கு விடுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்தில் நடைபெற்ற பிரிவு அபிவிருத்திக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இந்த விடயம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் ஊடாக வெடிபொருள்கள் அகற்றும் பிரிவுக்கு அறிவிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலருக்குத் தெரிவித்தார்.

இதேவேளை இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 216 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் வழங்குமாறு யாழ்.அரச அதிபருக்கு உடனடியாக அறிவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பிரதேச செயலரைக் கேட்டுக் கொண்டார். (ந)

## இராணுவ வாகனம் – கார் மோதி விபத்து

இராணுவத்தினரின் கழிவகற்றும் வாகனமும் தனியார் ஒருவரின் காரும் மோதிக் கொண்டதில் கார் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள முட்டாசுக் கடைச் சந்தியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வாகனத்தில் பயணித்தவர்கள் எவரும் காயமடையவில்லை. வாகனங்கள் மட்டுமே சேதமடைந்துள்ளன. இது தொடர்பாக யாழ்.பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-86)

# மரண அறிவித்தல்



## திருமதி
## மகாலட்சுமி பத்மநாதன் (J.P)

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர் , மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, மீசாலையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட மகாலட்சுமி பத்மநாதன் (30.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் பத்ம நாதனின் (ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர், கிளிநொச்சி வ.பி. போ.சபை) அன்பு மனைவியும் லோகதாஸ் (நோர்வே), பிரதீபா (கனடா), மைதிலி (நோர்வே), காலஞ்சென்ற மலர்விழி மற்றும் வதனதாஸ் (நோர்வே), கேதனி ஆகியோரின் அன்புத் தாயும் கோகுல பாரதி (நோர்வே), யோகலிங்கம் (நோர்வே), அகலிகை (நோர்வே), விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயன், நிவேதிதா, ஜஸ்மினி, வாசவி, காலஞ்சென்ற சர்மினி மற்றும் கம்சிகா, கவியரசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, சோமஸ்கந்தராசா, கணேசன் மற்றும் கமலாம் பிகை (கொழும்பு), காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் வடிவாம்பிகை (தாதிய உத்தியேகத்தர் டெல்மன் வைத்தியசாலை, கொழும்பு), ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, திசைவீரசிங்கம், சிவபாக்கியம் மற்றும் இராசமணி (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(13777) (45-6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி மேற்கில் மணல் கொள்ளை

## காணிகளை பாதுகாக்க முடியாது மக்கள் திணறல்

தென்மராட்சி, பெப்.2

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டாத கிளாலி மேற்கு, தரவை தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள காணிகளிலிருந்து களவாக வாகனங்களில் தினமும் பெருமளவில் மணல் கடத்திச் செல்லப் படுவதாக அப்பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

காணி உரிமையாளர்கள் காணியைச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டாலும் மீளக்குடியமர இன்னும் அனுமதிக்கப்படாததால் அவர்களால் மணல் கொள்ளையைத் தடுக்கவோ தமது காணிகளைப் பாதுகாக்கவோ முடியவில்லை. தாம் காணிகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் சில நபர்கள் காணிகளுக்குள் புகுந்து மணல் ஏற்றிச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

**மக்கள் மீளக்குடியமர இன்னும் அனுமதிக்கப் படாததால் மணல் கொள்ளையைத் தடுக்க முடியவில்லை**

இது தொடர்பாக அப்பகுதியில் உள்ள படை முகாமில் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தனர். (உ-207)

## சுகாதாரத் தொழிலாளருக்கு காணி வழங்கும் பணி துரிதம்

யாழ்ப்பாணம்,பெப்.2

சங்கானை மத்தி- அராலிக்கிராமத்தில் உள்ள 70 சுகாதாரத் தொழிலாளர் குடும்பங்களுக்குக் காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

சுழிபுரம் பிரதேச சபைத் தலைவி திருமதி நா.ஐங்கரன் தலைமையிலான குழு கடந்த வாரம் இரு இடங்களிலும் காணி அளவை தொடர்பான பரப்பளவு மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டார்.

இன்னும் இரு வாரங்களில் காணி பங்கீட்டு அடிப்படையில் காணி உறுதி வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என்று அவர் தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரதும் பங்களிப்பு இதற்காகப் பெறப்பட்டுள்ளது. நில அளவை முடிவுற்றதுடன் காணி உறுதி எழுதப்பட்டு வழங்கப்படும் என பிரதேச சபைத் தலைவி அறிவித்துள்ளார்.

காணி வழங்குவதற்கான அனைத்து அதிகாரங்களையும் முன்னாள் ஆளுநரின் செயலாளர் சி.இரங்கராஜா எழுத்து மூலம் வழங்கியிருந்தார். (உ-01)

## பருத்தித்துறைப் பொலிஸுக்கு நிரந்தரக் கட்டடம்

வடமராட்சி, பெப்.2

போரால் முற்றாக அழிந்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தை மீளக்கட்டுவதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

முன்னர் பொலிஸ் நிலையம் அமைந்திருந்த பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு எதிரேயுள்ள அதே இடத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடி, பொலிஸார்கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமய குருமார்களின் பிரார்த்தனைக்கு மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கல்லை நட்டுவைத்தார்.

தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, 521 ஆவது படையணியின் பிரிகேடியர் டிக்கிரிதிஸ நாயக்கா, சிரேஷ்ட பொலிஸ் அதிபர் காமினி பெரேரா, வடபிராந்திய பொலிஸ் அதிபர் இந்திரன், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன், உதவி அரசாங்க அதி பர் திருமதி உஷா தபலிங்கம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ -236)

## இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளுடன் இலங்கைக் கடற்படை போர்ப்பயிற்சி

அந்தமான் - நிக்கோபார் கடற்பகுதியில் இலங்கை உள்ளிட்ட 14 நாடுகள் பங்கேற்கும் பாரிய கடற்போர்ப் பயிற்சி நேற்று ஆரம்பமாகியது.

இந்தியாவின் ஏற்பாட்டில் 14 நாடுகள் கலந்துகொள்ளும் 'மிலன்' என்ற பெயரிலான ஒரு வாரகாலப் போர்ப் பயிற்சி நேற்று தொடக்கம் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

'மிலன்' என்ற பெயரில் 1995 ஆம் ஆண்டு 4 நாடுகளுடன் இணைந்து இந்தப் போர்ப்பயிற்சியை ஆரம்பித்த இந்தியா, ஆண்டுதோறும் இதனை நடத்தி வருகிறது.

இலங்கை, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, புறூணை, மியான்மர் ஆகிய ஒன்பது நாடுகள் இந்தியக் கடற்படையுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ள போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளன. (த-சி)

## நீதிமன்ற வளாக வீதியில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு

வடமராட்சி, பெப்.2

பருத்தித்துறை நகரின் புனரமைப்புச் செய்யப்பட்ட நீதிமன்ற வளாகம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 30 வருட கால இடைவெளிக்குப் பின்னர் நீதிமன்ற வீதியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த கால யுத்தத்தின் போது மேற்படி வீதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்டுப் பொதுமக்கள் நடமாட முடியாத வீதியாக இருந்து வந்தது.

போர் முடிவுற்று வழமையான சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்படி வீதி மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டபோதிலும் போக்குவரத்து குறைவடைந்து காணப்பட்டது.

தற்போது நீதிமன்றம், பொலிஸ் நிலையம், கொட்டடிச் சந்தி, சித்திவிநாயகர் கோயில், ஹாட்லிக் கல்லூரி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்கு நீதிமன்ற வீதியூடாகப் பொது மக்கள் மற்றும் மாணவர்கள் சென்று வருவதனால் 30 வருட கால இடைவெளிக்குப் பின்னர் ஆள் நடமாட்டம் அதிகமான வீதியாக நீதிமன்ற வீதி மாற்றமடைந்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

இந்த வீதி ஊடாக கடற்கரை வீதி ஊடான பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ பஸ் சேவைகளும் இடம்பெற்று வருகின்றன. (வ-236)

## மேன்முறையீடு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.2

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா முதலாவது நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த ஆட்சேபத்தை ஏற்றுக்கொள்ளாமை தொடர்பில் செயயப்பட்டுள்ள மேன்முறையீடு நேற்று விசாரணைக்காக அழைக்கப்பட்டது.

மேன் முறையீட்டு நிதிபதிகளான எல். ரஞ்சித் சில்வா மற்றும் எச்.என். ஜேபெரேரா ஆகியோர் முன்னிலையில் இந்த மேன்முறையீடு விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதற்க சமமான மற்றுமொரு வழக்கு தொடர்பில் சரத் பொன்சேகா உயர் நீதிமன்றத்தில் விடயங்களை சமர்ப்பித்துள்ளதாக அவர் சார்பாக பிரசன்னமாகிய சட்டத்தரணி ஷானகே குரே நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தில் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது அதில் தெரிவிக்கப்படும் விடயங்கள் முக்கியமானவை என்பதால் மேன்முறையீட்டு மனு விசாரணையை பிற்போடுமாறு சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் ஆட்சேபம் தெரிவிக்காத காரணத்தால் விசாரணை மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த)


## உளம் கனிந்த பாராட்டும் நன்றி நவிலலும்

*செயற்கரிய செய்வார் பெரியர்-சிறியர்*
*செயற்கரிய செய்கலாகாதார் -*

என்னும் திருக்குறளிற்கு ஏற்ப



சாவகச்சேரி வாரிவளம் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிவா றேடிங்கோ லிமிட்டட், கொழும்பு, சிறிமுத்துமாரி அம்மன் றேடேர்ஸ்- யாழ்ப்பாணம் ஆகியவற்றின் உரிமையாளரும், தென்மராட்சியில் பல கோயில்களையும் அதன் தேவைகளை அறிந்து திருப்பணிகள் மாத்திரம் அன்றி புனருத்தாபனமும் செய்து முடித்த இறைபணியாளர்

**வைத்திலிங்கம் சிவராசா அவர்கள்**

எமது ஆலயத்தின் தேவையை உணர்ந்து மேற்கு, வடக்குப்பக்க சுற்றுக் கொட்டகையை ரூபா 13 இலட்சம் செலவில் புதிதாக நிர்மாணித்து, அதன் திருப்பணியை நிறைவு செய்த அவருக்கும் அவர் பாரியார் மல்லிகா சிவராசா மற்றும் பிள்ளைகள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவரின் இறைபணி மேன்மேலும் வளர்ந்து பல்லாண்டு காலம் வாழவும் இவரது தொழில் ஸ்தாபனங்கள் செழிப்புற்று ஓங்கவும் கலியுகக் கந்தன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

தலைவர்,
ஆலய பரிபாலன சபையினர்,
கிராம்புவில் படையாண்டான் தோட்டம்
கந்த சுவாமி கோயில்,
சாவகச்சேரி.
(11580) (6,10)

## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் எலக்ற்ரோனிக் நிறுவனத்துக்கு விற்பனையாளர் பெண்கள் தேவைப்படுகின்றனர் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு. 077 6136007

## கடை விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு கோபுரம் வீதி, விக்டோரியா வீதிச் சந்திக்கு முன்பாக புதிதாக கட்டப்பட்டுள்ள கடை 15'x 60' (900 Sq) விற்பனைக்குண்டு மேல் மாடி கட்டக்கூடிய அனுமதியும் உண்டு. விலை பேசித்தீர்க்கலாம். தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 077 7749 174, 0770575454

## மில் இயந்திரம் விற்பனைக்கு

சைனா நெல் உடைக்கும் மிசின்-02, 70 பொலிசர் -01, பாக்கு மிசின் சாப், செப்பிரேற்றர் இயந்திரம் (இன் ஜின்) என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
075 6402818

## சாரதிகள் தேவை

B.M.C. லொறிகள் செலுத்தக் கூடிய சாரதிகள் தேவை.
தொடர்பு: 0212225688

## தவறிவிட்டது

மாதாகோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் எனும் முகவரியுடைய செபமாலை கபில் என்பவரின் தே.அ.அட்டை (862062868 V) மற்றும் சாரதி அனுமதி பத்திரமும் மோட்டார் சைக்கிள் ஆவணமும் அடங்கிய பேர்ஸ் மேற்படி முகவரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
0771561996
எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(13782) (6,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் நீண்டகாலமாக பொது முகாமையாளராகக் கடமையாற்றிய

**வைத்திலிங்கம் சந்திரபாலன்**

அவர்கள் 31.01.2012 ஆம் திகதி இறைபதமடைந் ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியி னைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனோகரன் அன் வெற்றிவேல்
கட்டட ஒப்பந்தகாரர்கள்,
நிர்வாகப்பங்காளர்களும்
ஊழியர்களும்.
(13779) (6,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை அங்கத்தவர்

**வைத்திலிங்கம் சந்திரபாலன்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் வர்த்தக
. தொழிற்துறை மன்றம்.
(C\8753) (6,10)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் சரசாலை தெற்கு கிராம அலுவலருமான செல்வி தங்கராசா தயானந்தி அவர்களின் பாசமிகு தந்தை

**பொன்னையா தங்கராசா**

அவர்கள் 30.01.2012 இல் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பிரதேச செயலக
ஊழியர் நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம்.
தென்மராட்சி, சாவகச்சேரி.
(C\2930) (6,10)

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் காரைநகர் மத்தி கிராம அலுவலர் சிவபாதம் சுமந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**சங்கரப்பிள்ளை சிவபாதம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலகம்,
காரைநகர்.
(C\8755) (6,10)

பிரதேச செயலரும்
உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வலய உதைபந்து;
# வெற்றியீட்டிய அணிகள்

வலி.வடக்கு, பெப்.02

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தை வென்றது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வென்றது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 5:0 என்ற கோல்கணக்கில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வென்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும்இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல்கணக்கில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை வென்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல்களைப் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-86)



நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.(7)

## பாஷையூர் அன்ரனிஸ் அணியை வென்றது ஞானமுருகன் கழகம்

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்க ளுக்கு இடையே அமரர் ஜே.பி. சி.பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்ட ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது.

11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத் தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

### இருதயநாதர் வெற்றி

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இருதயநாதர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த வியாழக்கிழமைகரும்புள்ளியான் இருதயநாதர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் கைலாஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கைலாஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## கைலாஸ், இளங்கதிர் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.2

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கைலாஸ் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலிநகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கைலாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருதயநாதர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கைலாஸ் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## கச்சதீவு அந்தோனியார் திருவிழா: அடுத்தமாதம் 2ஆம் திகதி ஆரம்பம்

### தமிழக பக்தர்களுக்கும் அழைப்பு

கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழா மார்ச் 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த நாள் சிலுவைப்பாதை, தேர்ப்பவனி, 4 ஆம் திகதி திருப்பலி மற்றும் கொடியிறக்கம் என்பன நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களும் நெடுந்தீவுப் பங்குத் தந்தை அமல்ராஜ் அடிகள் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

கச்சதீவுத் திருவிழாவில் தமிழகப் பக்தர்களைக் கலந்துகொள்ளுமாறு கோரி யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அழைப்புக்கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விழாவில் பங்கேற்க இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உட்பட தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து அதிகளவில்பக்தர்கள் செல்ல முடிவுசெய்துள்ளனர்.

மூன்று நாள்கள் திருவிழாவாக இருந்தாலும் மார்ச் 3, 4 ஆம் திகதிகளில் மட்டுமே தமிழக பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். இதனால் மார்ச் 3 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் படகில் செல்ல அனுமதிக்கப்படும்.

இதுகுறித்து இராமேஸ்வரம் வேர்கோடு ஆண்டகை, மைக்கில்ராஜ் கூறியவை வருமாறு -

பக்தர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. கச்சதீவுக்கு புனித பயணம் மேற்கொள்ளும் பக்தர்களின் போக்குவரத்துச் செலவை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். படகில் செல்லும் முன் பக்தர்களிடம் சோதனை செய்வதால் ஏற்படும் காலவிரையத்தை தவிர்க்க, இந்தியக் கடலோர காவல்படையே பக்தர்களைச் சோதனை செய்து அவர்களது கப்பலில் ஏற்றிச்செல்ல வேண்டும் - என்றார்.

(த-சி)

**மெசின் மைண்டர் தேவை**

ஒவ்செட் மெசின் (கமடா) இயக்குநர், கணினி ரைப்செற்றிங், பைண்டர் உடன்தேவை. நேரில் வரவும்.

சிவதயா பிறிண்டேர்ஸ்
575, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 021 567 2342

**மரண அறிவித்தல்**

**திருமதி தையல்நாயகம் முத்துக்குமாரு**
(முத்துக்குமாரு இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர்)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தையல்நாயகம் முத்துக்குமாரு நேற்று (01.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் மகாலிங்கம், குலேந்திராதேவி ஆகியோரின் மாமியும் மேனகா, றதீஸ்குமார், மீரா, நிவேந்தன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற தங்கநாயகம், பூபதியம்மா மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி சிவியற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
மகன்

**உங்கள் நினைவுகள் சுமந்த ஐந்து ஆண்டுகள் நிறைவில்**




**அமரர் சூசைப்பிள்ளை வேதநாயகம்**

பிரிவுடன் ஐந்தாண்டுகள் நிறைந்துவிட்டது
எம்மனதில் நிறைவுடன் நிறைந்துள்ளீர்கள்
வாழ்க்கை ஓட்டத்தில் வண்ணக்காலங்களை
நீங்கள் வாழும்போது நாங்கள் கண்டுகொண்டோம்
பிறப்பதும் இறப்பதும் இவ்வுலகில் நிஜம்
இறக்கும்போது பிரிவதும் நிஜம் - ஆனாலும்
கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் மறுபடி சந்திப்பது
- நிஜத்திலும் நிஜம்

671, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

**உடனடி வேலை வாய்ப்பு**

பாதுகாப்பு கமரா (CCTV Camera) பொருத்தும் நிறுவனத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. (ஆண்)

★ படித்துவிட்டு வீட்டில் இருப்போரும், தொழில் ஒன்றைப் பயில ஆர்வமுடையோரும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களைப் பெற தொடர்பு கொள்ளவும். 0759 237 547 (1318)

**கண்ணீர் அஞ்சலி**

வட இலங்கை சங்கீத சபையின் உப தலைவரும்
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான
கலாபூஷணம் க.கணபதிப்பிள்ளை
அவர்களின் துணைவியார்

**திருமதி சந்திரபூபதி கணபதிப்பிள்ளை**

அவர்கள் 30.01.2012 இறைபதம் அடைந்ததையிட்டு மேற்படி சபை அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கை சங்கீத சபை
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-8757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுக வீரரின் தலைமையில் ஆஸி.


# மூக்குடைந்த இந்தியா



அரைச்சதம் அடித்த ஆஸியின் வேட்

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கு தலைவராக, நேற்றைய தினமே தனது முதலாவது சர்வதேச ஆட்டத்தில் விளையாடிய பெய்லி நியமிக்கப்பட்டிருந்தார். அவரது சிறப்பான அணித்தலைமையிடம் டோனியின் அனுபவ அணித்தலைமை நேற்றுத் தோல்வியைச் சந்தித்தது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம் பெற்ற 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலிய அணி 4-0 என்ற கணக்கில் இந்திய அணிக்கு மரண அடி கொடுத்திருந்தது. இந்த நிலையில் இரண்டு ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடர் நேற்று ஆரம்பமானது. முதலாவது ஆட்டம் சிட்டினியில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் டோனி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். ஆஸ்திரேலிய அணியில் அணித்தலைவர்பெய்லிவேட்பட,பெஹேரட்டி, பவுலிங்கர் ஆகியோர் நேற்றைய தினம் முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் அறிமுகமானார்கள்.











ஆஸி.யின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டேவிட் வோர்னர், வேட் இருவரும் களமிறங்கினர். ஆரம்பத்திலேயே இந்தியாவின் பந்து வீச்சை வெளுத்து வாங்கத் தொடங்கியது இந்த ஜோடி. 3.5 பந்து பரிமாற்றங்களில் 38 ஓட்டங்களைப் பெற்ற போது வோர்னர் 14 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் பிரிட் களமிறங்கினார்.

ஆரம்பத்திலிருந்து இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு தண்ணி காட்டி போட்டுத்தாக்கிய வேட் தொடர்ந்தும் தனது பங்குக்கு வெளுத்து வாங்கினார். பிரிட் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்த போதும் நீண்ட நேரம் களத்தில் நிலைக்கவில்லை. 21 பந்துகளில் 17 ஓட்டங்களுடன் பிரிட் வெளியேறினார். பிரிட்டை தொடர்ந்து டேவிட் ஹஸி களம்புகுந்தார்.

மறுமுனையில் அதிரடியில் கலக்கிய வேட் 34 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மூன்றாவது இலக்குக்காக 36 பந்துகளில் 56 ஓட்டங்களை வேட், டேவிட் ஹஸி இருவரும் பகிர்ந்த நிலையில் வேட்டினது ஆட்டத்துக்கு முடிவு கட்டப்பட்டது. வேட் 43 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 72 ஓட்டங்களை விளாசிய நிலையில் ரெய்னாவின் பந்தில் 'போல்டானார்'.

அதன் பின்பு அணித்தலைவர் பெய்லி களமிறங்கி டேவிட் ஹஸியுடன் இணைந்து வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர். வேகமாக ஓட்டங்களைக் குவித்த டேவிட் ஹஸி ஆட்டத்தின் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 30 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஆஸ்திரேலிய அணி 20 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பெய்லி 11 பந்துகளில் 12 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின், வினய்குமார், ராகுல் சர்மா, ரெய்னா தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

சவாலான இலக்கை விரட்ட கம்பீர், சேவாக் ஜோடி களமிறங்கியது. இருப்பினும் சேவாக் வழமை போன்று 4 ஓட்டங்களுடன் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே வெளியேறினார். இரண்டாவது இலக்குக்காக கம்பீர், ஹோக்லி ஜோடி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. ஆஸிக்கே இவர்கள் அதிரடி காட்ட முனைந்த போதும் நீண்டநேரம் இவர்களது ஆட்டம் நிலைக்கவில்லை. அணி 5.3 பந்து பரிமாற்றங்களில் 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கம்பீர் 14 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹோக்லி 21 பந்துகளில் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த ரோகித் சர்மா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முதலாவது பந்திலேயே 'போல்டானார்'. ரோகித்தை தொடர்ந்து நுழைந்த டோனி, ரெய்னாவுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். அதிரடிகளை அளவுடனேயே அடக்கி வாசித்தது இந்த ஜோடி. ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சுக்கு இவர்களது இணைப்பு நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. ரெய்னா 14, தொடர்ந்து நுழைந்த ஜடேஜா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 13.3 பந்து பரிமாற்றங்களில் 81 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது.

தோல்வியை நோக்கி விரைந்த இந்திய அணியை டோனி, அஸ்வின் ஜோடி சிறிது நம்பிக்கையளித்து ஆடியது. டோனி ஒரு முனையில் தன்னால் இயன்றவரை அதிரடியாக ஆடிய போதும் அணியின் தோல்வியை தவிர்க்க முடியவில்லை. இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 31 ஓட்டங்களால் இந்திய அணி தோல்வியடைந்தது. டோனி 43 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 48 ஓட்டங்களையும், அஸ்வின் 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இவர்களிடையே இணைப்பாட்டமாக 59 ஓட்டங்கள் பகிரப்பட்டது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி கிறிஸ்ரெய்ன், டேவிட் ஹஸி தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அரைச்சதம் அடித்த வேட் தெரிவானார். (15)

## இது சரியான நேரமல்ல

இந்திய அணியின் அணித்தலைவர் பதவி குறித்து பேச, இது சரியான நேரமல்ல. சேவாக்கிற்கு அணித்தலைவராகும் தகுதியில்லை, என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

அன்னிய மண்ணில் பங்கேற்ற டெஸ்ட் போட்டியில், தொடர்ந்து 8 தோல்வியடைந்ததால், அணித்தலைவர் டோனியை மாற்ற வேண்டும் என்ற, விவாதம் எழுந்துள்ளது. இது குறித்து வாசிம் அக்ரம் கூறியதாவது:

அடுத்தடுத்த தோல்விகளால் எல்லாம் டோனியை நீக்குவது குறித்தே பேசுகின்றனர். இதுபற்றி பேச சரியான தருணம் இதுவல்ல. இப்போதும் சரி, எப்போதும் சரி இந்திய அணிக்கு தலைமை தாங்க டோனி தான் சரியான நபர் என்று நம்புகிறேன். சமீபகாலமாக அன்னிய மண்ணில் அடைந்த தோல்விகள் காரணமாக, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) டோனியை பலிக்கடா ஆக்க முயற்சிப்பது அழகல்ல. இந்திய துணைக் கண்டத்தில் இதுதான் பல காலமாக நடக்கிறது.

சேவாக் வேண்டாம்:

இவருக்குப் பதில் சேவாக் அல்லது விராத் ஹோக்லியை அணித்தலைவராக்க முயற்சிப்பதாக தெரிகிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த இருவருக்குமே அணித்தலைவராகும் தகுதியில்லை. அடிலெய்டில் அணித்தலைவராக, இந்திய அணி பெருமைப்படத்தக்க வகையில் சேவாக், ஒன்றும் செய்துவிடவில்லை. இவரிடம் அதிகம் எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

ஹோக்லி குழந்தை:

விராத் ஹோக்லியை பொறுத்தவரையில் இன்னும் குழந்தை தான். இப்போது தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்துள்ளார். குறைந்தது இன்னும் 5 ஆண்டுகள் இவர் காத்திருக்க வேண்டும். டெஸ்ட் அணித்தலைவராக டோனி போதுமான அளவு செயல்படவில்லை என்பது உண்மை தான். அதேநேரம், 2 தொடர்களில் தோற்றோம் என்பதற்காக இவரை வெளியேற்ற வேண்டும் என்று அர்த்தமல்ல. அணியை முன்னேற்ற பி.சி.சி.ஐ.,க்கு இந்த வழிதான் உள்ளதா?

டெஸ்ட் தொடரைப் போல, பந்து வீச்சுத்தான் இன்னும் கவலையாக உள்ளது. இஷாந்த் சர்மாவிடம் பெரியளவில் எதிர்பார்த்து, ஏமாற்றம் தான் கிடைத்தது. எல்லோரும் இவருக்கு அதிர்ஷ்டம் இல்லை என்கின்றனர். இதெல்லாம் திறமையற்றவர்கள் சொல்லும் காரணம். 45 டெஸ்டில் பங்கேற்ற பின்பும் எப்படி பொறுப்பாக செயல்படுவது என்பது குறித்து இவர் கற்றுக் கொள்ளவில்லை.

[illegible] போர்னில் கூட சிறப்பாக செயல்பட முடியவில்லையே. முதலில் ஆடுகளத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் எப்படி பந்து வீச்சு செய்வது என்பதை இவர் கற்றுக் கொண்டால் போதும் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததே



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் இடையே 'ரி-20' ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்லி, ஆட்டத்தின் முடிவில் டோனி என்னைப் பாராட்டுவார் என்று தெரிவித்தார். அதே போன்றே ஆட்டத்தின் முடிவு அமைந்து விட்டது.

ஆஸ்திரேலிய அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பெய்லிக்கு இது தான் முதல் சர்வதேச ஆட்டம். அறிமுக ஆட்டத்தில் அணித்தலைவராக களமிறங்கும் 2 ஆவது ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையுடன் நேற்றைய ஆட்டத்தில் களமிறங்கினார் பெய்லி.

அணித்தலைவராக களமிறங்குவது குறித்து பெய்லி கூறுகையில், ஒரு வீரராகவும், அணித்தலைவராகவும் சர்வதேசப் போட்டியில் முதல் முறையாக களமிறங்க இருப்பது பதற்றமாக இருக்கிறது. விளையாட, விளையாடப் பதற்றம் குறைந்துவிடும்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் டோனியுடன் இணைந்து விளையாடியுள்ளேன். அதற்காக இந்த ஆட்டத்தை சாதாரணமாக எடுத்து கொள்ள மாட்டேன். ஆட்டத்தின் முடிவில் டோனி என்னை பாராட்டும்படி செயல்படுவேன் என்றார்.

அதே போன்று ஆட்டத்தில் டோனியிடம் கற்ற வித்தையைக் கொண்டே பெய்லி, டோனிக்கு ஆப்படித்து விட்டார். (15)

# ஐரோப்பியக் கிண்ணம் இந்தியா வருகிறது

புதுடில்லி, பெப்.2
ஐரோப்பிய உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம் இந்தியாவின் மூன்று நகரங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது.

'யூரோ 2012' உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஜுன் 8ஆம் திகதி தொடங்கி ஜுலை 1ஆம் திகதி வரை போலந்து மற்றும் உக்ரைய்ன் ஆகிய நாடுகளில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் ஐரோப்பிய வெற்றிக் கிண்ணம் உலகம் முழுதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது. சுற்றுப்பயணத்தின் போது இந்தியாவுக்கும் ஐரோப்பிய கிண்ணம் கொண்டு வரப்படுகிறது. ஐரோப்பிய கிண்ணம் இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறை.

இந்தியாவில் கொல்கத்தா, மும்பை, டில்லி, கோவா, கொச்சி, பெங்களூர் போன்ற நகரங்களில் ஏதாவது மூன்று நகரங்களில் பொதுமக்களின் பார்வைக்கு ஐரோப்பிய கிண்ணம் வைக்கப்பட உள்ளது. எனினும் இவற்றில் எந்த நகரத்தில் கிண்ணம் பார்வைக்கு வைக்கப்படவேண்டும் என்ற முடிவு ரசிகர்களின் தீர்மானத்துக்கு விடப்பட்டுள்ளது. இதன்படி தமக்குப் பிடித்த மூன்று நகரங்களுக்கு ரசிகர்கள் வாக்களிக்க முடியும். இணையத்தளம் மூலம் நடைபெறவுள்ள இந்த வாக்களிப்பில் வெற்றி பெறும் நகரங்களுக்கு ஐரோப்பியக் கிண்ணம் வருகை தரவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கார்ல்ஸ்பேர்க் நிறுவனம் செய்து வருகிறது. (ங)




இணையத்தளம் மூலம் நடைபெறவுள்ள வாக்களிப்பில் வெற்றி பெறும் நகரங்களுக்கு ஐரோப்பியக் கிண்ணம் வருகை தரவுள்ளது.

# சிங்கப்பூரில் பார்சிலோனா குழந்தைகளுக்குப் பயிற்சி

உலகின் முன்னணி உதைபந்தாட்ட அணியான பார்சிலோனா எதிர்வரும் மார்ச் மாதம் சிங்கப்பூரிலுள்ள தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்த உள்ளது.

'லாலீகா' கிண்ணச் சாம்பியனான பார்சிலோனா அணி உலகம் முழுவதிலும், சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல நாடுகளிலும் உள்ள குழந்தைகளுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி கொடுப்பது வழக்கம். இந்தப் பயிற்சி முகாமில் பார்சிலோனா அணி விளையாடும் முறையிலான பயிற்சிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படும். எதிர்வரும் மார்ச் மாதம் சிங்கப்பூர் குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி முகாமை பார்சிலோனா நடத்த உள்ளது.




மார்ச் 12ஆம் திகதி பயிற்சி முகாம் ஆரம்பமாகிறது. தொடர்ந்து மார்ச் 16ஆம் திகதி வரை இந்தப் பயிற்சி முகாம் நடைபெறும். காலை, மாலை இரு வேளைகளிலும் நடைபெறும். இந்த பயிற்சி முகாமில் 72 குழந்தைகளுக்குப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. முகாமில் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பங்கு பெறவுள்ளன. (ங)

# வாய்ப்புக் கிடைக்குமா?

புதுடில்லி, பெப்.2
17 வயதிற்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டியை நடத்தும் உரிமையைப் பெறுவதற்கான நடவடிக்கையில் இந்திய உதைபந்தாட்டச் சம்மேளனம் இறங்கியுள்ளது.

இந்த வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவில் போட்டிகள் நடைபெறும். போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் இந்திய அணி விளையாடுவதற்கும் தகுதிபெறும். இதன் மூலம் இந்தியாவின் கிரிக்கெட்டுக்கு நிகராக உதைபந்தாட்டத்தையும் பிரபலப்படுத்தமுடியும் என்று விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய அணிக்குள் உள்வீட்டு மோதல்?




வெளிநாட்டு மைதானங்களில் நடைபெறும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தொடர்ச்சியாக 8 தோல்விகளை சந்தித்துள்ளதால் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அணியின் மூத்த வீரர்களின் ஆட்டம் எடுபடாததால் அவர்களை நீக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தெரிவுக் குழுவினரும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய அணி இனிமேல் டெஸ்ட் போட்டிகளில் செப்ரெம்பர் மாதம் தான் விளையாடவுள்ளது. அதற்குள் அணியை மறுசீரமைப்பு செய்தாக வேண்டும் என்று பலமான கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதற்கிடையே டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனி விலக முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. எனினும் இது தொடர்பான அடுத்தக் கட்ட நடவடிக்கை செப்ரெம்பர் மாதமே தெரியவரும்.

தலைமைப் பதவியிலிருந்து விலகுவது பற்றி டோனி எடுத்த இந்த முடிவுக்குவ் சேவாக்குடன் ஏற்பட்ட கருத்து மோதலே காரணம் என்று கூறப்படுகிறது. வீரர்கள் தெரிவு, களத்தடுப்பு அமைக்கும் விதங்கள் என்பன போன்ற டோனியின் யுக்திகளுக்கு துணைத் தலைவராகச் செயற்படும் சேவாக் ஆட்சேபம் தெரிவித்ததாக சர்ச்சை எழுந்துள்ளது.

ஏற்கனவே முன்னாள் வீரர்கள் பலர் டெஸ்ட் போட்டியில் டோனியின் வியூகங்களை விமர்சித்து வரும் நிலையில் அணிக்குள்ளேயே சேவாக் எதிர்ப்பது பூதாகரமாக வெடித்துள்ளது. டோனி தலைமைப் பதவியிலிருந்து விலகினால் புதிய அணித் தலைவராகச் சேவாக் நியமிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இளம் வீரர் ஒருவருக்கு தலைமைப் பதவியை வழங்குவது இந்திய அணியின் எதிர்காலத்துக்கு உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியா தகுதி பெறும்

## பயிற்சியாளர் நம்பிக்கை

ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப் போட்டிக்கான வீரர்களை உடற்தகுதி, விளையாட்டுத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தான் தேர்வு செய்துள்ளோம்,'' என்று இந்திய ஹொக்கி அணியின் பயிற்சியாளர் நாப்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒலிம்பிக் தகுதிச் சுற்று ஹொக்கித் தொடர் பெப்ரவரி 18 முதல் 26ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இதற்காக 18 பேர் கொண்ட இந்திய ஹொக்கி அணி அறிவிக்கப்பட்டது. இதில் கப்டன் ராஜ்பால் சிங், அர்ஜுன் ஹாலப்பா, விக்ரம் பிள்ளை ஆகியோர் இடம் பெறவில்லை.

இது குறித்து நாப்ஸ் கூறியவை வருமாறு:

தற்போது, தேர்வு பெற்றுள்ள வீரர்கள், இப்போதைய விளையாட்டுத்திறன் உடற்தகுதி இவைகளை வைத்தே தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தகுதிச் சுற்றுப் போட்டியில் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். மேலும் உறுதியாக இந்திய அணி ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்று விடும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரின் போது, வீரர்களின் பலம், பலவீனம், தாக்கும் திறன் ஆகியவற்றை கவனித்துள்ளேன். எனவே வீரர்களின் குறைகளை சுட்டிக்காட்டி, அந்த தவறு மீண்டும் வராமல் இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளேன். நான் யாருக்கும் சாதகமாகவும், பாதகமாகவும் செயற்படவில்லை. அது என் வேலையும் இல்லை. அணிக்கு வெற்றியை தேடித்தரும் வீரர்கள் தான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ங)

# வடமராட்சி வலய சதுரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி,பெப்.02
மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம் வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சதுரங்க சுற்றுப் போட்டி முடிவுகளை வெளியிட்டுள்ளன.

இப்போட்டியில் வயது ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

**7வயது ஆண்**
எஸ்.நிவேரகன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, டெறிக் துஷ்யந்தன்-தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, க.அபிசன்-தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை

**8வயது பெண்**
ப.சாகித்யா, க.அம்சாயினி, வ.வைதேகி- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

**8வயது ஆண்**
ஆர்.விதுசன்-தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, சி.சுகன்ராஸ், சி.கஜந்தன்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

**9வயது ஆண்**
செ.சயானந்-தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, யெ.ரிசிகோபன்-புற்றளை மகாவித்தியாலயம், யோ.சாரோன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை

**10 வயது பெண்**
க.சாமந்தி- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, கு.ரிசிரேகா- தொண்டமானறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம், வே.யுலஸ்திகா- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**10வயது ஆண்**
சு.சுமன்- உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம், இ.தனுசன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, அ.கௌதம்பிரபாகர்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**11வயது ஆண்**
வ.உமைபாலன், பு.நிலக்ஷன், சி.ரமணன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**11 வயது பெண்**
யோ. சாம்பகா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சி.உமையாள்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இ.ராஜினி- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**12வயது பெண்**
கு.துஷ்யந்தி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வ.மாதுமை - பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ம.தயானி-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பெ. செரின் நிவேதா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

**12வயது ஆண்**
றா.கமல்ராஜ்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சு.சுதர்சன்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இ.உதயதர்சன், ம.அனோஜன் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**12வயது பெண்**
பா. பிரவீணா, ம.கௌதமி - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, நா. ரம்யா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**13 வயது பெண்**
பு.துளசிகா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க. தரணியா - வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், ம.கிருஷிகா- கரணவாய் மகாவித்தியாலயம்

**13வயது ஆண்**
தே.அஜித்ராஜ், இ.லோஜிதன், க.விதுஜன், சி.துளசிகன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**15வயது ஆண்**
அ.மிதுசன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பெ.லிவிங்டன்- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, சி.வித்தகன், ரதுர்ஷன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**17வயது பெண்**
வே.நிதர்சனா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, சி.மாதுளா, இ.விதுரா, அ.லாவண்யா- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி

**திறந்த போட்டி**
ச.நிமலராஜா, ஜெ.கபிலானந், சூ.கமலேசன்.

(உ-236)

# மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப். 2
பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் அருட் சகோதரி ஏ.எம்.ஜே.நீற்றா தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் வலிகாம உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) மு.நடராஜா பிரதம விருந்தினராகவும் உதைபந்தாட்டப் பயிற்றுநர் (சுவிற்ஸர்லாந்து) பொனிபஸ்டலஸ் சிறப்பு விருந்தினராகவும் பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்பணி ச.இயூஜின்பிரான்ஸிஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்கள்.

(உ-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்களால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் அபாயம்

## எச்சரிக்கிறது தேசிய பிக்குகள் முன்னணி

கொழும்பு, பெப்ரவரி 2

தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாகத் தமிழ் அரசியல்வாதிகளால் கோரப்படும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடவே செய்யும். இந்த அதிகாரங்களையும் ஒட்டுமொத்த 13 ஆம் திருத்தச் சட்டத்தையும் தூக்கி வீசிவிட்டு மூவின மக்களையும் சமமாக நடத்தும் திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேசிய பிக்குகள் முன்னணி கூறியுள்ளது.

இந்த முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் நேற்று இவ்வாறு 'உதயனு'க்குக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமன்றி 13 ஆம் திருத்தச் சட்டத்தையே எமது தேசிய பிக்குகள் முன்னணி முழுமையாக எதிர்க்கின்றது.

இந்தத் தீர்வுத்திட்டத்தின்மூலம் ஒருபோதும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

இந்த அதிகாரங்களைக் கேட்பவர்கள் தமிழ்மக்கள் அல்லர், தமிழ் அரசியல்வாதிகளே கேட்கின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினை காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் தொடர்புபட்டவையல்ல.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இப்போது தேவையாக இருப்பது மீள்குடியேற்றம், தொழில்வாய்ப்பு, கல்வி மற்றும் ஏனைய அபிவிருத்திகள் போன்றவையே.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தால் அனைத்துப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிடும். உண்மையில், தமிழர்களுக்கான தீர்வு என்பது மூவின மக்களையும் சமமாக நடத்துவதில் இருந்துதான் கிடைக்கும்.

தமிழ் மக்களுக்கென்று காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கும்போது சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் ஓரங்கட்டப்பட்டதாக உணர்வார்கள். இவ்வாறு எந்த இனத்தையாவது தனிப்பட்ட முறையில் கவனித்தால் மற்றைய இனங்கள் அதிருப்தியடையும். இது காலப்போக்கில் பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் ஆகிய மூன்று இனங்களும் சமமாக நடத்தப்படும்போதுதான் நாட்டில் உண்மையான சமாதானம், பொருளாதார அபிவிருத்தி போன்றவை ஏற்படும். இதைச் செய்ய அரசு முன்வரவேண்டும் - என்றார்.(த-சி)

## யாழ். நகரப் பகுதியில் ஜனாதிபதியின் 'கட்அவுட்'

யாழ். மாவட்டத்துக்கு எதிர்வரும் 6ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகைதருவதை முன்னிட்டு ஜனாதிபதியின் புகைப்படம் தாங்கிய பதாகைகள் யாழ். நகரின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இதனை முன்னிட்டு யாழ். மத்தியகல்லூரிச் சுற்றாடலில் உள்ள வீதிகள் நான்கு தினங்களுக்கு முன்னர் அவசர அவசரமாக 'காப்பெற்' போடப்பட்டன. நேற்றைய தினம் வேம்படிச் சந்திவரையுள்ள பருத்தித்துறையின் எஞ்சிய பகுதிகளும் 'காப்பெற்' இடப்பட்டது.

இது ஒருபுறம் இருக்க யாழ். நகரின் பிரதான வீதிகள் பலவற்றிலும் குறிப்பிட்டளவு தூர இடைவெளியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் படம் பொறிக்கப்பட்ட 'கட்அவுட்டுகள்' வைக்கப்பட்டு வருகின்றன. 'நீடூழி வாழ்க' என்ற வாசகம் மட்டும் பொறிக்கப்பட்டு ஜனாதிபதியின்படத்துடன்பிரதான வீதி கரையோரங்களில் நடப்பட்டுள்ளன. (த-15)

## கசிப்பு வைத்திருந்த வவுனியா வாசி கைது

உரும்பிராயில் கசிப்பு வைத்திருந்த வவுனியா நபருக்கு யாழ். நீதிவான் மா.கணேசராஜா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அதன்போதே அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## செட்டிகுளத்தில் கைக்குண்டுடன் ஒருவர் கைது

வவுனியா,பெப். 2

வவுனியா - செட்டிக்குளம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு அருகில் வைத்து கைக்குண்டுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் நேற்று அதிகாலை 05.30 அளவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் சிறையில் இருந்து தப்பிச் சென்றவர் என தெரிவிக்கப்படுகிறது.செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமெரிக்காவுக்கு ஒருபோதும் இலங்கை கட்டுப்படாது

கொழும்பு, பெப்.2

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளபோதிலும் இலங்கை அதற்குக் கட்டுப்படாது. இலங்கை ஈரானிடமிருந்து தொடர்ந்தும் மசகு எண்ணெயைப் பெற்றுக்கொள்ளும் என்று அமைச்சர் பௌஸி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது நாடு 90 சதவீதத்திற்கும் அதிகமான மசகு எண்ணெயை ஈரானிடமிருந்தே பெறுகின்றது. அந்தநாட்டின் மசகு எண்ணெயைத்தான் சப்புகஸ்கந்தையில் உள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தால் சுத்திகரிக்க முடியும்.

இந்த நிலையில், நாம் வேறு நாடுகளிடமிருந்து மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்யமுடியாது. ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளபோதிலும் அத்தடைகள் எமது நாட்டைக் கட்டுப்படுத்தாது. நாம் தொடர்ந்து ஈரானிலிருந்தே மசகு எண்ணெயைப் பெறுவோம்.

ஏழு மாதகாலக் கடன் சலுகையை ஈரான் இலங்கைக்குத் தருகின்றது. இந்த உதவியை வேறெந்த நாடு செய்யும்? ஈரானிலிருந்து மசகு எண்ணெய் பெறுவதில் எமக்கு எந்தச் சிரமமும் இல்லை. வேறு நாடுகளிடம் செல்லவேண்டிய தேவையும் இல்லை - என்றார். (த-சி)

## சங்கத்தில் மோசடி மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.2

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 21 இலட்சத்து 74ஆயிரத்து 500 ரூபாவுக்கு சீனியைக் கொள்வனவு செய்து மோசடி செய்த ஐவரில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். அவ்விருவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

2009 டிசெம்பரில் நடைபெற்ற இந்த மோசடி குற்றச்சாட்டில் சங்க ஊழியர் உட்பட ஐவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்களில் இருவர் மட்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வழக்கு நடைபெற்று வருகிறது.

மிகுதி மூவரையும் எதற்காக இதுவரை கைது செய்யவில்லை என நீதிவான் கேட்டதையடுத்து மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். மற்றைய ஒருவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜர்ப்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டது. வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.(த-4)

## நாவலர் வீதியில் விபத்து வாகனம் மோசமாகச் சேதம்

யாழ்ப்பாணம், பெப்.2


யாழ். நாவலர் வீதியில் ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றைய தினம் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட 'படி' ரக வாகனம் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும்போதே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்தில் இருந்த தொலைபேசிக் கம்பங்களை மோதி உடைத்து விபத்துக்குள்ளானது.

இதனால் வாகனத்தின் முன்பகுதி மோசமாகச் சேதமடைந்துள்ளது. வாகனத்தின் முன் பக்கத்தில் சாரதிக்கு அருகில் அமர்ந்து வந்தவர் இதில் காயத்துக்குள்ளானார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-17)



இந்தியா சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியை நேற்றுச் சந்தித்துப் பாதுகாப்பு விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடினார்.

## 'பாபுல்' விற்றவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், பெப். 2

'பாபுல்' போதைவஸ்தை தன் வசம் வைத்திருந்து விற்பனை செய்து வந்த இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

கொக்குவில் பகுதியில் இவ்வாறு கடையொன்றில் வைத்து விற்பனை செய்து வந்தபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார். அவரை நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

**தேவை**

TOYOTA, VIZT, BALTA வகைக் கார் உடனடியாக விலைக்குத் தேவை. லீசிங் முறையில் இருந்தாலும் ஏற்கத்தக்கது.

தொடர்பு: 075 8255439

**கண்ணீர் அஞ்சலி**



எமது சங்கத்தின் தலைவரும் மூத்த உறுப்பினரு மான

மு.சிவ சுந்தரலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**கந்தன்முத்தையா**

அவர்கள் காலமான செய்தி ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-8762)

தகவல்:

வலி.கிழக்கு கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கம்.

## 24 விடுதலைப் புலிகளுக்கு விளக்க மறியல்

கொழும்பு,பெப் 2

முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 24 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த 24 பேரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால்நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின் பின் அகதி முகாமில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக நீதிமன்றுக்கு அறிக்கை ஒன்றை சமர்பித்த இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டதாக இரகசிய பொலிஸார் குறிப்பிட்டனர்.

தடுப்புக் காவல் நிறைவடைந்துள்ளதால் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு இரகசிய பொலிஸார் நீதிமன்றை கேட்டுக் கொண்டனர்.இந்த கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் இவோன் பெனாண்டோ, சந்தேகநபர்கள் 24 பேரையும் மார்ச் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 105 குடும்பங்கள் நாளை கோம்பாவிலில் குடியமர்வு

வவுனியா, பெப். 2

கதிர்காமம் முகாம் மற்றும் ஆனந்தக்குமாரசுவாமி முகாம்களைச் சேர்ந்த சுமார் 105 குடும்பங்கள் நாளை வெள்ளிக்கிழமை புதுக் குடியிருப்பு கோம்பாவில் திப்பிலிப் பகுதிகளில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளிவாய்க்கால் தெற்கப் பகுதியைச் சேர்ந்த மக்களே இவ்வாறு புதுக் குடியிருப்பு கோம்பாவில் திப்பிலி பகுதிகளில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதேவேளை,

ஆனந்தகுமாரசுவாமி முகாமில் உள்ள மக்கள் தம்மை சொந்த இடங்களில் குடியமர்த்துமாறும் இந்த தற்காலிக இடத்தில் குடியேறமாட்டோம் என்றும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். (த-319-400)

## பாதுகாப்புப் பற்றி ஆராய புதுடில்லியில் கோத்தபாய

» 1

...ப்புச் செயலர் கோத்தபாய சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தியப் பாதுகாப்புச் செயலர் சசிகாந்த் சர்மா மற்றும் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ஆகியோரின் தலைமையில் பாதுகாப்புக் கலந்துரையாடல் நடைபெறுகிறது. பாதுகாப்புச் செயலருடன், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் மற்றும் இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பேச்சுகளில், இந்திய பாதுகாப்புக் கல்லூரிகளிலும், ஏனைய நிறுவனங்களிலும் இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட தற்போதுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்த கலந்துரையாடப்படவுள்ளதாக இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ள இலங்கை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். (த)

## பறவைக் காய்ச்சல் அபாயம் குருநாகலில்

» 1

அடுத்து இன்று அங்கு சென்ற 30 சுகாதார அதிகாரிகள் அங்கிருந்த 6000 கோழிகளையும் அழித்தனர்.

எனினும் இவை பறவைக் காய்ச்சலை ஏற்படுத்தும் H5N1 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்று மிருக உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் H5N1 வைரஸ் தொற்று பதிவாகவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பறவைக்காய்ச்சல் காரணமாக உலகில் 330 பேர் மரணமாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## இலங்கையைக் காப்பாற்ற மாலைதீவு கடும் முயற்சி

» 1

ரத்தில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு மாலைதீவு இணங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது. இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின்தற்போதைய நிலைமை, முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு, புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகள் செயற்றிட்டம், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உட்பட முக்கியமான சில காரணிகளைப் பயன்படுத்தியே மேற்குலக நாடுகளுடன் இலங்கை விவகாரம் தொடர்பில் மாலைதீவு பேசுவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரும் பட்சத்தில் அதை பெரும்பான்மையான ஆதரவோடு தோற்கடிக்கும் நோக்கிலேயே மாலைதீவு செயற்படுகின்றது என்றும், மேற்குலகுடன் இதுதொடர்பில் பூர்வாங்க பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், மேற்குலக நாடுகள் தமது நிலைப்பாட்டை இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பதுடன் இலங்கைக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்த வண்ணமேயுள்ளன.

அதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜெனிவாத் தொடரில் இலங்கைக்கு ஆதரவாக செயற்படுமாறு மேற்குலகிடம் மாலைதீவு விடுத்த வேண்டுகோளை அந்தநாடுகள் நிராகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-சி)

## வயோதிபர் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.2

வடமராட்சி கரவெட்டி கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது:

வடமராட்சி கரவெட்டி கிழக்குப் பகுதியில் வீட்டில் யாரும் இல்லாத சமயம் தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபரின் சடலம் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் வீடு திரும்பிய அவரது மனைவி கணவன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்படுவதை கண்டு பதறியுள்ளார். இதனை அடுத்து நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். இதனையடுத்து பருத்தித்துறை வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் கரவெட்டி கிழக்கு சாத்தியத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த கந்தையா கதிரவேலு (வயது -77) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

## மரத்தில் இருந்து விழுந்து குடும்பஸ்தர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், பெப். 2

கோண்டாவில் பகுதியில் மரம் தறித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று நண்பகல் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியில் மரம் அரிந்து அதனை தறித்துகொண்டிருந்தபோதே அவர் தவறி வீழ்ந்துள்ளார். இதில் படுகாயங்களுக்கு உள்ளான அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும் நேற்று மாலை 6.15 மணியளவில் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இணுவில் கிழக்கு காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு சற்குணம் (வயது 42) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார். (த-4-319)

## நீர்வேலி கந்தனைப் புரட்டி பஞ்சலோகத் தகடு திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.2

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் திருடர்கள் நேற்று முன்தினம் இரவு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தின் யன்னல் கம்பிகளை உடைத்து நுழைந்த திருடர்கள் மூலஸ்தானத்தில் இருந்த முருகப் பெருமான் விக்கிரகத்தை புரட்டி அதற்குள் இருந்த பஞ்சலோக இயந்திரத் தகட்டை களவாடியுள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஆலயத்தின் உண்டியலையும் திருடர்கள் விட்டு வைக்கவில்லை. அந்த உண்டியலையும் உடைத்து அதற்குள் இருந்த ஒரு தொகைப் பணத்தையும் களவாடிச் சென்றுள்ளனர்.

ஆலயத்தில் இருந்த பித்தளைப் பொருள்கள் சிலவும் களவு போயுள்ளதாக நிர்வாகத்தினர் கூறுகின்றனர். சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூல விக்கிரகம் புரட்டப்பட்டதை அடுத்து ஆலயப் பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. பாலஸ்தானம் செய்யப்பட்ட பின்னரே பூசை வழிபாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (உ-17)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.2

ஹன்ரர் வாகனமும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சி.தில்லைமணி (வயது -52), ஆறுகால்மடத்தைச் சேர்ந்த சைக்கிளில் சென்ற பொ. சிவராசா (வயது 60) ஆகிய இருவருமே காயமடைந்தனர். எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிட வீதியின் கரைக்கு மோட்டார் சைக் கிளை நகர்த்தியபோதே இந்த விபத்து ஏற்பட்டது. (த-4)

## ஈரான் மீதான தடை இலங்கைக்குப் பாதிப்பு

» 1

செய்யாது.

ஏனெனில், ஈரானிலிருந்து 35 சதவீதமான எண்ணெயை இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இறக்குமதி செய்கின்றன. ஏனைய சில நாடுகளும் கணிசமானளவுகொள்வனவு செய்கின்றன.

பொருளாதாரத் தடை ஈரானுக்கு சிறியளவிலான தாக்கங்களையே ஏற்படுத்தும். ஈராக்குக்கு நேர்ந்த நிலை ஈரானுக்கு ஏற்படாது என்பதுடன், அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தியையும் பாதிக்காத அளவு இந்தியாவும், சீனாவும் நடந்துகொள்ளும் என அந்நாட்டு நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

ஈரான் மீதான பொருளாதாரத்தடை உலக சந்தையில் எரிபொருள்களின் விலையை உயர்வடையச் செய்யக்கூடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டாலே அது இலங்கைப் பொருளாதாரத்தையும் பாதிக்கும் - என்றார்.

(த-சி)

## குறிப்பிட்ட திகதிக்கு முன்னரே அமெரிக்காவுக்கு ஓடுகிறது அரசு

» 1

ணையை ஆதரிப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ள நிலையில், அந்த முடிவை மாற்றியமைக்கும் நோக்கிலேயே ஜெனிவாத் தொடருக்கு முன்னரே இலங்கை உயர்மட்டக்குழு அங்கு செல்வதற்கு எத்தனிக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மனிதஉரிமைகள் செயற்றிட்டம் உட்பட முக்கியமான சில விடயங்கள் குறித்து அமெரிக்காவுக்குத் தெளிவுபடுத்தி அதன் நிலைப்பாட்டை மாற்றும் நோக்கிலேயே தமது விஜயத்தை இலங்கைக்குழு துரிதப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது என இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவித்தாலும், அமெரிக்கா இறுதிவரை உறுதியாகவிருக்கும் என மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நல்லிணக்கப்பாடு, கடப்பாடுகள், வடமாகாண சபைத்தேர்தல் உட்பட முக்கியமான சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வருமாறு கோரி அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் பீரிஸுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## புலிகளின் அரசியல் கட்சிப் பதிவை நீக்கியது தேர்தல் திணைக்களம்

» 1

பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலை புலிகள் மக்கள் முன்னணி 1989ஆம் ஆண்டு விடுதலை புலிகளின் அரசியல் பிரிவாக உருவாக்கப்பட்டது. விடுதலை புலிகளின் பிரதி தலைவரான மாத்தையா என்றழைக்கப்படும் கோபாலசுவாமி மகேந்திரராஜா இக்கட்சியின் தலைவராகவும் யோகரட்ணம் யோகி பொதுச் செயலாளராகவும் செயற்பட்டனர். இக்கட்சியின் சின்னமாக புலி காணப்பட்டது.

1989ஆம் ஆண்டு ஒக்ஸ்ட் மாதம் நடைபெற்ற அனைத்து கட்சி மாநாட்டில் விடுதலை புலிகள் மக்கள் முன்னணி பார்வையாளராக மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவினால் அழைக்கப்பட்டது.இக்கட்சி 1990 இல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அரசியல் செயற்பாடுகளிலிருந்து வாபஸ் பெற்றது.

இக்கட்சியின் முதலாவது தேசிய மாநாடு 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி தொடக்கம் மார்ச் 1ஆம் திகதி வரை வாகரையில் இடம்பெற்றது. சுமார் 15,000 பேர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் கட்சியின் விஞ்பானமும் யாப்பும் அங்கீகரிக்கப்பட்டது.

இதேவேளை, 2000ஆம் ஆண்டளவில் நாட்டின் தேசிய அரசியலில் நுழைவதற்கு பாலமாகவே தேசிய ஐக்கிய முன்னணியை மறைந்த அமைச்சர் அஷ்ரப் ஸ்தாபித்ததாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

சிங்கப்பூருக்கான இலங்கை தூதுவரும் மறைந்த அமைச்சர் அஷ்ரபின் மனைவியுமான பேரியல் அஷ்ரப்பின்னர் அக்கட்சியின் தலைவராக செயற்பட்டார்.

புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளிலிருந்து பிரிந்த குழுவினரே 1987ஆம் ஆண்டு ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியை ஸ்தாபித்தனர்.கே. பத்மநாபவை தலைவராக கொண்ட ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவுத் தலைவராக டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டார்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியை புளொட் பரந்தன் ராஜனுடன் இணைந்து ஸ்தாபித்தா பிப்பதில் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியிலிருந்து பிரிந்த குழுவினருக்கு டக்ளஸ் தேவானந்தாவே தலைமை தாங்கினார்.

இந்தப் புதிய கட்சி விடுதலைப் புலிகளின் அன்றைய செயற்பாடுகளை எதிர்கொள்வதற்கு இந்திய சமாதானப் படையினருக்கு ஆதரவளித்தது. பின்னர் அக்கட்சியிலிருந்து பிரிந்த டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியை ஸ்தாபித்தார். (த)

## ஜெனிவாவில் சர்வதேசத்துக்கு பதிலடி கொடுக்க நாம் தயார்

» 1

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சில இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு திட்டமிட்டுள்ளன. இந்தப் பிரேரணையைக் கண்டு இலங்கை ஒருபோதும் பயப்பிடவில்லை. மாறாக அதனை எப்படி எதிர்கொள்வது என்ற வியூகங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம். ஜெனிவாவில் அந்தப் பிரேரணைக்கு மிகச் சரியான பதிலை நாம் வழங்குவோம். நல்லிக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனிவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப் போவதில்லை. ஆயினும் அறிக்கை தொடர்பில் சர்வதேசத்தினால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு நாம் அங்கு பதிலளிப்போம். மேற்கு நாடுகள் சிலவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை விமர்சனம் செய்து வருகின்றன. ஆயினும் அதில் அடங்கியுள்ள பல நல்ல விடயங்களை கண்டுகொள்ளவில்லை. நாம் என்ன செய்தாலும் அவர்களுக்குச் சந்தோசம் ஏற்படாது. அது எனக்குத் தெரியும். அதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது. உலக நாடுகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் மகிழ்விப்பதற்காக நாம் ஒரு போதும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. எமது மக்களின் - நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டே நாம் தீர்மானங்களை மேற்கொள்வோம் - என்றார் அவர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனத்திலிருந்து தவறிவிழுந்த ஐந்து வயதுச் சிறுமி படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.02

வீதியில் சென்று கொண்டிருந்த ஹை யஸ் வாகனத்தில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் சிறுமி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுழ திக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது-

திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற் காக ஹையஸ் வாகனத்தில் கொக்குவிலில் இருந்து செம்மணி வீதியூடாக நாவற்குழி நோக் கிப் பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தில் இருந்து தவறிவிழந்த சிறுமி ஒருவர் படுகாயம டைந்த நிலையில் யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை 5 மணியளவில் செம்மணி வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஜீவா லோசினி (வயது-5) என்ற சிறுமியே இவ்வாறு படுகாயமடைந்தவர் ஆவார்.

வாகனத்தின் கதவுக் கைபிடியில் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த போது கதவு திடீ ரெனத் திறந்ததால் அவர் விழுந்து படுகாயமடைந் ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-319)

## திருட்டுப்போன சைக்கிள்கள் மீட்பு

திருடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன மானிப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நவாலிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களையும் கைது செய்துள்ள பொலி ஸார், அவர்களை எதிர்வரும் 06 ஆம் திகதி மல் லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி மல்கம் பெல், உதவிப் பொறுப்பதிகாரி சந்திரபாலா மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் களான அரிச்சந்திரா, ஜானக ஆகியோரைக் கொண்ட குழுவே, திருட்டுப்போன பொருள் களை மீட்டுள்ளது.

(உ -29)

சட்டமாணிக்கற்கை
யாழ்ப்பாணத்தில்
முதல் தடவையாக
PRINCE ACADEMY வழங்கும்
L.L.B(UK)

* இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம்
* முதல் 100 மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
* ஆகக் குறைந்த தகைமை க.பொ.த (உயர்தரம்)2S

நாளை நீங்களும் சட்டத்தரணியாகலாம்

வழிகாட்டிக் கருத்தரங்கும் பதிவுகளும்
திகதி: 04.02.2012, 05.02.2012
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்
பி.ப. 2.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை
இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புகள் பிரிவு)
போதனா வைத்திய சாலை முன்பாக
இல.464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0775 949 272, 0777 246 723

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Quick Learning Course (Spoken English with Grammar) 1 1/2 Month
Diploma in English 2 1/2 Month
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch - 1: 05.02.2012 09.00 -12.00
Batch - 2: 06.02.2012 03.00 -05.00
Batch - 3: 08.02.2012 09.00 -12.00
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

ஸ்ருடியோ இடமாற்றம்



447, ஸ்ரான்லி றோட்டில் இயங்கி வந்த "குமரன் போட்டோ" தற்பொழுது 124, பலாலி றோட்டில் (இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் வீதிக் கும் இடையில்) புதுப்பொலிவுடன் இயங்கி வருகிறது என்பதனை அன்பார்ந்த வாடிக்கையாளருக்கு தெரியப் படுத்துகின்றோம்.
உரிமையாளர் குமரன்
(13772) T.P.: 021 222 4833, 0777 222601

Multimedia துறையிலே நீங்களும் வல்லுனராக விரும்புகின்றீர்களா?
உங்களுக்காகவே விஷேட கலந்துரையாடல்!




நீங்கள்......
• வீடியோ எடிட்டிங் துறையில் வல்லுனராக வேண்டுமா?
• உங்கள் Studio ல் நவீன தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா?
• குறும்படம் தயாரிக்கும் ஆர்வம் உள்ளவரா?
• கட்டிட நிர்மாணத்துறையில் 3D Animation Technology ஐ புகுத்த விரும்புகின்றீர்களா?
• நீங்கள் எடுக்கும் வீடியோக்களை நீங்களே சிறந்த முறையில் Edit செய்ய விரும்புகின்றீர்களா?
• ஊடகத்துறை சார்ந்த மாணவரா?
• O/L, A/L பரீட்சையின் பின் Multimedia துறையிலே வேலை தேடுபவரா?
நீங்கள் எத்துறை சார்ந்தவராக இருப்பினும் Multimedia துறையிலே உங்கள் திறமைகளை வளர்த்து கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இடம் : IIS பிரதான மண்டபம்
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் [பெருமாள் கோவிலுக்கு அருகில்]
காலம் :- 05.02.2012 மாலை 3.00மணி
மேலதிக விபரங்களுக்கு :- 0779688006
பகுதிநேர வகுப்புகள் பயனுடையவைகள்

வெதுப்பக பணியாளர் தேவை
கிளிநொச்சி ஆனந்தபுரம் நாகதம்பிரான் ஆலய வீதியில் இயங்கிவரும் வெதுப்பகம் ஒன்றுக்கு பணியாளர் (வாஸ்) உடன் தேவை.
T.P.: 0772 767 111

THE SCIENCE POINT
Kannathiddy, Jaffna.
A/L 2014 புதியபிரிவுகள்
தமிழ் மொழி மூலம் wed.thur.- 5-6pm இன்று ஆரம்பம்.
ஆங்கில மொழி மூலம் mon- 5-6pm wed- 4-5pm
A/L 2013
INORGANIC
sat,sun.- 5.30-6.30pm
ஆரம்பம் 4/2 சனி. 5.30
A/L 2012
அயன்சமநிலை
sat,sun.- 12.15-1.15
ஆரம்பம் 5/2 ஞாயிறு 12.15
REPEAT BATCH பிரிவு (II)
GENERAL PAPER இன்று ஆரம்பம்.12.30
mon, wed fri-12.30
By- அன்பு

G.A.Q. & B.A.
(யாழ்ப்பாணம், பேராதனை)
தமிழ்
சிவலிங்கராஜா
(இளைப்பாறிய தமிழ்த்துறைப் பேராசிரியர்)
T. ஜீவானந்தன் (B.A. Hons)
பொருளியல்
வரதராஜன்
(முன்னாள்விரிவுரையாளர்)
மெய்யியல்
S.S. மனோகரன்
வரலாறு
S.K. கமலநாதன்
(MA Hist)
விக்கி
(BA Hist Hons)
அரசியல்
சுகாஸ், மனோகரன்
(L.L.B)
இந்துநாகரிகம்
கே.எஸ். ரமணன் (B.A. Hons)
அடிப்படைப் புள்ளிவிவரவியல்
த. தவசேகர் (B.Sc)
புவியியல்
S. குமரன் (B.A.)
விரிவுரைகள் நடைபெறுகின்றன
GAQ (பேராதனை)
Seminar
ஆரம்பம் - பெப்ரவரி 11
BEACON
(பட்டப்படிப்புகள் பிரிவு)
(வெலிங்டன் சந்தி)

வன்னியில் விசா ஆலோசனையில்
புதிய அத்தியாயம் நேற்று ஆரம்பம்



திசைகாட்டி பொது முகாமையாளர் M.M. வின்சலா கிளிநொச்சிக்கான கிளையினை ஆரம்பித்து வைக்கின்றார்.



திசைகாட்டி யாழ். முகாமையாளர் A. பிரவீனா மங்கள விளக்கேற்றல்.



முதலாவதாக 273/1, பரந்தன் வீதி எனும் முகவரியைச் சேர்ந்த துவாரகாவுக்கு திசைகாட்டி உதவி முகாமையாளர் T.சர்மிளா விசா ஆலோசனை வழங்குதல்.

ஆஸ்திரேலியா, லண்டன், ஜேர்மன் விசா
ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி [பிறைவேற்] லிமிட்டெட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
0214914527

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org